REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/Thinakaran.lk /ThinakaranLK

# தினகரன்
THINAKARAN

2022 நவம்பர் 16 புதன்கிழமை
1932 - 2022

வரு. 90 இல. 271 | Wednesday 16, November, 2022 | 20 பக்கங்கள் | 50/-

## சிறுவர், பெண்களுக்கு சமூகத்தில் பிரச்சினையா?

**அறிவிக்க 02 தொலைபேசி எண்கள்**



சிறுவர் மற்றும் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண இரண்டு தொலைபேசி இலக்கங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

சிறுவர், பெண்கள் விவகாரங்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் கீழ் செயற்படும் சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை, மகளிர் 06

**ஆஸி., கனடா ஆகிய நாடுகளுக்கு**

## மாணவர் விசா பெற்றுத்தருவதாக தெரிவித்து பாரிய நிதி மோசடி

**போலி முகவர் ஒருவர் கைது**

அவுஸ்திரேலியா மற்றும் கனடாவில் மாணவர்கள் கல்வி கற்பதற்கு விசாவை Student Visa பெற்றுத் தருவதாக கூறி மோசடியில் ஈடுபட்ட ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். கொழும்பு மோசடி விசாரணைகள் காரியாலய அதிகாரிகள் கடந்த (14) இவரைக் கைது செய்தனர். கல்வி ஆலோசனை முகவர் நிலையமொன்றை நடத்தி வந்த இவர், பாரிய நிதி மோசடியில் ஈடுபட்டுள்ளார்.

கடந்த 2010 ஆம் ஆண்டு தொடக்கம் இவர், இம்மோசடி யில் ஈடுபட்டு வந்துள்ளமை தெரிய வந்துள்ளது.

இவர் மீது 33 பேர் பல்வேறு பொலிஸ் நிலையங்களில் புகார் 06

**தகுதியற்ற பலரும் உயர் பதவிகளில் நியமனம்**

## பொருளாதார நெருக்கடிக்கு காரணம் கூறும் நீதி அமைச்சர்

**இருவரது நியமனம் குறித்தும் சபையில் சாடல்**



**லோரன்ஸ் செல்வநாயகம்**

அரசியல் ரீதியான பரிந்துரைகளுடன் தகுதியற்றவர்கள் அரச உயர் பதவிகளுக்கு நியமிக்கப்பட்டமையே நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு முக்கிய காரணமென நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ பாராளுமன்றத்தில் தெரிவித்தார். அந்த வகையில் நாட்டின் பொருளாதார பாதிப்புக்கு 06

## மின்சாரம் கொள்முதல் கொள்கை விரைவில்

**தேசிய சபை உப குழுவில் ஆராய்வு**



மின் கொள்முதல் கொள்கையை விரைவாக அறிமுகப்படுத்துவதன் அவசியத்தை தேசியக் கொள்கை தொடர்பான குறுகிய மற்றும் நடுத்தர கால திட்டங்களைக் கண்டறிவதற்கான தேசிய பேரவை உப குழு, விவாதித்துள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தலைமையில் அண்மையில் நடைபெற்ற தேசிய சபை உபகுழுவில் இந்த விடயம் விவாதிக்கப்பட்டது.

குறுகிய, நடுத்தர மற்றும் நீண்ட கால கொள்கைகளை 06

**யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, பதுளை:**

# நான்கு மாவட்டங்களுக்கு ஐ.நா வினால் யூரியா உரம்

**விவசாய அமைச்சினால் இவ்வாரம் பகிர்ந்தளிக்க நடவடிக்கை**

**ஐ.நா உணவு விவசாய ஸ்தாபனத்தினால் 780.1 மெற்றிக் தொன் யூரியா உரம் விவசாய அமைச்சிடம் கையளிக்கப்பட்டது**

ஐக்கிய நாடுகளின் மத்திய அவசர நிவாரண நிதியத்தின் (UNCERF) ஊடாகக் கொள்முதல் செய்யப்பட்ட 780.1 மெற்றிக் தொன் யூரியாவை, ஐக்கிய நாடுகளின் உணவு விவசாய ஸ்தாபனம் (FAO)நேற்று விவசாய அமைச்சிடம் கையளித்தது.

வறுமையால் பாதிக்கப்பட்டுள்ள யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, பதுளை ஆகிய நான்கு மாவட்டங்களில் அரை ஏக்கருக்குக் குறைவான சிறிய காணிகளில் நெற்செய்கை மேற்கொள்ளும் 15,619 விவசாயிகளுக்கு தலா 50 கிலோ வீதம் இந்த யூரியா உரம் பகிர்ந்தளிக்கப்படும். விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்படும் இந்த உரத்தின் விநியோகம் விவசாய அமைச்சு மற்றும் கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் உதவியுடன் இவ்வாரத்தில் ஆரம்பமாகும்.

அடையாளம் காணப்பட்ட மாவட்டங்களில், மிகமோசமாகப் பாதிக்கப்பட்ட விவசாயிகள் சமீபத்திய பொருளாதார நெருக்கடி, உர வகைகளுக்கான பற்றாக்குறை என்பவற்றிலிருந்து மீட்சிபெற உதவுவதே FAO, 06




**183 எம்பிக்களின் நிதியுதவியுடன்**

## மறைந்த அமரகீர்த்தி எம்.பியின் குடும்பத்தாருக்கு நன்கொடை



**ஜனாதிபதி ரணிலினால் வழங்கி வைப்பு**

அகால மரணமடைந்த பாராளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி தென்னகோனின் குடும்பத்தவர்களுக்கென, எம்பிக்கள் நன்கொடையாக வழங்கிய 90,25,000 ரூபாவை, அவரது மனைவியிடம் ஜனாதிபதி 06



**அமெரிக்க செனட் சபையின் வெளிநாட்டு உறவுகள் குழு** 02

**வடக்கில், தனியார் சிலர் காணிகளை இழக்கும் நிலை**

## காணிகளை உறுதிப்படுத்தினால் தேவையான உதவிகளை வழங்குவேன்

**வடக்கு ஆளுநர் ஜீவன் அதிரடி அறிவிப்பு**



யாழ்ப்பாணத்தில் தமது காணிகளை உறுதிப்படுத்தும் சந்தர்ப்பத்தில் அவர்களுக்கு உதவுவதற்கு ஆளுநர் செயலகம் தயாராக இருப்பதாக வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்தார். இதுவரை 2,749 பேரின், தனியார் காணிகள் அடையாளப் படுத்தப்பட்டுள்ளது. எஞ்சியோரும் தமது காணிகளை உறுதிப்படுத்தினால் 06

**பொலிஸாருக்கு இடையூறு ஏற்படுத்திய**

## ஹிருணிகா உள்ளிட்ட 15 பேருக்கும் பிணை



**பெப்ரவரி 13 இல் வழக்கு விசாரணை**

ஜனாதிபதியின் இல்லத்துக்கருகில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு, பொலிஸாருக்கு இடையூறு ஏற்படுத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட முன்னாள் 06

**எந்தவொரு செல்வாக்குக்கும் அடிபணியாது**

## உள்ளூராட்சி சபைத் தேர்தல் குறித்த நேரத்தில் அறிவிப்பு

**தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் புஞ்சிஹேவா**

எந்தவொரு செல்வாக்குக்கும் அடிபணியாமல் குறிப்பிட்ட நேரத்தில் உள்ளூராட்சி சபைத் தேர்தலை அறிவிக்க உள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா நேற்று (15) 06



## பலாலி விமான நிலைய சேவை இவ்வருட இறுதிக்குள் உறுதி



**யாழ். சென்ற இராஜாங்க அமைச்சர் பிரேமலால் தெரிவிப்பு**

யாழ்ப்பாணம், பலாலி விமான நிலைய சேவைகள் இவ்வருட இறுதிக்குள் ஆரம்பிக்கப்படுமென துறைமுகங்கள் விமான சேவைகள் இராஜாங்க அமைச்சர் பிரேமலால் ஜயசேக்கர தெரிவித்தார். 06

## ஒருவருட காலத்தில் தமிழர் பிரச்சினைக்கு தீர்வு



**ஜனாதிபதியின் கூற்றுக்கு TNA பாராளுமன்றத்தில் வரவேற்பு**

**லோரன்ஸ் செல்வநாயகம்**

வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு ஒரு வருட காலத்துக்குள் தீர்வு காணப்படுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வழங்கியுள்ள வாக்குறுதியை வரவேற்பதாகவும் அதற்கு முன்னோடியாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தொல்பொருள் 06

**தோட்டத் தொழிலாளர் சம்பள அதிகரிப்பு**

## வரவு - செலவு திட்டத்தில் திருத்தம் செய்தல் அவசியம்

**சபையில் வடிவேல் சுரேஷ் MP கருத்து**

மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பு தொடர்பில் கவனம் செலுத்தி வரவு செலவுத் திட்டத்தில் திருத்தம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென, வடிவேல் சுரேஷ் எம்பி பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இம்முறை வரவு செலவுத் 06



## பால்மாவுக்கு தட்டுப்பாடு வரும்

**இறக்குமதியாளர் சங்கம் எதிர்வு கூறல்**

இறக்குமதி செய்யப்படும் பால் மாவுக்கு மீண்டும் பற்றாக்குறை ஏற்படுவதற்கான நிலை உருவாகியுள்ளதாக பால் மா இறக்குமதியாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

ஏற்றுமதி, இறக்குமதி கட்டுப்பாட்டாளரின் செயற்பாடுகளே இதற்குக் காரணமெனவும் பால்மா இறக்குமதியாளர்கள் சங்கத்தின் தலைவர் லக்ஷ்மன் வீரசூரிய நேற்று தெரிவித்துள்ளார். 06



**உணவு பாதுகாப்பு தொடர்பிலான**

**ஜனாதிபதியின் ஆலோசகராக சரத் வீரசேக்கர எம்.பி நியமனம்** 02

**O/L பரீட்சை முடிவு இம்மாத இறுதிக்குள்** 02

**அதிவேக நெடுஞ்சாலையில் ஈடுபடும்**

## பயணிகள் பஸ் சேவை பணிப்புறக்கணிப்பில்

**20 ஆம்திகதி முதல் அமுலாக்கத் திட்டம்**

அதிவேக நெடுஞ்சாலைகளில் சேவையில் ஈடுபடும் பயணிகள் பஸ் சேவையை இடைநிறுத்தி, பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளதாக ஒன்றிணைந்த போக்குவரத்து தொழிற்சங்க சம்மேளன கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

இதற்கமைய எதிர்வரும் (20) முதல் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட தீர்மானித்துள்ளதாக அந்த கூட்டமைப்பு மேலும் தெரிவித்துள்ளது. தேசிய போக்குவரத்து ஆணைக்குழு நியாயமற்ற முறையில் விலைமனுக் கோரலுக்கான 06

## தனுஷ்கவை காப்பாற்ற நடவடிக்கை அவசியம்

**இலங்கை கிரிக்கெட் நிறுவன அதிகாரி கருத்து**




இலங்கை கிரிக்கெட் வீரர் தனுஷ்க குணதிலக்கவை காப்பாற்ற முதலில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென, இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் பிரதிச் செயலாளர் கிருஷாந்த கப்புவத்த தெரிவித்தார்.

கிரிக்கெட் வீரர் தனுஷ்க குணதிலக்க தொடர்பான வழக்குக்கு, செலவு செய்ய இலங்கை கிரிக்கெட் 06

## ரயிலுடன் மோதி விபத்தை ஏற்படுத்திய கொள்கலன்

**லொறிச் சாரதியின் கவனக்குறைவே காரணம்**



கனரக கொள்கலன் லொறி, நேற்று (15) ரயிலுடன் மோதி விபத்துக்குள்ளானது.

நீர்கொழும்பு, குரணை ரயில் நிலையத்துக்கு அருகில், இவ்விபத்து நிகழ்ந்தது. இது, நீர்கொழும்பு, குரணைக்கிடையிலான ரயில் சேவையில் தாமதத்தை ஏற்படுத்தியுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது. 06

**மீரிகமவில் கோர விபத்து**

## தந்தையும் மகளும் ஸ்தலத்தில் பலி

**தப்பியோடிய கார் சாரதி கைது**




மீரிகம, பஸ்யால வீதியின் கொட்டகந்த பிரதேசத்திற்கருகில் இடம்பெற்ற கோர விபத்தில் தந்தையும் மகளும் உயிரிழந்தனர். இச்சம்பவம் இப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. 06

**யாழில் சீரற்ற காலநிலை**

## 200 வருட பழைமையான மலைவேம்பு சரிந்தது



யாழ். கச்சேரி வீதியில் சுமார் 200 வருடங்கள் பழைமை வாய்ந்த மலைவேம்பு மரமொன்று, சீரற்ற காலநிலையால், திங்கட்கிழமை (14) இரவு 11 மணியளவில் சரிந்து விழுந்துள்ளது. வீதியின் குறுக்காக 06

தினகரன் விளம்பரம் 0112429367
விற்பனை பிரிவு 0112429444, 0112429378
ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk

# தினகரன்
THINAKARAN

2022 நவம்பர் 16 புதன்கிழமை

**தொழுகை நேரம்**

16 முதல் 21 வரை

| | |
|---|---|
| சுபஹ் | 04.42 |
| ளுஹர் | 11.57 |
| அஸர் | 03.19 |
| மஃரிப் | 05.50 |
| இஷா | 07.03 |

**இன்றைய சுபதினம்**

சுபகிருது வருடம் ஐப்பசி 30

ராகுகாலம் : பகல் : 12.00 - 1.30வரை
சுபநேரம் : காலை : 09.00 - 10.30வரை

யோகம்: சித்தயோகம்
திதி: அஷ்டமி

**இராசி பலன்கள்**

| | |
|---|---|
| மேஷம் | சுகம் |
| ரிஷபம் | பாராட்டு |
| மிதுனம் | செலவு |
| கடகம் | போட்டி |
| சிம்மம் | கோபம் |
| கன்னி | முயற்சி |
| துலாம் | நன்மை |
| விருச்சிகம் | நிறைவு |
| தனுசு | வெற்றி |
| மகரம் | பொறுமை |
| கும்பம் | மறதி |
| மீனம் | தனம் |

கலாநிதி இராமச்சந்திரகுருக்கள் (பாபு சர்மா)

அரச வருமானத்தை 15 வீதமாக அதிகரிப்பது அவசியம்

## இணக்கப்பாடு, புரிந்துணர்வுடன் செயல்படுவது மிக முக்கியமாகும்

இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவிப்பு

### எதிர்க்கட்சிகளும் ஊடகங்களும் புரிந்துணர்வுடன் செயற்பட வேண்டும்



லோரன்ஸ் செல்வநாயகம்

நாடு பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ள நிலையில், வீழ்ச்சி வேகத்தை குறைப்பதற்கு அரசாங்கத்தால் முடிந்துள்ளதாகவும் இந்த சவாலை வெற்றிகொள்வதில் அனைவரும் புரிந்துணர்வுடன் செயற்படுவது அவசியமென்றும் நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

சம்பிரதாய எதிர்க்கட்சியாகவும் சம்பிரதாய ஊடகங்களாகவும் செயற்படுவதை விடுத்து, சரியை சரியென ஏற்றுக்கொண்டு அது தொடர்பில் கருத்துக்களை முன்வைக்கக் கூடிய புரிந்துணர்வு அவசியமென்றும் அவர் சபையில் தெரிவித்தார்.

மத்திய மற்றும் நீண்ட கால திட்டங்களை உள்ளடக்கி இம்முறை வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், அரச வருமானத்தை நூற்றுக்கு 15 வீதமாக அதிகரித்துக் கொள்ள வேண்டும் என்பதில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வரவு செலவு திட்டம் மீதான முதலாம் நாள் விவாதத்தில் உரையாற்றும் போதே இராஜாங்க அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

நாடு பொருளாதார பிரச்சினை அன்றி பொருளாதார சவாலையே எதிர்நோக்கியுள்ளது. அந்த சவால்கள் வெற்றி கொள்ளப்பட வேண்டும்.அதற்கான இலக்குகளை முன்வைத்தே இம்முறை வரவு செலவுத் திட்டம்

06

## மக்களின் ஆணையின்றி எத்தகைய பிரச்சினைக்கும் தீர்வு காண முடியாது

ஹர்ஷ டி சில்வா எம்.பி சபையில் தெரிவிப்பு



லோரன்ஸ் செல்வநாயகம்

மக்கள் ஆணையின்றி எந்தப் பிரச்சினைக்கும் தீர்வு காண முடியாது என்றும், உள்ளூராட்சி சபை தேர்தல் மட்டுமின்றி பாராளுமன்றத்தைக் கலைத்து பொதுத் தேர்தலை நடத்துவதும் அவசியமாகுமெனவும் ஹர்ஷ டி சில்வா எம்.பி பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வரவு செலவுத் திட்டம் மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

அடுத்த ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் சமூக பாதுகாப்பு தொடர்பில் கவனம் செலுத்தப்படவில்லை. அரசாங்கத்துக்கு எதிராக வீதியில் இறங்கும் மக்களை அடக்குவதற்காக பாதுகாப்புத் துறைக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நாடு வங்குரோத்து நிலையை அடைந்துள்ள நிலையிலும் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுக்கள் மற்றும் இராஜங்க அமைச்சுக்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

பொருளாதார சவால்களை வெற்றி கொள்ளும் வகையில் அடுத்த ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உட்பட ஆளும் தரப்பினர் குறிப்பிடுகின்றனர். சமூக பாதுகாப்பு தொடர்பில் இம்முறை வரவு செலவுத் திட்டத்தில் கவனம் செலுத்தப்படவில்லை.

சந்தைப் பொருளாதாரம்,நிலைபேறான பொருளாதாரம் மற்றும் சமூக பாதுகாப்பு தொடர்பில் வரவு செலவுத் திட்டத்தில் எவ்வித விடயங்களும் உள்ளடக்கப்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

## நிலக்கரி கொள்முதல் விலைமனுக்கள் ரத்து

அமைச்சரவை அங்கீகாரமளித்தது

உடனடி மற்றும் தவணை முறையிலான நிலக்கரி கொள்முதல் விலைமனுக்களை இரத்துச் செய்ய, அமைச்சரவை அங்கீகரித்துள்ளது. தொழில்நுட்பக் குழு மற்றும் கொள்வனவுக் குழுவின் ஆலோசனைகளின் படி, இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேக்கர தெரிவித்துள்ளார். ஏலதாரர்கள் ஒப்பந்த விதிமுறைகள் மற்றும் தகுதித் தேவைகளை கணிசமான அளவு மீறியதாலே, இரண்டுமே இரத்துச் செய்யப்பட்டதாக அமைச்சர் தெரிவித்தார். அரசாங்கத்திலிருந்து அரசாங்கத்திற்கு ஏலம் கோருவதற்கு கொள்முதல் குழுவிற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## அமெரிக்க செனட் சபையின் வெளிநாட்டு உறவுகள் குழு



ஐக்கிய அமெரிக்க செனட் சபையின் வெளிநாட்டு உறவுகள் குழுவின் (Senate Foreign Relations Committee) பணியாட்தொகுதியின் அதிகாரிகள் குழு, அண்மையில் (10) சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவை சந்தித்தது.

பாராளுமன்றத்தில் சுற்றுப் பயணத்தை மேற்கொண்ட இக்குழுவினர், சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன மற்றும் பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக தசநாயக ஆகியோரையும் சந்தித்தனர். பாராளுமன்றத்தின் குழு முறைமைகள் குறித்து சபாநாயகர் மற்றும் செயலாளர் நாயகத்துடன் இவர்கள் விரிவாகக் கலந்துரையாடினர். அத்துடன், பாராளுமன்ற அமைவிடம், வரலாறு மற்றும் கட்டட வடிவமைப்புத் தொடர்பிலும்

06

சிறுவர்கள் தொடர்பான சம்பவங்கள்

## ஊடகங்களில் வெளிப்படுத்துவதை தடுப்பதற்கு விசேட சட்டம் தயாரிப்பு

அமைச்சுசார் ஆலோசனைக் குழுவில் ஆராய்வு



சிறுவர்கள் தொடர்பான சம்பவங்களை ஊடகங்களில் அறிக்கையிடும் போது சிறுவர்களை வெளிப்படுத்துவதைத் தவிர்ப்பதற்கான சட்டங்களை தயாரிப்பது தொடர்பில் மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டுகை பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவில் கவனம் செலுத்தப்பட்டது.

மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டுகை பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க தலைமையில் பாராளுமன்றத்தில் (10) கூடியபோதே இது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது.

மில்லனிய பகுதியில் அண்மையில் நடைபெற்ற சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு, ஊடகங்களில் சிறுவர்களை வெளிப்படுத்துவது தொடர்பில் இதன்போது நீண்ட நேரம் கலந்துரையாடப்பட்டது.இதற்கமைய சட்டமொன்றை தயாரிப்பதன் அவசியம் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது.

சிறுவர் குற்றவாளிகளை சட்டத்தின் முன்னர் கொண்டுவருவது தொடர்பில், ஊடகங்களில் அறிக்கையிடும் போது ஏனைய குற்றவாளிகளை விட விசேட முறையொன்றை பயன்படுத்த

06

விவசாயிகளுக்கு வழங்கப்படும்

## எரிபொருள் விநியோகத்தை கண்காணிக்க அதிகாரிகள்

CPC யும் விவசாய அமைச்சும் இணைந்து ஏற்பாடு

விவசாயத்துக்கான எரிபொருளை விநியோகிக்கும் செயற்பாடுகள் மற்றும் இணைப்பு நடவடிக்கைகளை கண்காணிக்கவென, மேலதிக செயலாளர் ஒருவரின் தலைமையில் இரண்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

இச்செயற்பாடுகளின் மேற்பார்வைக்காக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபத்தின் அதிகாரியொருவர் நியமிக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

ஏதேனும் ஒரு பிரதேசத்தில் அறுவடையின் போது அல்லது அறுவடையின் பின்னர் எரிபொருளை பெற்றுக் கொள்வதற்கு சிக்கல்கள் ஏற்படும் பட்சத்தில் மாவட்ட செயலாளர்களை சந்தித்து, அதற்கான தீர்வுகளை பெற்றுக் கொள்ள முடியுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலத்திரனியல் கொள்வனவு

## கொள்கை தயாரிப்பு தொடர்பில் தேசிய சபை உப குழுவில் அவதானம்



இலத்திரனியல் கொள்வனவு கொள்கையை நாட்டில் விரைவில் அறிமுகப்படுத்துவது தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இதற்கென,குறுகிய, நடுத்தர மற்றும் நீண்டகால கொள்கைகள் தயாரிக்கப்பட உள்ளன. தேசிய பேரவையின் உப குழுவில் இதுகுறித்து கலந்துரையாடப்பட்டது.

குறுகிய, நடுத்தர மற்றும் நீண்ட கால கொள்கைத் தயாரிப்புக்கான முன்னுரிமைகளை அடையாளம் காண்பதற்கான தேசிய பேரவையின் உப குழு, அதன் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தலைமையில் பாராளுமன்றத்தில் (11) கூடிய போதே இது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. இக்கூட்டத்தில் நிதி அமைச்சு, தொழிநுட்ப அமைச்சு மற்றும் கணக்காய்வாளர் திணைக்களம் என்பவற்றைப் பிரதிநிதித்துவப்படுத்தி அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

நாட்டின் அனைத்து அரச நிறுவனங்களிலும் கொள்வனவு முறையை இலத்திரனியல் மூலம் மேற்கொள்வதன் தேவைக்கமைய, பாராளுமன்றம் ஊடாக கொள்கையொன்றை தயாரிப்பதன் அவசியம் தொடர்பில் உப குழுவின் தலைவர் நாமல் ராஜபக்ஷ இதன்போது சுட்டிக்காட்டினார். அதற்கமைய 2023 ஆம் ஆண்டு ஜூன் மாதமளவில் அமைச்சரவை, அமைச்சுக்கள் மற்றும் இராஜாங்க அமைச்சுக்களுக்கு இலத்திரனியல் கொள்வனவு முறை அறிமுகப்படுத்தப்படும். பின்னர்,2025 அளவில் நாட்டின் அனைத்து அரச நிறுவனங்களுக்கும் இலத்திரனியல் கொள்வனவு முறையை அறிமுகப்படுத்தவும் கலந்துரையாடப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான பவித்ரா வன்னிஆரச்சி, வஜிர அபேவர்த்தன மற்றும் சாகர காரியவசம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

உணவு பாதுகாப்பு தொடர்பிலான

## ஜனாதிபதியின் ஆலோசகராக சரத்வீரசேக்கர எம்.பி நியமனம்



ஜனாதிபதியின் உணவுப் பாதுகாப்பு ஆலோசகராக கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேக்கர தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

முன்னாள் அமைச்சரான வீரசேக்கர, உணவு பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதி செயலக அலுவலகத்திலிருந்து பணியாற்றவுள்ளார்.

ஜனாதிபதியின் புதிதாக அறிவிக்கப்பட்ட தேசிய உணவுப் பாதுகாப்புத் திட்டத்துக்கு வீரசேக்கர பொறுப்பேற்பாரெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## O/L பரீட்சை முடிவு இம்மாத இறுதிக்குள்

2021ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுச் சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகள், இம்மாத இறுதிக்குள் வெளியிடப்படுமென பரீட்சை திணைக்களம் தெரிவித்துள்ளது. இதுதொடரபாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எல்.எம்.டி.தர்மசேன தெரிவிக்கையில், இம்மாத இறுதியில் அல்லது அதற்கு முன்னதாகவோ பெறுபேறுகள் வெளியிடக்கூடியதாக இருக்குமென தெரிவித்தார்.

தொழிலாளர்களது பாதுகாப்பு குறித்து கவனம்

## வெளிநாட்டு தொழில் வாய்ப்பு தொடர்பில் புதிய சட்டங்கள்

அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவிப்பு

வெளிநாட்டு தொழில் வாய்ப்பு தொடர்பில் தற்போதுள்ள சட்டங்களை நீக்கி, புதிய சட்ட ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்த வேண்டுமென வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

சவூதி அரேபியாவுக்கான இலங்கைத் தூதுவர் அலுவலகத்தில் நடைபெற்ற சந்திப்பொன்றின் போதே, அவர் இதனைக் குறிப்பிட்டார்.

வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்காக செல்பவர்களின் பாதுகாப்பு முக்கியமானது. எனவே, வெளிநாட்டு வேலை வாய்ப்புக்காக அனுப்பப்படும் தொழிலாளர்களுக்கு

06

## வைர விழா காணும் மணவை அசோகன்



இலங்கை இந்திய செய்தி தொடர்பாளர் மணவை அசோகனின் பிறந்தநாள் வைபவ நிகழ்வு நாளை (17.11.2022) மாலை 4.30 மணிக்கு இல. 132, மட்டக்குளி சென்ரல் வீதி, கொழும்பு 15 இல் அமைந்துள்ள ANGLO GRAND MAHAL இல் நடைபெறவுள்ளது.

மணவை அசோகன் 1962.11.17 ஆம் திகதி இலங்கையில் பிறந்தவர்.

இலங்கையில் செட்டியார் தெருவில் பொங்கல் திருவிழாவை முதன் முதலில் ஆரம்பித்த, தமிழ்நாட்டைச் சேர்ந்த மணவைத்தம்பி இலங்கை மாத்தளையைச் சேர்ந்த பாப்பாத்தியம்மாள் தம்பதிகளின் புதல்வனான இவர், தமிழக மீனவர் கழகத்தின் சர்பாக இலங்கை பிரதிநிதியாக இவர் அண்மையில் நியமிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

06



மட்டக்களப்பு மாவட்டத்தின் கோறளைப்பற்று மேற்கு, கோறளைப்பற்று மத்தி, ஏறாவூர் மற்றும் காத்தான்குடி ஆகியவற்றின் பிரதேச ஒருங்கிணைப்புத் தலைவராக அமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட்டை ஜனதிபதி ரணில் விக்ரமசிங்க நியமித்துள்ளார். இதற்கான நியமனக்கடிதம் நேற்று (15) பிரதமர் தினேஷ் குணவர்தனவினால் கையளிக்கப்பட்டது.

## ஒலுவில் மீன்பிடித் துறைமுகத்தை முன்மாதிரியாக செயற்படுத்த முடியும்

கிழக்கு கடற்றொழிலாளர் நம்பிக்கை

ஒலுவில் மீன்பிடித் துறைமுகத்தை கடற்றொழில் அமைச்சரின் ஒத்துழைப்புடன்முன்மாதிரியான துறைமுகமாக செயற்படுத்தும் ஆர்வத்துடன் பிரதேச கடற்றொழிலாளர்கள் இருப்பதாக ஒலுவில் ஆழ்கடல் கடற்றொழில் வள்ளங்களின் உரிமையாளர் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

மாளிகாவத்தை கடற்றொழில் அமைச்சில் நேற்று (15) நடைபெற்ற ஒலுவில் துறைமுகம் தொடர்பான கலந்துரையாடலில் பங்குபற்றி கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில், கருத்து தெரிவித்த ஒலுவில் பலநாள் படகுகள் சங்கத்தின் தலைவர் நஸீர், ஒலுவில் துறைமுகத்தின் வாயிலை தூர்வாரி, செயற்பாடுகளை ஆரம்பிக்கும் பட்சத்தில் துறைமுகத்தை பராமரிப்பதற்கான செலவை ஈடு செய்யும் வகையில் வருமானத்தை பெற்றுக்கொள்ள முடியுமெனவும் அவர் தெரிவித்தார்.

சுமார் 54 மில்லியன் யூரோ செலவில் அமைக்கப்பட்டுள்ள ஒலுவில் துறைமுகத்தை செயற்படுத்துவதனூடாக, பிரதேச கடற்றொழிலாளர்கள் பூரணமான நன்மைகளைப் பெற்றுக்கொள்வர். இந்த எதிர்பார்ப்பில்

06

**நாணய மாற்று**

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 231.31 | 242.45 |
| கனடியன் டொலர் | 265.08 | 277.22 |
| யூரோ | 358.78 | 373.86 |
| ஜப்பான் யென் | 2.4417 | 2.5454 |
| சிங்கப்பூர் டொலர் | 255.60 | 266.39 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 412.93 | 429.30 |
| சுவிஸ் பிராங்க் | 360.91 | 378.36 |
| அமெரிக்க டொலர் | 360.88 | 371.68 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 964.12 | கட்டார் ரியால் | 99.42 |
| குவைத் டினார் | 1,174.43 | சவூதி ரியால் | 96.73 |
| ஓமான் ரியால் | 944.10 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 98.96 |

# இலங்கை தேசிய தர விருதுகள் - 2019 மற்றும் 2020

Sri Lanka NATIONAL QUALITY AWARD

SLNQA

செயல்திறன் சிறப்பு



## கௌரவ இராஜாங்க அமைச்சரின் ஆசிச் செய்தி



இருபத்து ஐந்து ஆண்டு காலமாக தொடர்ச்சியாக நடத்தப்பட்டு வரும் தேசிய தர விருது விழாவை ஒட்டி நான் இந்த ஆசிச் செய்தியை வெளியிடுவது மனம் நிரம்பிய மகிழ்ச்சியுடனாகும்.

சர்வதேச சந்தைக்கு பிரவேசிப்பதற்கு மற்றும் நீடிப்பதற்கு உற்பத்தியாளர்கள் மற்றும் சேவை வழங்குநர்கள் குறித்த பொருள் மற்றும் சேவைகளில் வாடிக்கையாளர்கள் எதிர்பார்க்கும் தரத்தை பேண வேண்டும். வாடிக்கையாளர் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யாத எந்த பொருளுக்கும் அல்லது நிறுவனத்திற்கும் சந்தையில் நீடிக்க முடியாது. இந்தத் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு தரப்படுத்தல் மற்றும் தரங்கள், உற்பத்தியாளர்களுக்கு அல்லது சேவை வழங்குநர்களுக்கு மற்றும் வாடிக்கையாளர்களுக்கும் சிறந்த நன்மையை வழங்கி மிக முக்கிய பங்களிப்பை மேற்கொள்கிறது.

இலங்கையின் தேசிய தர நிறுவனமான இலங்கை கட்டளைகள் நிறுவனம் இந்த செயற்பாட்டுக்கு தலைமை ஏற்று இலங்கை பொருளாதாரத்தின் அனைத்து துறைகளினதும் தரப்படுத்தல் மற்றும் தரத்தை மேம்படுத்தும் செயற்பாட்டுக்கு தோள் கொடுக்கிறது. இலங்கை தர நிறுவனம் மூலம் நடத்தப்படுகின்ற இலங்கையின் தேசிய தர விருது நிகழ்ச்சி இலங்கை வர்த்தகர்களை வெற்றியை நோக்கி வழிநடத்துவதோடு தேசிய பொருளாதாரத்தின் அபிவிருத்திக்கும் காரணமாகிறது.

இலங்கை தேசிய தர விருதுகளின் வெற்றியாளர்களுக்கு வாழ்த்துகளை தெரிவிப்பதோடு இந்த முக்கிய நிகழ்வை ஏற்பாடு செய்தது தொடர்பில் இலங்கை கட்டளைகள் நிறுவனத்திற்கு நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

**கௌரவ கனக ஹேரத் (பா.உ.)**
**தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர்**

இலங்கை தேசிய தர விருதுகள் (SLNQA) என்பது சிறந்த செயல்திறனுக்காக இலங்கையில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களுக்கு தேசிய அளவில் வழங்கப்படும் மிக உயரிய விருதாகும். அமெரிக்காவின் மல்கம் போல்ட்ரிட்ஜ் தேசிய தர விருதுகள் {Malcolm Baldrige National Quality Awards (MBNQA)} அளவுகோலை பயன்படுத்தி அதன் அடிப்படையில் செயற்படுத்தப்படும் இந்த விருது, தேசிய கட்டளைகள் நிறுவனத்தால் (SLSI) நடத்தப்படும் நிகழ்வாகும். போட்டித் தன்மையை மேம்படுத்தல், சிறந்த செயல்திறனுக்கு பங்களிப்புச் செய்யும் காரணிகள் பற்றிய புரிதலை ஊக்குவித்தல், அவ்வாறான முன்னேற்றகரமான முறைகளை பின்பற்ற நிறுவனங்களை ஊக்குவித்தல், இலக்குகளை அடைவதற்கு நிறுவனங்களை வலுவூட்டல், முடிவுகளை மேம்படுத்தல் மற்றும் அதிக போட்டித்திறன் கொண்டதாக மாறுவதற்காக முக்கிய பொறிமுறைகளை அதிகரிப்பதற்காக தரத்தில் விழிப்புணர்வை ஊக்குவிப்பது இந்த விருதின் நோக்கமாகும்.

**2022 நவம்பர் 16 அன்று 15:00 மணிக்கு இலங்கை கட்டளைகள் நிறுவனத்தில்**

### இலங்கை தேசிய தர விருதுகள் 2019

25ஆவது வருடாந்த SLNQA - 2019 வெற்றியாளர்கள் பட்டியல்

| | |
|---|---|
| **வெற்றியாளர் விருதுகள்** | |
| Hemas Manufacturing (Pvt) Ltd | உற்பத்தி - பெரியது |
| **தகுதி விருதுகள்** | |
| Asiri Laboratories | சுகாதார பராமரிப்பு - பெரியது |
| **பாராட்டுச் சான்றிதழ்கள்** | |
| Coats Thread Exports (Pvt) Ltd | உற்பத்தி - பெரியது |
| Royal Fernwood Porcelain Ltd | உற்பத்தி - பெரியது |
| Lanka IOC PLC | சேவை - பெரியது |
| Variosystems (PVT) Ltd | உற்பத்தி - பெரியது |
| Melsta Hospitals Ragama (Pvt) Ltd | சுகாதார பராமரிப்பு - பெரியது |

### இலங்கை தேசிய தர விருதுகள் 2020

26ஆவது வருடாந்த SLNQA - 2020 வெற்றியாளர்கள் பட்டியல்

| | |
|---|---|
| **வெற்றியாளர் விருதுகள்** | |
| Nestle Lanka PLC | உற்பத்தி - பெரியது |
| Maliban Biscuit Manufactories (Pvt) Ltd | உற்பத்தி - பெரியது |
| CBL Exports (Pvt) Ltd | உற்பத்தி - நடுத்தரமானது |
| Commercial Bank Of Ceylon PLC | சேவை - பெரியது |
| **தகுதி விருதுகள்** | |
| Unilever Sri Lanka LTD (ஹொரண ஏற்றுமதி முறைவழியாக்கல் வலயம், பொரலுகொட, பொருவதண்ட) | உற்பத்தி - பெரியது |
| Dipped Products PLC | உற்பத்தி - பெரியது |
| International College of Business and Technology Limited | கல்வி - பெரியது |
| **பாராட்டுச் சான்றிதழ்கள்** | |
| Martin Bauer Hayleys (Pvt) Ltd | உற்பத்தி - பெரியது |
| American Education Centre Limited | கல்வி - நடுத்தரமானது |
| Global Rubber Industries Pvt (Ltd) | உற்பத்தி - பெரியது |

## கௌரவ செயலாளரின் ஆசிச் செய்தி



இலங்கை கட்டளைகள் நிறுவனத்தின் மூலம் ஏற்பாடு செய்யப்படுகின்ற 26ஆவது தேசிய தர விருதுகள் விழாவில் இந்த ஆசிச் செய்தியை வெளியிடுவது மிக மகிழ்ச்சியுடனாகும்.

இலங்கைக்குள் தரத்தை அடிப்படையாகக் கொண்ட கலாசாரம் ஒன்றை ஏற்படுத்துவதற்கு இலங்கை கட்டளைகள் நிறுவனம் தேசத்திற்கு பெரும் பங்களிப்புச் செய்கிறது. இந்தப் பணியில் இலங்கை தேசிய தர விருதுகள் நிகழ்ச்சி சிறந்த நிலையை பெற்ற நிறுவனங்களை பாராட்டுவதன் மூலம் மிக முக்கிய பாத்திரத்தை வகிக்கிறது.

உற்பத்தி மற்றும் சேவைகளின் தரம் பொருளாதாரத்தில் அனைத்து துறைகளிலும் பிரதான போட்டிரீதியான காரணியாகும். ஏற்றுமதி சந்தைகளின் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு உற்பத்திகளின் தரம் சர்வதேச தரத்திற்கு அமைவாக இருத்தல் வேண்டும். அதேபோன்று தரப் பயன்பாடு சர்வதேச சந்தைக்கு நுழைவதற்கு வாயிலாக கருதப்படுகிறது.

நிறுவனங்களின் செயல்திறனின் சிறப்புத் தன்மை நாட்டின் அபிவிருத்திக்கு பிரதான காரணியாகிறது என்பதை நம்புவோம். உள்நாட்டு நிறுவனங்களின் குறிப்பிடத்தக்க செயல்திறன் அடிப்படைகளை ஏற்கும் முக்கியத்துவம் இந்த நிகழ்ச்சி மூலம் முன்னிறுத்தப்படுகிறது. இதன்படி, இலங்கை தேசிய தர விருதுகள் மூலம் நாட்டின் பொருளாதார அபிவிருத்தியின் தேவையை பூர்த்தி செய்வதற்கு வழிகோல நிறுவனங்களுக்கு வாய்ப்புக் கிட்டுகிறது.

2019 மற்றும் 2020 இலங்கை தேசிய தர விருதுகளை வென்ற வெற்றியாளர்களை வாழ்த்துவதற்கு இதனை வாய்ப்பாக பயன்படுத்திக் கொள்வதோடு இவ்வாறான முக்கிய நிகழ்ச்சி ஒன்றை ஏற்பாடு செய்ததற்காக இலங்கை கட்டளைகள் நிறுவனத்திற்கு எனது நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

**பேராசிரியர் என்.டி. குணவர்தன**
**செயலாளர்**
**தொழில்நுட்ப அமைச்சு**

## இலங்கை கட்டளைகள் நிறுவன தலைவரின் ஆசிச் செய்தி



26ஆவது தேசிய தர விருது நிகழ்வில் இந்த ஆசிச் செய்தியை வெளியிடுவதையிட்டு நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

அமெரிக்காவின் மல்கம் போல்ட்ரிட்ஜ் தேசிய தர விருது அளவுகோல் அடிப்படையில் இலங்கை தேசிய தர விருது (SLNQA) இடம்பெறுகிறது. செயல்திறன் சிறப்பை அடைவதில் உழைக்கும் இலங்கையில் உள்ள நிறுவனங்களை அங்கீகரிப்பதற்காக இலங்கை கட்டளைகள் நிறுவனம் இந்த விருது விழாவை நடத்துகிறது.

பொருட்கள் மற்றும் சேவைகளின் தரத்தை உறுதிப்படுத்துவது, உலகளாவிய வர்த்தகத்தில் இன்றியமையாத காரணிகளில் ஒன்றாக இருப்பதால், உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தைகளில் நுழைவதற்கு நவீன தர முகாமைத்துவ மூலோபாயங்கள் மற்றும் தொழில்நுட்பங்களை பயன்படுத்துவது அவசியமாகும். அதனால் இந்த தேசிய விருதுத் திட்டமானது சிறந்த செயல்திறன், தர நிலைகளுக்கான வலுவான அடித்தளத்தை நிர்ணயிப்பதற்கு உள்ளூர் நிறுவனங்களை ஊக்குவிப்பது மற்றும் சிறந்த செயல்திறனுக்கு அளவுகோல்களை அடையாளம் காண்பதற்கு அவர்களுக்கு உதவுவது ஆகிய அனைத்து நோக்கங்களை உள்ளடக்கியதாக உள்ளது.

பல நிறுவனங்களால் இந்த விருதுகளை வெல்ல முடியாதபோதும் கூட, அவர்கள் நிச்சயமாக அதன் சாதனையை நோக்கி உழைக்கும் செயல்பாட்டின் மூலம், சிறப்பான பாதையை நிரூபிப்பதால் பலன்களைப் பெறுகிறார்கள். இதனால் தேசிய தர விருதுகளுக்காக விண்ணப்பிப்பது நிறுவனங்கள் தமது வளர்ச்சி மற்றும் வாய்ப்புகளை அடையாளம் கண்டு ஒவ்வொரு அம்சத்தையும் மேம்படுத்த உதவுகிறது.

தமது முயற்சியில் வெற்றி பெற்றதற்காக வெற்றியாளர்களுக்கு வாழ்த்து தெரிவிப்பதற்கு இதனை வாய்ப்பாக நான் பயன்படுத்திக்கொள்கிறேன்.

**திரு அசங்க ரணசிங்க**
**தலைவர்**
**இலங்கை கட்டளைகள் நிறுவனம்**

## பணிப்பாளர் நாயகத்தின் ஆசிச் செய்தி



இலங்கை தேசிய தர விருதுகள் தினத்தில் இந்த ஆசிச் செய்தியை வெளியிடுவதையிட்டு மிக மகிழ்ச்சி அடைகிறேன்.

இலங்கை தேசிய தர விருதுகள் இந்நாட்டை முன்னேற்றத்தை நோக்கி இட்டுச் செல்லும் நிறுவனங்களுக்கு விருது வழங்கும் தேசிய அளவான விருதாகும். இலங்கை கட்டளைகள் நிறுவனத்தின் மூலம் நடத்தப்படுகின்ற இந்த நிகழ்ச்சியானது ஆறாவது முறையாக இடம்பெறுகிறது.

ஐக்கிய அமெரிக்காவின் மல்கம் போல்ட்ரிட்ஜ் தேசிய தர விருது அளவுகோல் அடிப்படையில் இலங்கை தேசிய தர விருதுகள் நிகழ்வு நடைபெறுகிறது. இதன் பிரதான பாராட்டுக்குரிய கூறுகளாக தலைமைத்துவம், மூலோபாயம், வாடிக்கையாளர், பகுப்பாய்வு மற்றும் அறிவு முகாமைத்துவம், தொழில் படை, செயற்பாடு மற்றும் வர்த்தக நன்மைகள் அமையும்.

ஐந்து பிரதான படிகளைக் கொண்டதாக பரந்த மதிப்பீட்டு செயற்பாடு மூலம் இலங்கையின் ஏனைய நிறுவனங்களுக்கு முன்மாதிரியை பெற முடியுமான நிறுவனங்கள் வெற்றியாளர்களாக தேர்வு செய்யப்படும்.

2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளின் தேசிய தர விருது வென்றோருக்கு எனது வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்வதோடு அவர்களின் வெற்றிக்குக் காரணமான விடயங்கள் மற்றும் மூலோபாயங்கள் தொடர்பில் ஏனைய இலங்கையின் நிறுவனங்களை அறிவூட்டும்படி கோரிக்கை விடுக்கிறேன். இது வெற்றியை நோக்கி இட்டுச் செல்வதற்கு நிறுவனங்களுக்கு பெரும் சந்தர்ப்பமாக இருப்பதோடு நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கும் காரணமாகிறது.

**கலாநிதி சித்திகா ஜி செனவிரத்ன அவர்கள்**
**பணிப்பாளர் நாயகம்/ தலைமை நிர்வாக அதிகாரி**
**இலங்கை கட்டளைகள் நிறுவனம்**

தொழில்நுட்ப அமைச்சு

இலங்கை கட்டளைகள் நிறுவனம் (SLSI)
இல.17, விக்டோரியா பிளேஸ், எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு 08
தொ.: 011-2671567-72, 011-2671575, 011-2697029, 011-2694981
தொலைநகல்: 011-2671579, 011-2672617
மின்னஞ்சல்: slsi@slsi.lk இணையதளம்: www.slsi.lk

@OfficialSLSI

தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் ஐப்பசி மாதம் 30ஆம் நாள் புதன்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 ரபீஉனில் ஆகிர் பிறை 20

### குறள் தரும் சிந்தனை

கான முயலெய்த அம்பினில் யானை
பிழைத்தவேல் ஏந்தல் இனிது

வலிவு மிகுந்த யானைக்குக் குறிவைத்து, அந்தக் குறிதப்பினாலும்கூட அது, வலிவற்ற முயலுக்குக் குறிவைத்து அதனை வீழ்த்துவதைக் காட்டிலும் சிறப்புடையது.

# வாகன விபத்துகளால் அதிகரிக்கும் மரணங்கள்!

வாகன விபத்துகள் அதிகரித்துக் காணப்படும் நாடுகளில் ஒன்றாக இலங்கை விளங்குகின்றது. அத்தோடு வீதிகளில் வாகன விபத்துகள் தினமும் இடம்பெறக் கூடிய நாடாகவும் இலங்கை உள்ளது. உலக சுகாதார ஸ்தாபனத்தின் அறிக்கையில், இலங்கையில் வாகன விபத்துகளால் வருடமொன்றுக்கு 4200 பேர் உயிரிழப்பதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. சுமார் இரண்டு கோடி பேர் வாழும் இந்நாட்டில் வாகன விபத்துக்களால் வருடமொன்றுக்கு இவ்வளவு தொகையினர் உயிரிழப்பது ஆரோக்கியமானதல்ல.

இந்நாட்டில் 80 இலட்சத்துக்கும் மேற்பட்ட வாகனங்கள் காணப்படுகின்றன. அவற்றில் பெரும்பாலானவை இரண்டு சக்கர மோட்டார் பைசிக்கிள்களாகும். இருந்தும் வீதிப் போக்குவரத்து பொலிஸாரின் தரவுகளும் நாட்டில் வீதிப் போக்குவரத்து வாகன விபத்துகள் அதிகரித்துள்ளதையே எடுத்துக்காட்டுகின்றன. இவ்விபத்துக்களால் நாளொன்றுக்கு 8_ 10 வரையானோர் உயிரிழப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. வீதி வாகன விபத்துகளினால் உயிரிழப்போரின் எண்ணிக்கையில் ஏற்பட்டுள்ள அதிகரிப்பானது, பிராந்திய மற்றும் உலகளாவிய கவனத்தை ஈர்க்கக் கூடியதாகும்.

இந்நாட்டில் வாகன விபத்துக்களில் ஏற்பட்டிருக்கும் அதிகரிப்பு பொதுப் பிரச்சினைகளில் ஒன்றாகவே வளர்ச்சி பெற்றுள்ளது. இந்நிலைமை நீடிக்க இடமளிக்கலாகாது. வீதிப் போக்குவரத்து வாகன விபத்துகளைக் கட்டுப்படுத்துவது குறித்து கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். இதற்கான தேவையும் பரவலாக உணரப்பட்டுள்ளது. ஏனென்றால் இந்நாட்டில் பதிவாகும் பெரும்பாலான வாகன விபத்துகளை எடுத்து நோக்கினால், அவற்றைப் பெரும்பாலும் தவிர்த்துக் கொள்ள முடியும்.

அண்மையில் கூட யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த அதிசொகுசு பஸ் வண்டி கிளிநொச்சியில் விபத்துக்குள்ளானதில் மூவர் உயிரிழந்தனர். அவர்களில் கண்டி நாவலப்பிட்டியைச் சேர்ந்த யாழ்ப்பாண பல்கலைக்கழக சித்த மருத்துவபீட பட்டதாரி மாணவியும் அடங்கியுள்ளார். இதேபோன்று பேராதனைப் பல்கலைக்கழகப் பட்டதாரி மாணவியொருவரும் வாகன விபத்தில் அண்மையில் உயிரிழந்தார். இதேவேளை நேற்று பஸ்யாலவில் பிரத்தியேக வகுப்பு நிறைவடைந்ததும் மகளை அழைத்துக் கொண்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த தந்தையும் மகளும் காரொன்றினால் மோதுண்டு உயிரிழந்திருக்கின்றனர். இவ்வாறான உயிர் பறிக்கும் துரதிர்ஷ்டகர வீதி விபத்துக்கள் தினமும் பதிவாகவே செய்கின்றன. இது தொடர்பில் பல தரப்பினரும் கவனம் செலுத்தியுள்ளனர்.

இந்நாட்டில் வீதிகளில் வாகன விபத்துக்கள் அதிகரித்துக் காணப்படுவதற்கு பல விடயங்கள் துணைபுரிகின்றன. அவற்றில் வீதிப் போக்குவரத்து சட்டங்களை மதியாமையும் அவற்றை மீறிச் செயற்படுகின்றமையும்தான் முக்கிய விடயங்களாக உள்ளன. அதாவது வாகனத்தை மற்றொரு வாகனத்துடன் போட்டி போட்டு செலுத்துதல், மற்றொரு வாகனத்தை முந்திச் செல்ல முயற்சி செய்தல், ஒரே சாரதி நீண்ட நேரம் தூக்கம் விழித்து வாகனத்தைச் செலுத்துதல், 18 வயதுக்கு குறைந்தவர்கள் வாகனங்களை செலுத்த இடமளித்தல், வாகனங்களின் பராமரிப்பு இயக்கம் குறித்து ஒழுங்குமுறையாகக் கவனம் செலுத்தாமை போன்றவாறான செயற்பாடுகள் இவ்விதமான விபத்துகளுக்கு பெரிதும் உதவக் கூடியனவாக உள்ளன.

அத்தோடு சில சாரதிகள் போதைப் பாக்குகள், ஐஸ், கஞ்சா போன்றவற்றை பாவித்த நிலையில் வாகனத்தைச் செலுத்துவதாகவும் தகவல்கள் தெரிவிக்கப்படுகின்றன. ஆனால் இச்செயற்பாடுகள் அனைத்தும் இந்நாட்டின் சட்ட ஏற்பாடுகளுக்கு முரணானவையாகும்.

இந்த விபத்துக்களில் பெரும்பாலானவற்றைப் பெரிதும் தவிர்த்துக் கொள்ள முடியும். அதற்கு வீதிப் போக்குவரத்துச் சட்டங்களை மதித்துச் செயற்படுவதும் போக்குவரத்து ஒழுங்குகளைப் பேணி வாகனங்களைச் செலுத்துவதும் இன்றியமையாததாகும். இதன் நிமித்தம் சாரதிகளுக்கு வீதிப் போக்குவரத்து சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் குறித்து போதிய தெளிவை அளிப்பது அவசியம். இது தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்பினர் கவனம் செலுத்த வேண்டும்.

ஆகவே வீதி போக்குவரத்து வாகன விபத்துக்களைத் தவிர்த்துக் கட்டுப்படுத்துவதற்கு ஏற்ப சட்டங்களை மேலும் கடுமையாக்குவதும் சாரதிகள் மற்றும் பயணிகளுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதும் பெரிதும் பயன்மிக்கதாக இருக்கும். இவற்றின் ஊடாகப் பெரும்பாலான வீதி விபத்துக்களைத் தவிர்த்துக் கொள்ள முடியும். அதுவே மக்களின் கருத்தும் ஆகும்.

editor.tkn@lakehouse.lk

# கலிகால தோஷத்தை அகற்ற உதவிடும் ஐயப்ப தரிசனம்



## கார்த்திகை மாதமும் புனித ஐயப்ப விரதமும்

கார்த்திகை மாதம் தொடங்கியதும் இலங்கையிலுள்ள ஐயப்ப பக்தர்கள் அனைவரும் ஐயப்ப பக்தியில் மூழ்கிப் போகின்றனர். இவர்கள் ஐயப்பனுக்காக மாலை அணிந்து பக்திச் செறிவுடன் ஐயப்பன் நாமத்தை சொல்லி விரதம் அனுஷ்டிக்கிறார்கள்.

ஐயப்பன் கலியுக வரதன். கலிகால தோஷத்தை அகற்ற ஐயப்பனை தரிசித்தால் போதும் என்னும் உணர்வு மேலோங்குகிறது. ஆண்டுதோறும் இருமுடி ஏந்தி சபரிமலைக்கு புனித யாத்திரை செல்லும் பக்தர்களின் எண்ணிக்கை பெருகிக் கொண்டே போகிறது. கடுமையான முறையில் அனைத்து விதமான விரதங்களையும் கடைப்பிடிக்கும் மாலையிட்ட ஐயப்பன் பக்தன் சுவாமி ஐயப்பனின் பரிபூரண அனுக்கிரகம் பெற்றிருப்பதால் பக்தனையே ஐயப்பன் அவதாரமாக மற்றவர்கள் மதிக்கிறார்கள் என்பதை நிதர்சனமான உண்மை.

மாலை அணிந்து விரதம் இருந்து சபரிமலை செல்வோர் மேற்கொள்ள வேண்டிய விரத முறைகள் உள்ளன. சபரிமலை செல்ல விரும்புவர்கள் கார்த்திகை மாதம் முதல் நாள் அல்லது 19ஆம் திகதிக்குள்ளே ஒரு நாளில் மாலை அணிய வேண்டும். கார்த்திகை மாதம் முதல் நாள் மாலை அணிந்தால் நாள் பார்க்க வேண்டாம். அதற்குப் பின்னர் அணிபவர்கள் நல்ல நாள் பார்த்து மாலை அணிய வேண்டும்.

எப்படி இருந்தாலும் குறைந்தது 41 நாட்கள் விரதம் இருக்க வேண்டும். மாலை துளசி மணி 108 கொண்டதாகவோ ஒரு உருத்ராட்சை மணி 54 உள்ளதாகவோ வாங்கி அதில் ஐயப்பன் திருவுருவம் பதித்த டொலர் ஒன்றை இணைத்து அணிய வேண்டும்.தாய் தந்தையின் நல்லாசியுடன் குருசாமி ஒருவரின் கையால் ஆலயத்தில் பூஜை செய்து மாலை அணிய வேண்டும். குருசாமி கிடைக்காவிட்டால் கோயில் சென்று கடவுள் பாதத்தில் மாலையை வைத்து அர்ச்சகரிடம் குருதட்சனை கொடுத்து அர்ச்சனை செய்து ஐயப்பனையே குருவாக நினைத்து மாலை தரிசித்துக் கொள்ளலாம்.

இது எதுவுமே முடியாவிட்டால் கடவுளின் பிரதிநிதியான தனது தாயிடம் ஆசிர்வாதம் வாங்கி அவர்களது கையால் மாலையை அணிந்து கொள்ளலாம். இவ்வாறு மாலை அணிந்த பின்பு கோபதாபம், குரோதம் கொள்ளக்கூடாது. சிநேகம் பாராட்டி பணிவுடன் பழக வேண்டும். இயற்கையின் படைப்புகள் எல்லாவற்றையுமே இறைவனின் சொரூபமாக பார்க்க வேண்டும். காலையில் சூரிய உதயத்துக்கு முன்பும் மாலையிலும் குளிர்ந்த நீரில் நீராடி கோயில்களிலோ வீடுகளிலோ ஐயப்பனை மனதார நினைத்து சரணங்கள் கூறி வணங்க வேண்டும்.

கறுப்பு, நீலம், காவி, பச்சைநிற வேட்டி சட்டை அணிய வேண்டும். பிரம்மச்சாரிய விரதத்தை முழுமையாக கடைப்பிடிக்க வேண்டும். மாலையை எக்காரணம் கொண்டும் கழற்றக் கூடாது. இரத்த உறவு சம்பந்தப்பட்டவர்களின் மரணம் ஏற்பட்டால் குருசாமியிடம் சென்று மாலையை கழற்றிய பிறகு துக்கத்தில் கலந்து கொள்ள வேண்டும். ஏதாவது ஒரு காரணத்தால் மாலையை கழற்ற நேர்ந்தால் அந்த ஆண்டு சபரிமலை செல்லக் கூடாது.

பெண்களின் சடங்கு வைபவத்திற்கோ குழந்தை பிறந்த வீட்டிற்கோ செல்லக் கூடாது. மது, மாமிசம், புகைப்பிடித்தலை விட்டுவிட வேண்டும். மாலை அணிந்த பக்தர்களின் வீட்டில் சாப்பிடலாம். மற்றவர்கள் வீட்டில் பால், பழம் சாப்பிடலாம். வீட்டுப் பெண்களுக்கு மாலை அணிந்த காலத்தில் மாதவிடாய் ஏற்பட்டால் ஏழு நாட்கள் கழித்து பின்னர்தான் அவர்கள் சமைத்த உணவை உண்ண வேண்டும். காலணிகள் பயன்படுத்தக் கூடாது.

கன்னிச்சாமிகள் தங்களின் வசதிக்கேற்ப வீடுகளில் பூஜைகள் நடத்தி ஐயப்பன்மார்களுக்கும் ஏழைகளுக்கும் அன்னதானம் செய்யலாம். மற்றவர்களிடம் பேசும் பொழுது சாமி சரணம் எனத் தொடங்கி விடைபெறும் பொழுது சாமி சரணம் எனக் கூற வேண்டும்.

இருமுடி கட்டு பூஜையை வீட்டிலோ குருசாமி இடத்திலோ கோயில்களிலோ வைத்து நடத்த வேண்டும். சபரிமலை பயணம் புறப்படுகையில் யாரிடமும் போய் வருகிறேன் எனக் கூறக் கூடாது.

பம்பை நதியில் நீராடும் பொழுது மறைந்த தனது முன்னோர்களை நினைத்து நீராட வேண்டும். யாத்திரை முடிந்து வீடு திரும்பியதும் ஐயப்பனின் அருள் பிரசாதத்தை தலையில் ஏந்தியபடியே வீட்டு வாயிலின் படியில் விடலை தேங்காய் அடித்து வீட்டில் உள் நுழைய வேண்டும்.

வீட்டில் பூஜை அறையில் பூஜை செய்து கட்டினை பிரித்து பிரசாதத்தை விநியோகம் செய்ய வேண்டும்.

யாத்திரை இனிய முறையில் நிறைவுற்ற பின் குருநாதர் அல்லது தாயார் மூலம் மாலை கழற்றும் போது சொல்லும் மந்திரத்தை கூறி மாலையை கழற்றி சந்தனத்தில் நனைத்து ஐயப்பன் திருவுருவப்படத்திற்கு முன்னால் வைத்துவிட்டு தீபாராதனை காட்டி விரதம் முடிக்க வேண்டும்.

கலாநிதி சிவஸ்ரீ
ராமசந்திர குருக்கள் பாபு சர்மா

# மலையக எழுச்சியை சித்திரிக்கும் சிறுகதை திருச்செந்தூரன் எழுதிய 'உரிமை எங்கே?'



கல்கி நடத்திய சிறுகதைப் போட்டியில் இரண்டாவது பரிசு பெற்ற திருச்செந்தூரனின் 'உரிமை எங்கே?' (05.02.1961)என்ற சிறுகதை மலையக மக்களின் அடிப்படை உரிமைக்குரலை எழுத்திலே வார்த்த முதல் கதையாக வரலாற்று முக்கியத்துவம் பெறுகிறது.

இந்தக் கதை மலையக மக்களுக்கு இலங்கையில் இழைக்கப்பட்ட அநீதியின் சரித்திரத்திலே ஊன்றி நிற்கிறது. 1948 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட பிரஜாவுரிமைச் சட்டத்தினால், வாக்குரிமை இழந்த இந்திய வம்சாவழித் தமிழர்களுக்கு, பிரஜாவுரிமை வழங்கும் நோக்கில் 1949 ஆம் ஆண்டு இந்திய, பாகிஸ்தானிய குடியிருப்பாளர்களுக்கான (பிரஜாவுரிமை) சட்டத்தை இலங்கை அரசு அடுத்த ஆண்டிலேயே கொண்டு வந்தது. இச்சட்டத்தின் கீழ் மலையகத் தமிழர்கள் பிரஜாவுரிமை பெறுவது என்பது பெருங்கடினமாயிருந்தது.

ஆங்கிலத்தில் இருந்த இந்த விண்ணப்பப் பத்திரங்கள் எட்டு வித்தியாசமான வகைகளில் இருந்தன. சரியான பத்திரங்களில் சமர்ப்பிக்கப்படாத விண்ணப்பங்கள் உடனேயே நிராகரிக்கப்பட்டன. நன்கு படித்தவர்களே இந்த விண்ணப்பப் படிவங்களை நிரப்பக் கஷ்டப்பட்டிருப்பார்கள். அனைத்திற்கும் ஆதாரங்கள் பத்திரத்துடன் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். 1949 ஆம் ஆண்டுச் சட்டத்தை எதிர்த்து இலங்கை_இந்திய காங்கிரஸ் போராட்டம் நடத்தியது. இந்தச் சட்டத்தை பகிஷ்கரித்து, யாரும் இதற்கு விண்ணப்பிக்கக் கூடாது என்று இலங்கை இந்திய காங்கிரஸ் அழைப்பு விடுத்திருந்தது.

பிரஜாவுரிமை பெறுவதற்கான விண்ணப்பங்களை அனுப்புவதற்கு இலங்கை அரசு 1949 தொடக்கம் 1951வரை இரண்டு ஆண்டுகால அவகாசம் கொடுத்திருந்தது. பகிஷ்கரிப்பை மேற்கொண்ட இலங்கை இந்திய காங்கிரஸ் பத்து மாதங்களின் பின்னர் தனது பகிஷ்கரிப்புப் போராட்டத்தைக் கைவிட்டு, மக்களை பிரஜாவுரிமைக்கு விண்ணப்பிக்குமாறு கோரியது. மக்கள் இலட்சக்கணக்கில் முண்டியடித்துக் கொண்டு திடீரென விண்ணப்பப்படிவங்களை கோரியபோது, விநியோகிக்க அரசிடம் அந்த அளவு படிவங்களும் இருந்திருக்கவில்லை.

அவசரகதியில் பிழைகளோடு விண்ணப்படிவங்கள் அனுப்பப்பட்டிருந்தன. அரசு எளிதாக அவற்றை நிராகரிக்கக் கூடியதாகவிருந்தது. விண்ணப்பங்களை விசாரித்த விசாரணை அதிகாரிகள் கடூரமானவர்களாக இருந்தனர்.மொத்தம் கிடைக்கப் பெற்ற 237,034 விண்ணப்பங்களில் 160,000 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன. விண்ணப்பித்த 825,000 பேரில் 134,188 பேர் மட்டுமே பிரஜாவுரிமை பெற்றனர். விண்ணப்பித்தவர்களில் 16.2 வீதத்துக்கு மட்டுமே பிரஜாவுரிமை கிடைத்தது. 83 வீதமானோர் நிராகரிக்கப்படிருந்தனர்.

'காலை மூன்று மணி. பறங்கிமலைத் தோட்டம் ஏழாம் நம்பர் லயத்தில் உள்ள சுப்பையா நாயக்கரின் காம்பிரா வில் கொழுந்து கணக்கப்பிள்ளையிடம் கைமாற்றாக வாங்கிய அலாரம் கணீர் என்று ஒலித்தது' என்று திருச்செந்தூரனின் 'உரிமை எங்கே?' என்ற சிறுகதை ஆரம்பிக்கிறது.

இந்த அலார ஒலி மலையகச் சிறுகதையின் எழுச்சிக்கான அலார ஒலி. மலையக உரிமையின் எழுச்சிக்கான அலார ஒலி.

சுப்பையா நாயக்கரை மட்டுமல்ல, மலையக மக்களைத் தூக்கத்திலிருந்து எழுப்பும் அலார ஒலி.

ஒரு சிறுகதைக்கான அற்புதமான ஆரம்பம் இது.

சுப்பையா நாயக்கரின் கனவுகள் சிதறி நொருங்குவதை தத்ரூபமாகச் சித்திரிக்கிறார் திருச்செந்தூரன்.

தலதா மாளிகை நெருங்க நெருங்க நடுப்பகல் பூசையின் மணியோசை டாங்.. டாங்.. என்று பலமாக ஒலித்தது. ஒவ்வொரு ஒலியும் 'உரிமை எங்கே? உரிமை எங்கே?' என்று நாயக்கரின் செவியில் மாத்திரமல்ல, மலைநாடு முழுவதுமே கேட்பது போல இருந்தது. என்று கதைக்கு முத்தாய்ப்பு வைக்கிறார் திருச்செந்தூரன்.

மு.நித்தியானந்தன்

# நஷ்டமீட்டும் நிறுவனங்களை சீரமைக்க நான்கு அடிப்படை அம்சக் கொள்கைகள்

## SLT குழுமத்தின் தவிசாளர் முன்மொழிவு



இலங்கை நெருக்கடி நிலையிலிருந்து மீள்வதற்கு, சொத்துகளை விற்பனை செய்வதென்பது இலகுவான தீர்வாக அமைந்திருந்தாலும், நஷ்டம் அடைந்து வரும் அரச நிறுவனங்களை மறுசீரமைப்பதனூடாக, அவற்றை தூய அனுபவம் வாய்ந்த கூட்டாண்மை அதிகாரிகளைக் கொண்டு நிர்வகிப்பதனூடாக இலாபமீட்டக் கூடிய வகையில் மாற்றியமைக்க முடியும் என SLT குழும தவிசாளர் ரொஹான் பெர்னாண்டோ தெரிவித்தார்.

அரச உரிமை நிறுவனங்கள் – அவை முறையாக நிர்வகிக்கப்படுகின்றனவா அல்லது தவறாக நிர்வகிக்கப்படுகின்றனவா எனும் தலைப்பில் இடம்பெற்ற CMA தேசிய நிர்வாக கணக்கீட்டு மாநாடு_ 2022 நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போது பெர்னாண்டோ இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து குறிப்பிடுகையில், “எமது நிறுவனத்தை (SLT) உதாரணமாக எடுத்துக் கொண்டால், தொழிற் சங்கங்கள் மற்றும் ஊழியர்கள் மத்தியில் நம்பிக்கையைப் பெறுவதற்கு, எமது அடிப்படைக் கொள்கைகளான மோசடியின்மை, வினைத்திறனை மேம்படுத்துவது, விரயத்தைக் குறைப்பது மற்றும் நிர்வாகத்தை ஈடுபடுத்துவது போன்றன தொடர்பில் அவர்களின் உடன்பாட்டைப் பெற்றோம். இந்த நான்கு அம்சங்களையும் முன்வைத்ததனால் எமது ஊழியர்களுடன் எவ்விதமான முரண்பாடுகளுமின்றி எம்மால் இயங்க முடிந்தது” என்றார்.

அவர் தொடர்ந்து விளக்கமளிக்கையில்“அளவுக்கதிமான சுமையைக் கொண்டுள்ள எமது போக்குவரத்துத் துறையை எடுத்துக் கொண்டால், புகையிரதத் திணைக்களம் நிலையான உட்கட்டமைப்புகளில் பல பில்லியன் ரூபா பெறுமதியான சொத்துகளைக் கொண்டுள்ளது. நெரிசலான நேரத்தில் பொதுப்போக்குவரத்து சேவையில் பற்றாக்குறை நிலவுகின்றமை, அளவுக்கதிகமாக பயணிகளை ஏற்றுகின்றமை, நெருக்கடி, போதியளவு திட்டமிடல் இன்மை, எரிபொருள் விரயம் போன்றன தொடர்பில் அவசரமாக கவனம் செலுத்த வேண்டும். தேசிய சுமையிலிருந்து இலாபமீட்டும் அரச நிறுவனமாக மாற்றக் கூடியவாறு இது அமைந்துள்ளது” என்றார்.

நாட்டின் சட்டக் கட்டமைப்பு தொடர்பில் குறிப்பிடுகையில், “டிஜிட்டல் கட்டமைப்புகளினூடாக இலங்கையின் நீதிச் செயன்முறையை மேம்படுத்தி, காலதாமதமின்றி தீர்ப்புகளை வழங்க முடியும்.

அதிகளவான வழக்குகள் மற்றும் தீர்வுகளை வழங்குவதற்கு நீண்ட காலம் எடுக்கின்றமை போன்றன காரணமாக, எமது குடிமக்களுக்கு பொருத்தமான சட்ட மீளமைப்பு மற்றும் சமத்துவமான நிவாரணத்தை பெறுவதற்கான வாய்ப்புகள் இல்லை" என்று தெரிவித்தார்.

பெர்னாண்டோ மேலும் குறிப்பிடுகையில் “எமது விவசாய பெறுமதிச் சங்கிலியும் பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்துள்ளது. அதுபோலவே எமது சுகாதாரப் பராமரிப்புத் துறையும் சுமைகளை எதிர்கொண்டுள்ளது. முக்கியத்துவம் வாய்ந்த துறைகள் மற்றும் சேவைகள், வினைத்திறன் வாய்ந்த, வெளிப்படையான மற்றும் இலாபமீட்டும் அமைப்புகளாக மாற்றப்படுவதனூடாக, மக்களின் வாழ்க்கையை மாற்றியமைக்க அவற்றை பயன்படுத்த முடியும்" என்றார்.

“நாம் பல சவால்களுக்கும் பிரச்சினைகளுக்கும் முகங்கொடுத்துள்ளோம். நெருக்கடிகள் நிலவுகையில், அவற்றை வாய்ப்புகளாக மாற்றிக் கொள்வதற்கு, புதிய வழியில் பார்வையிடுவதுடன், சிந்திப்பது மற்றும் பதிலளிப்பது போன்றன தேவைப்படுகின்றன.

இதனை எவ்வாறு செய்யலாம் என்பதை SLT உணர்த்தியுள்ளது. வாய்ப்புகளை கையகப்படுத்துவதற்கு சிறந்த உதாரணமாக SLT அமைந்திருப்பதுடன், தேசத்துக்கு அவசியமான மாற்றத்தை ஏற்படுத்தக் கூடியதாக அமைந்துள்ளது” என பெர்னான்டோ மேலும் தெரிவித்தார்.

# இரசாயன பசளையால் நெல் விளைச்சலை அதிகரிக்கலாம் ஆனால் உடல் ஆரோக்கியத்துக்கு வலு சேர்க்காது

**மட்டக்களப்பு சவுக்கடி கிராமத்தைச் சேர்ந்த யூசைராசா, 40 வயதுடையவர் 16 வயது முதல் விவசாயத் துறையில் ஈடுபாடுடையவர். அவரைச் செல்லமாக ராசா என்பார்கள். அவியாப்பண்ணை எனவும் எல்லோரும் அழைப்பார்கள். இவர் வீட்டுத் தோட்டச் செய்கை குறித்து தினகரனுக்கு வழங்கிய கருத்து,...**



கே: **இன்றைய பொருளாதார நெருக்கடியில் வீட்டுத் தோட்டச் செய்கை ஊக்குவிப்புக்கான முக்கியமான களம் திறந்து விடப்பட்டுள்ளது. இரசாயனப் பசளையின்மையால் நெல் வேளாண்மைச் செய்கை பாரியளவு பாதிக்கப்பட்டிருந்த வேளையில் சமூகத் தொண்டு நிறுவனங்களின் ஊக்குவிப்பின் காரணமாக சேதனப் பசளையின் மூலம் வீட்டுத் தோட்டச் செய்கையின் விளைச்சலும் அறுவடையும் அதிகரித்துள்ள நிலையில் உங்களது வீட்டுத் தோட்டச் செய்கையில் முன்னெடுக்கப்படுகின்ற பயிர்ச் செய்கை பற்றிக் கூறுவீர்களா?**

ப: இன்றைய கால கட்டம் மிகக் கஷ்டமான கால கட்டம். விவசாயத்தைப் பொறுத்தவரையில் உடனே நாட்டி உடனே காய்த்து பயன்தராது. இரண்டு மூன்று மாதங்களுக்குப் பிறகுதான் பயிர் காய்க்கும்.மழை அதிகமாகப் பெய்தால் மரக்கறிவகைகள் காய்க்காது.எட்டாம் மாதம் வரட்சிப் பாதிப்பு வரும். இக்கால கட்டத்தில் நட்டால் விதைகள் முளைக்காது.வெப்பமான காற்று வீசினால் எந்தவிதமான விதைகளை நாட்டினாலும் முளைக்காது. தோட்டப்பயிர்ச் செய்கையாளர்கள் இத்தகைய சவால்களை எதிர்கொண்டுதான் பயிர்ச் செய்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் சவுக்கடி கிராமத்தில் நான் வசிக்கின்றேன். இப்பிரதேச மண் நிலத்தில் எல்லா வகையிலான பயிர்ச் செய்கைகளையும் மேற்கொள்ள முடியும். இக்கிராமம் மிகவும் பின்தங்கிய கிராமம். செங்கலடி கமநல சேவைப் பிரிவுக்குட்பட்ட பிரதேசம் எங்களுடைய சவுக்கடி கிராமம்.

மூன்று ஏக்கர் நிலப்பரப்பில் பயிர்ச் செய்கை மேற் கொண்டு வருகின்றேன்.





ஒரு ஏக்கர் காணி நிலத்தில் முந்திரிகை செய்துள்ளேன்.மற்றைய காணியில் 100 தென்னம் பிள்ளை வைத்துள்ளேன். மற்றுமொரு பகுதியில் மாதுளை மரம் 1000 க்கும் மேற்பட்ட கன்றுகள் நாட்டியுள்ளேன். இவை இந்தியாவிலிருந்து வழங்கப்பட்டவையாகும். இது நாட்டி தற்போது ஆறு மாதமாயிற்று. இதன் மூலம் பாரியதொரு அறுவடையை மேற்கொள்ளலாம் என்று எதிர்பார்த்துக் காத்திருகின்றேன். மிகுதிப் பகுதிகளில் சிறுதோட்டப் பயிர்ச் செய்கை மேற் கொண்டு வருகின்றேன்.



தற்போதைய சூழலில் பயிர்களின் விளைச்சல் என்பது நம் நாட்டில் உற்பத்தி செய்யப்படும் 'சேதனப் பசளை' என்ற விடயத்தில் இருந்தே வரையறுக்கப்பட்டுள்ளது. வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்படும் இரசாயனப் பசளையின் மூலம் அல்ல என்பதை தெளிவாகப் புரிந்து கொள்ளலாம். பெரும்பாலும் பயிர்ச் செய்கை பற்றிய யோசனை தவறாக சித்தரிக்கப்படுகிறது. இரசாயனப் பசளையின் தேவை நெல் விளைச்சலின் அதிகரிப்புக்கு அவசியமாக இருந்தாலும் உடல் ஆரோக்கியத்திற்கு வலு சேர்ப்பதாக இல்லை. எனவே தற்போதைய விவசாயச் செய்கைகளில் புதிய புதிய மாற்றங்கள் அவசியம்.

கே: **நாட்டின் இன்றைய பொருளாதார சூழ்நிலையை கருத்திற் கொண்டு நீங்கள் முன்னெடுக்கின்ற ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் யாவை?**

ப: என்னுடைய இந்தப் பயிர்ச் செய்கைகளை இரசாயனப் பசளைகள் இல்லாமல் முழுக்க முழுக்க சேதனப் பசளைகளைப் பயன்படுத்தியே செய்து வருகின்றேன். நானே சேதனப் பசளையை உற்பத்தி செய்கின்றேன். வேறு எங்கும் வாங்குவது கிடையாது. மேலதிகமாக செய்யும் சேதனப் பசளைகளை விற்பனை செய்தும் வருகின்றேன். அதன் மூலம் வருமானமும் கிடைக்கின்றது. இந்தச் சேதனப் பசளையை ஒரு கிலோ கிராம் ரூபாய் 20 க்கு விற்பனை செய்கிறேன். குமியல் முறையில் செய்கின்றேன். மண்புழுவின் மூலம் சேதனப் பசளை செய்கை பண்ணத் தெரியும். அதற்கு பெரிய பக்குகள் கட்டி செய்யலாம். அதற்கான வசதிகள் போதாது.

ஆனாலும் நான் இரண்டு முறையில் சேதனப் பசளைகள் செய்து வருகின்றேன். பெரிய குழாய்களை நேராக நிமிர்த்தி வைத்து அதற்குள் இலைகுலை சருகுகளையும் மிருகக் கழிவுகளையும் நிரப்பி அதன் அடியில் இருந்து சேதனப் பசளையை பெற்றுக் கொள்கின்றேன்.நான்கு பெரிய கொட்டு வைத்து புழு உரம் மாதிரித்தான் வரும். அது நல்ல உரம்.அந்த உரத்தின் தன்மை நல்லது.குமியல் முறையில் உற்பத்தி செய்வதை ஒரு கிலோ கிராம் ரூபாய் 20 வுக்கு விற்பனை செய்கின்றேன். இது மொத்தமாக விற்பனை செய்வதாயின் ஒரு கிலோ கிராம் 20 ரூபாவுக்கும் சில்லறை விலைக்கு ஒரு கிலோ கிராம் 25 ரூபாவுக்கும் விற்பனை செய்து வருகின்றேன்.

சவுக்கடி கிராமத்தில் தோட்டச் செய்கை பண்ணுபவர்கள் மிகக் குறைவு.ஆதலால் இங்கு இதனை பெரியளவில் சந்தைப்படுத்த முடியாது. இந்தச் சேதனப் பசளை வாங்குபவர்களின் விகிதம் குறைவு. எல்லோரும் தோட்டம் செய்வார்களாயின் வாங்கும் விகிதம் அதிகரிக்கும். ஒரு கிழமைகளில் இரண்டு மூன்று பேர் வந்துதான் வாங்குவார்கள்.

பெரியளவில் வந்து வாங்கும் அளவுக்கு இல்லை.எல்லோரும் மீனவர் என்ற படியால் தோட்டம் செய்கை பண்ணுபவர்கள் மிகக் குறைவு. சாதாரண முறையில்தான் இங்குள்ள மக்கள் வீட்டுத் தோட்டச் செய்கையை மேற்கொண்டு வருகிறார்கள். சேதனப் பசளையை என்னுடைய தேவைக்கு ஏற்ற வகையில் தான் செய்து வருகின்றேன். விற்பனைக்கு என்று செய்யவில்லை.யாரும் கேட்டால் கொடுப்பதே தவிர அதற்கு சந்தை வாய்ப்பை பெருக்கிக் கொண்டு செய்வதற்கு இன்னும் முன்வரவில்லை.

சேதனப் பசளையை தயாரிப்பதற்கென தேங்காய் உரி மட்டையை எடுத்து அதில் இருந்து தும்பை தரம் பிரித்து எடுப்பதற்கான ஒரு இயந்திரத்தைப் பயன்படுத்தி வருகிறேன். இதனுடன் வேறு கழிவுப் பொருட்களைச் சேர்த்து சேதனப் பசளை செய்து வருகின்றேன். பெரிய குழாயில் குறிப்பாக ஒரு உமி அடுப்பு மாதிரியான முறையில் செய்கை பண்ணுகின்றேன்.

கே: **இன்றைய சூழலில் சேதனப் பசளையின் மூலம் விவசாயத் துறையில் முன்னேற்றம் கண்டு வரும் நீங்கள் இந்த துறையில் செழிப்பாக விளங்குவதற்கு தூண்டுதலாக இருந்தவர்கள் பற்றிக் கூறுவீர்களா?**

ப: எனக்கு 40 வயது ஆகிறது. ஆனால் நான் 16 வயதில் தோட்டம் செய்ய ஆரம்பித்தேன். எங்கள் குடும்பம் விவசாயக் குடும்பம். அம்மாவின் வீடு படுவான்கரை வங்களாவடி. தாய் தந்தையர்கள் முழு நேரமும் விவசாயச் செய்கையில் ஈடுபடுவார்கள். அந்த அனுபவமும் ஆர்வமும் தான் எனக்கு ஏற்பட்டது.



எங்களுக்கு முதன் முதலாக காவேரிக் கலா மன்றத்தின் ஊடாக விவசாயச் செய்கைக்காக தண்ணீர் வசதியை ஏற்படுத்தித் தந்தார்கள். தண்ணீர் வசதியில்லா விட்டால் விவசாய செய்கையை மேற்கொள்ள முடியாது. காவேரிக் கலா மன்றம் தான் என்னுடைய விவசாய முயற்சியின் தோற்றுவாயாக அமைந்துள்ளது. அவர்கள் வழங்கிய தண்ணீர் வசதிதான் பெரும் பாக்கியம். அவர்கள் வீட்டுக்குள்ளே தண்ணீர் மோட்டரை வைத்து இயக்கக் கூடியளவுக்கு செய்து தந்தார்கள். அது பாதுகாப்பாக இன்று வரை இயங்குகின்றது. அது எனக்கு மிகப் பயனுள்ளதாக அமைந்துள்ளது. இந்தச் சந்தர்ப்பத்தில் நான் காவேரிக் கலா மன்றத்தினருக்கு நன்றியை தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

அதேவேளையில் விவசாயத் திணைக்களம் மற்றும் பிரதேச செயலகம் போன்றவற்றினுடைய உதவிகளும் இடைக்கிடையே கிடைக்கும். அவர்கள் கடையில் வாங்கித் தரும் விதைகள் உண்மையிலேயே பயனளிப்பதில்லை.

நாங்கள் தொடர்ச்சியாக நாற்று உற்பத்திகளைச் செய்து தான் செய்கின்றோம். புடலை, கத்தரி போன்றவைகளுக்கான விதைகளை ஆதிகால இனத்துக்குரிய விதைகளையே தொடர்ந்தும் பயன்படுத்தி வருகின்றேன்.

வேறு எங்கும் போவதுமில்லை. ஐந்து பெண் பிள்ளைகள் இருக்கிறார்கள். நாங்கள் எல்லோரும் ஏழு பேர் மொத்தம். வீட்டிலுள்ள எல்லோரும் பங்களிப்பு நல்குவார்கள். தனி ஒருவர் அல்ல. எல்லோரும் சேர்ந்துதான் செய்கின்றோம்.

தற்போது கத்தரி, பயிற்றை, மரவெள்ளி, பீர்க்கங்காய், வெண்டி ஆகியன நாட்டி இருக்கின்றேன். இவைகளுக்கு இரண்டு மாதங்கள் ஆகின்றன. கத்திரி காய்த்துள்ளன. இந்த மாதம் பயிர்களை அறுவடை செய்யலாம். இந்த வீட்டுத் தோட்டப் பயிர்ச் செய்கையின் மூலம் ஒரு நாளைக்கு ரூபா 1000 க்கு மேல் சம்பாதிக்கலாம். சிலவேளை இது அதிகரிக்கவும் கூடும். குறையவும் கூடும்.

ஏழு நாட்டு மாடுகள் வைத்துள்ளேன். மாதுளம் கன்று நடுவதற்கு பிரதேச செயலகம் உதவி செய்து அதற்குத் தேவையான உரங்களை நாம்தான் போட வேண்டும். கோழி, வாத்து, முயல், தாரா, வான்கோழி இப்படி கொஞ்சம் கொஞ்சமாக வைத்திருக்கின்றேன். இப்படி காலத்திற்கு ஏற்ப பயன்தரக் கூடிய மிருகங்களை வளர்த்துக் கொண்டும் பயிர்ச் செய்கைகளையும் செய்து வருகின்றேன்.



கே: **உங்கள் பிரதேசத்தில் காவேரிக் கலாமன்றம் மேற்கொள்கின்ற பணிகள் பற்றிக் கூறுவீர்களா?**

ப: எமது வீட்டுத் தோட்டங்களில் நல்ல விளைச்சலையும் அறுவடைகளையும் கண்டு வருகின்றோம். இன்று இரசாயனப் பசளை இல்லாமல் விவசாயத் துறையில் பாரிய வீழ்ச்சி நிலையை அடைந்து கொண்டிருக்கும் கால கட்டத்தில் வீட்டுத் தோட்டப் பயிர்ச் செய்கையில் ஒரு நிறைவான முன்னேற்றத்தைக் காணலாம். இதற்குக் காரணம் காவேரிக் கலா மன்றம். அடிக்கடி இப்பிரதேசத்தில் முன்னெடுக்கும் விவசாயத் துறை தொடர்பில் ஊக்குவிப்பும் விவசாயம் தொடர்பான விழிப்புணர்வு வழிகாட்டல் ஆகும். சேதனப் பசளை எவ்வாறு தயாரித்தல், வீட்டுத் தோட்டச் செய்கையாளர்களுக்கிடையே போட்டி வைத்து விருது, சான்றிதழ்கள் வழங்குதல், பயிற்சி செயலமர்வுகள் நடத்துதல், ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்குதல் போன்ற இன்னோரன்ன எத்தனையோ விடயங்களைக் குறிப்பிடலாம்.

என்னுடைய முழு நேரமும் விவசாயம் தான். நான் வேறு எந்த தொழில் முயற்சிகளிலும் ஈடுபடுவதில்லை. பெருமளவானோர் எமது பிரதேசத்தில் மீன் பிடித் துறையில் நாட்டம் உடையவர்களாக இருக்கிறார்கள். ஆனால் நான் வந்து விவசாயத்தையே காதலிக்கிறேன். அதன் மீது அன்பு வைத்திருக்கிறேன். அதனால் நிறைய பயன் அடைந்து வருகின்றேன்.

பயிர்கள் தழைத்து வரும் போது அவற்றோடு கதைப்பேன். பயிர்களை நாட்டி விட்டு நான் பாராமுகமாக இருந்ததில்லை. அவற்றை தினமும் பார்த்துக் கொண்டே இருப்பேன்.





இப்பிரதேசத்தில் என்னைப் போன்று 30 பேர் அளவில் வீட்டுத் தோட்டச் செய்கையாளர்கள் இருக்கிறார்கள். அவர்களுடன் ஒப்பிடும் போது நான் முன்னணியில் இருக்கிறேன் என்றுதான் கூறலாம்.

வீட்டுத் தோட்டச் செய்கையாளர்களுக்கு வேலைக்கான உணவு என்ற செயற்திட்டம் ஒன்று காவேரிக் கலா மன்றத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. உண்மையிலேயே இதன் மூலம் வீட்டுத் தோட்டச் செய்கையாளர்கள் பாரியளவு நன்மை அடைந்து வருகிறார்கள். தற்போது நாட்டினுடைய பொருளாதார நெருக்கடியான கால கட்டத்தில் அன்றாட வாழ்க்கையில் பொருளாதார சுமை அதிகரித்துக் காணப்படுகிறது. எனினும் இந்நிலைமையில் காவேரிக் கலாமன்றம் நாங்கள் மனம் சோர்ந்து போய் வீழ்ந்து விடாமல் வேலைக்கான உணவு என்ற செயற்திட்டத்தின் மூலம் மாதாந்தக் கொடுப்பனவை இலவசமாக வழங்கி வருகின்றது. இவற்றை அவர்கள் ஒரு குடும்ப அங்கத்தவர்களுடைய எண்ணிக்கைக்கு ஏற்ப வழங்கி வருகிறார்கள். உண்மையிலேயே இவை எங்களுக்கு பெரியதொரு மன தைரியத்தையும் உற்சாகத்தையும் தரக் கூடியவையாக உள்ளன. இவை மட்டக்களப்பில் மட்டுமல்ல அநுராதபுரம், வவுனியா. மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் போன்ற பல பாகங்களிலும் வேலைக்கான உணவுத் திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்பது ஒரு முக்கிய செய்தியாகும்.

இந்த வேலைக்கான உணவு என்ற வேலைத் திட்டத்தின் மூலம் வழங்கப்படும் ஊக்குவிப்பு கொடுப்பனவு வாயிலாக விவசாயிகள் இன்னுமின்னும் மிகுந்த ஆர்வத்துடன் வீட்டுத் தோட்டச் செய்கையில் தீவிரமான நாட்டம் கொண்டுள்ளனர். வீட்டுத் தோட்டம் செய்கை பண்ண ஆர்வம் இல்லாதவர்கள் கூட நாமும் வீட்டுத் தோட்டச் செய்கையில் ஈடுபட்டால் என்ன? நமக்கும் வேலைக்கான ஊக்குவிப்பைப் பெற்றுக் கொள்ளலாம் என்ற ஆசையும் ஆர்வமும் இப்போது கண பேருக்கு வந்திருக்கிறது. இது நல்லதொரு முயற்சி என்று நான் கருகின்றேன்.

அவை மட்டுமல்ல இந்தக் காவேரிக் கலா மன்றத்தின் மூலம் நல்ல விவசாயிகளை இனங்கண்டு அவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

ஒவ்வொரு வருடமும் சிறந்த விவசாயிகளைத் தெரிவு செய்து அவர்களுக்கு வருடா வருடம் பொன்னாடைகள் போர்த்தி விருதுகள் வழங்கி கௌரவித்து வருகிறார்கள். இவை போல நாட்டை மீண்டெழச் செய்வதற்கான மிகவும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை அவர்கள் காத்திரமான முறையில் முன்னெடுத்து வருகிறார்கள் என்று குறிப்பிட்டுச் சொல்ல முடியும்.

இக்பால் அலி...

## ரயிலுடன் மோதி விபத்தை...

*நேற்றுக்காலை (15) 9.30 மணியளவில் கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திலிருந்து நீர்கொழும்பு நோக்கி புறப்பட்ட இந்த ரயில், குரணை, ரயில் நிலையத்துக்கருகிலுள்ள ரயில் கடவையை கடக்கையில், கொள்கலன் லொறியுடன் மோதி விபத்துக்குள்ளானது.*

## 200 வருட பழைமையான...

*இம்மரம் சரிந்து விழுந்ததில், முன்னாலிருந்த வீட்டு மதில் பகுதியளவில் சேதமடைந்துள்ளதுடன் வீதியில் பயணிக்க முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது.*

## மாணவர் விசா பெற்றுத்தருவதாக...

அளித்துள்ளதாகவும் போலீசார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு, சுமார் மூன்று முதல் நான்கு கோடி ரூபா வரை மோசடி செய்துள்ளமை விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. நிரந்தர வதிவிடமின்றி இடத்துக்கு இடம் சென்று தலைமறைமாக வாழ்ந்து வரும் இவர், மாளிகாவத்தை போதிராஜ மாவத்தையில் உள்ள வீடொன்றில் பதுங்கி இருந்த போதே கைது செய்யப்பட்டார். மோசடியில் சிக்கிய நபர் ஒருவர், கடந்த (22) கொழும்பு மோசடி விசாரணை காரியாலயத்தின் 06 ஆம் பிரிவில் முறைப்பாடு செய்திருந்தார். இதையடுத்தே இவர், கைதானார்.முறைப்பாட்டாளரின் இருபத்தேழு லட்சத்து முப்பத்தி ஐயாயிரம் ரூபாவை இச்சந்தேக நபர் மோசடி செய்துள்ளார். கொழும்பு மோசடி விசாரணைகள் காரியாலயத்தில் இவருக்கு எதிராக மேலும் மூன்று முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஐம்பத்தெட்டு இலட்சத்து பதினெட்டாயிரத்து எண்ணூறூ ரூபாவை இவர் மோசடி செய்துள்ளதாக அந்த முறைப் பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## உள்ளூராட்சி சபைத் தேர்தல்...

உறுதியளித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் பாராளுமன்றத்திலுள்ள (16) கட்சிகள் மற்றும் குழுக்களின் தலைவர்கள் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்குச் சென்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர்களைச் சந்தித்த போதே புஞ்சிஹேவா இந்த உறுதிமொழியை வழங்கினார்.

தேர்தலை பிற்போடுமாறு ஜனாதிபதி அல்லது அரசாங்கத்தின் அழுத்தத்துக்கு ஆளாக வேண்டாமென, தலைவர்கள் விடுத்த கோரிக்கைக்கு பதிலளித்த ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா, இது தொடர்பான உறுதிமொழியை வழங்கினார்.

கலந்துரையாடலின் முடிவில், உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துமாறு எழுத்து மூலமான கோரிக்கையடங்கிய கடிதத்தை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவரிடம் கையளித்தார்.

தேர்தல்கள் ஆணைக்குழு திட்டமிட்டபடி தேர்தலை நடத்துவதற்கு இடையூறு ஏற்படாத வகையில் பாடுபடுவதாக இன்று (15) கூடிய கட்சித் தலைவர்கள், தேர்தல்கள் ஆணைக்குழு தலைவரிடம் வாக்குறுதியும் அளித்துள்ளனர்.

## மறைந்த அமரகீர்த்தி...

ரணில் விக்கிரமசிங்க, நேற்று முன்தினம் (14) கையளித்தார்.

பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் நடைபெற்ற ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களின் குழுக் கூட்டத்தின் பின்னர் இந்தப் பணத்தை ஜனாதிபதி கையளித்தார்.

பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ அதற்கான காசோலையை ஜனாதிபதியிடம் கையளித்ததுடன், ஜனாதிபதி அதனை மறைந்த பாராளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துகோரளவின் மனைவி மற்றும் மகன்களிடம் வழங்கினார்.

பாராளுமன்ற உறுப்பினர்கள் 183 பேர் அதற்காக நிதியுதவி அளித்துள்ளனர். பாராளுமன்ற உறுப்பினர்களின் மாதிவெல வீடமைப்புத் தொகுதியிலுள்ள ஆளுங்கட்சியைச் சேர்ந்த 20 பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட "மாதிவெல மிதுரோ" கழகம் மறைந்த பாராளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துகோரலவுக்காக இந்நிதியை சேகரிக்க ஆரம்பித்தது. அதன் பின்னர் ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்களின் ஆதரவும் கிடைத்ததாக பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ இங்கு தெரிவித்தார்.

கொல்லப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துகோரளவுக்கு ஓய்வூதியம் வழங்க ஏற்பாடு செய்யுமாறு பிரதி சபாநாயகர் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்தார்.

இதற்கு முன்னர் படுகொலை செய்யப்பட்ட மாத்தறை மாவட்ட முன்னாள் அமைச்சர் கீர்த்தி அபேவிக்கிரம எம். பிக்கு ஓய்வூதியம் வழங்கப்படுவதனால் அத்துகோரளவின் குடும்பத்துக்கும் அவரது ஓய்வூதியத்தை பெற்றுக் கொடுக்க முடியுமென்றும் அவர் கூறினார்.

இந்நிகழ்வில் பிரதமர் தினேஷ் குணவர்த்தன, முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரும் கலந்துகொண்டனர்.

கடந்த மே மாதம் (09) இடம்பெற்ற கலவரத்தில், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொலன்னறுவை மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துகோரள உயிரிழந்தார்.

## மின்சாரம் கொள்முதல்...

வகுப்பதில் முன்னுரிமைகளை அடையாளம் காண்பதற்காகவே இக்குழு கூடியது. நிதி அமைச்சு, தொழில்நுட்ப அமைச்சு மற்றும் கணக்காய்வாளர் நாயகம் திணைக்களத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அதிகாரிகளும் இந்த சந்திப்பில் கலந்துகொண்டனர்.

அனைத்து அரச நிறுவனங்களுக்கான கொள்வனவு செயற்பாட்டில், மின் தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதற்கு பாராளுமன்றத்தின் ஊடாக கொள்கையொன்றை தயாரிக்க வேண்டியதன் அவசியத்தை குழுவின் தலைவர் நாமல் ராஜபக்ஷ சுட்டிக்காட்டினார்.

அதன்படி, ஜுன் 2023 க்குள், அமைச்சரவை மற்றும் அமைச்சுக்களுக்கான மின் கொள்முதல் செயல்முறையை அறிமுகப்படுத்துவதற்கும், 2025 க்குள் நாட்டிலுள்ள அனைத்து அரச நிறுவனங்களுக்கும் மின் கொள்முதல் செயல்முறையை அறிமுகப்படுத்துவதற்கும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான சாத்தியக்கூறுகள் குறித்தும் விவாதிக்கப்பட்டது.

## பயணிகள் பஸ் சேவை...

கட்டணத்தை அறவிடுவதாக தெரிவித்தே, இப்பணிப்புறக்கணிப்பு இடம்பெறவுள்ளதாக ஒன்றிணைந்த தொழிற்சங்க சம்மேளனம் குறிப்பிட்டுள்ளது.

## நான்கு மாவட்டங்களுக்கு...

மேற்கொள்ளும் இந்த முன் முயற்சியின் நோக்கமாகும். யூரியா உரத்தைக் கையளிக்கும் வைபவத்தில் கருத்து தெரிவித்த விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர, இலங்கையில் விவசாய உற்பத்தியைப் பெருக்குவதில் அமைச்சு காட்டும் ஆழ்ந்த அக்கறையை வலியுறுத்தியதுடன்,FAO வழங்கும் உதவிக்கு தனது நன்றியை தெரிவித்தார். 'அவசியமான விவசாய உள்ளீடுகள் நெற் செய்கையாளர்களுக்குக் கிடைக்குமாயின் நாட்டின் உணவுப் பாதுகாப்பை மீண்டும் வழமை நிலைக்குக் கொண்டு வரமுடியும். மிகவும் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு அத்தியாவசிய உரங்களும் ஏனைய உள்ளீடுகளும் கிடைப்பதை உறுதிப்படுத்துவதற்கு இலங்கை அரசாங்கத்துடன் நெருங்கிய முறையில் ஒத்துழைப்பதற்காக, FAO அமைப்புக்கு நன்றி கூறுவதாகவும் அவர் தெரிவித்தார். 'பொருளாதார நெருக்கடியின் மோசமான தாக்கங்களிலிருந்து இலங்கை மக்களைப் பாதுகாப்பதற்காக ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் கடந்த ஜுன் மாதத்திலிருந்து பல்துறை உதவிகளை வழங்கி வருகின்றது. 3.4 மில்லியன் மக்களை இலக்காகக் கொண்டு சமீபத்தில் மறுசீரமைக்கப்பட்ட மனிதநேய தேவைகள் மற்றும் முன்னுரிமைகள் திட்டத்தின் மூலமான உதவிகளும் இதில் உள்ளடங்குகின்றன.

## பலாலி விமான நிலைய சேவை...

காங்கேசன்துறை துறைமுகம் மற்றும் பலாலி சர்வதேச விமான நிலைய செயற்பாடுகள் தொடர்பில் ஆராய்வதற்காக யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்துள்ள துறைமுகங்கள் விமான சேவைகள் இராஜாங்க அமைச்சர் துறைமுகம் மற்றும் விமான நிலையத்தை பார்வையிட்டதோடு அதிகாரிகளுடனும் கலந்துரையாடினர்.

இவ்விஜயத்தின் பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்தியாவின் உதவியுடன் சில வேலைத் திட்டங்களை இங்கே முன்னெடுக்க உள்ளோம். மிக விரைவில் இந்த காங்கேசன் துறை துறைமுகத்தை செயற்படுத்த நடவடிக் கை எடுக்கப்படும்.

அதேபோல் பலாலி சர்வதேச விமான நிலையமும் வருமானத்தை ஈட்டக்கூடியதே. இந் நிலையமும் ஓரிரு மாதங்களில் விரைவில் செயற்படுத்தப்படும்.

அவ்வாறு இவற்றை ஆரம்பித்தால், நாட்டிலுள்ள மூவின மக்களும் குறிப்பாக வடக்கு கிழக்கிலுள்ள மக்கள் ஒன்றிணைந்து நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்ற முடியுமெனவும் அவர் தெரிவித்தார்.

## காணிகளை உறுதிப்படுத்தினால்...

இவ்வாறு உதவ முடியுமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

வட மாகாணத்தில் தனியார் காணிகள் தொடர்பில் அனைத்து பிரதேச செயலாளர்கள் மற்றும் காணி அமைச்சு, காணி ஆணையாளர் பொது அலுவலகம், நில அளவைத் திணைக்களம் ஆகியவற்றின் கூட்டங்கள் நடாத்தப்படும்.

மற்றும் நிலுவையிலுள்ள தற்போதைய சிக்கல்களைத் தீர்ப்பதற்கு அனைத்து துறையினரையும் உள்ளடக்கி ஆராயப்படும். கொழும்பு காணி ஆணையாளர் அலுவலகம் மற்றும் சம்பந்தப்பட்ட பிரதேச செயலாளர்கள், காணி அதிகாரிகளால் அனைத்து காணி உரிமை கோருபவர்களையும் சந்தித்து, அவர்களது கோரிக்கைகள் தொடர்பில், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் ஆராயப்படும். உரிமை கோரப்பட்ட அனைத்து தனியார் நில உரிமையாளர்களின் விபரங்களையும் இவ்வருட இறுதிக்குள், மாவட்ட செயலாளர் சமர்ப்பிக்க வேண்டும். மாவட்ட செயலாளர்களால் 4,004 காணி உரிமைகோரல்கள் பதிவுகள் சரிபார்க்கப்பட்ட நிலையில் 2,749 பேரின் உரிமையே உறுதிசெய்யப்பட்டது. மேலும், வனவளத்துறையினரிடம் காணப்படும் காணிகளை உரிய முறையில் அடையாளம் கண்டு, பொதுப் பயன்பாட்டுக்கு பயன்படுத்துவதற்கும் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## வரவு - செலவு திட்டத்தில்...

திட்டத்தில் மலையக தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் தொடர்பில் யோசனை முன் வைக்கப்பட்டிருந்தால், அதற்கு இரண்டு கரங்களையும் உயர்த்த முடியுமென்றும் அவர் சபையில் தெரிவித்தார்.

பெருந்தோட்டத் தொழிலாளர்கள் தொடர்பில் வரவு செலவு திட்டத்தில் எதுவும் தெரிவிக்கப்படவில்லையென்பதை சுட்டி காட்டிய அவர், வரவு செலவுத்திட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வரவு செலவுத் திட்டம் மீதான முதலாம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

விவாதத்தில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர், நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு மலையக மக்கள் காரணமல்ல.

ஜே.வி.பி கிளர்ச்சி, நாட்டில் இடம்பெற்ற யுத்தம், கொரோனா வைரஸ் பரவல் உள்ளிட்ட நெருக்கடியான காலகட்டங்களிலும் மலையக மக்கள் அர்ப்பணிப்புடன் தமது கடமைகளை முன்னெடுத்தனர். வரவு செலவுத் திட்டத்தில் விவசாயத்துறை மேம்பாடு தொடர்பில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. எனினும் பதுளை மடுல்சீமை பெருந்தோட்ட நிறுவனத்துக்கு சொந்தமான தோட்டமொன்றில் வாழைக் கன்றுகளை நட்டபோது, அவற்றை தோட்ட நிர்வாகம் பிடுங்கி எறிந்துள்ளது.

பெருந்தோட்டங்களில் வேறொரு அரச நிர்வாகமே காணப்படுகிறது .

மலையகத்தில் காணிகள் காடு மண்டிக் கிடக்கின்றன. அந்த காணிகளை விவசாயம் நடவடிக்கைகளுக்காக பெருந்தோட்ட மக்களுக்கு பகிர்ந்தளிக்க. நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அந்தக் காணிகள் வெளியாருக்கு வழங்கப்படக் கூடாது. அப்பகுதிகளிலுள்ள அதிபர், ஆசிரியர்கள், தொழிலாளர்கள் என மலையகத்தில் வசிக்கின்றவர்களுக்கே அவை பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். இனவாதமில்லாத வகையில் அதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவது அவசியம். பெண்களுக்கான உரிமைகள் தொடர்பில் பேசப்படுகின்றன. எனினும் பெருந்தோட்டங்களில் பெரும்பான்மையாக பெண்களே கடமையில் ஈடுபட்டுள்ளனர்.

அவர்களுக்கு எந்தவிதமான அடிப்படை வசதிகளும் இதுவரை பெற்றுக் கொடுக்கப்படவில்லை.

எனவே, தற்போதைய பொருளாதார நெருக்கடியைக் கருத்திற்கொண்டு பெருந்தோட்ட மக்களின் சம்பளத்தை 3,500 ரூபா வரை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## ஒருவருட காலத்தில் தமிழர்...

திணைக்களம் மேற்கொண்டு வரும் ஆக்கிரமிப்புகளை உடனடியாக நிறுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பி த.கலையரசன் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

தமிழ் மக்களுக்கான பிரச்சினை தீர்வில் நாம் ஜனாதிபதியுடன் இணைந்து பயணிக்க வேண்டுமானால் அவர் முதலில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தொல்பொருள் திணைக்களம் மேற்கொண்டு வரும் ஆக்கிரமிப்புக்களை நிறுத்த உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்றும் தெரிவித்தார். அதேவேளை, போதைப்பொருள் ஒழிப்புக்காக வடக்கில் அமைக்கப்படவுள்ள செயலணியைப் போன்று கிழக்கிலும் விசேட செயலணியை அமைப்பதற்கு நீதி அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வரவு செலவுத் திட்டத்தின் முதல் நாள் விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர், 2023 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் தமிழ் மக்களை ஏமாற்றுவதாக அமைந்துள்ளது. பாதுகாப்பு அமைச்சுக்கும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சுக்குமென 539 பில்லியன் ரூபாவை அரசு ஒதுக்கியுள்ளது. இதன் மூலம் இது ஒரு யுத்தகால வரவு செலவுத்திட்டம் போலவே காணப்படுகிறது.

யுத்தத்தில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கான எத்தகைய நிவாரணங்களும் இம்முறை வரவு செலவு திட்டத்தில் காணப்படவில்லை.

வட மாகாணத்தில் அதிகரித்துள்ள போதைப்பொருள் பாவனையை கட்டுப்படுத்த நீதி அமைச்சரால் விசேட செயலணி அமைக்கப்பட்டது. இதேபோல் கிழக்கிலும் அதிகரித்து வரும் போதைப்பொருள் பாவனையை கட்டுப்படுத்த விசேட செயலணி அமைக்கப்பட வேண்டும். அதற்கிணங்க அரசாங்கமும் அமைச்சர்களும் வடக்கையும் கிழக்கையும் சமமாக பார்ப்பது அவசியமென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## பொருளாதார நெருக்கடிக்கு...

முன்னாள் மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால் மற்றும் பி பி. ஜயசுந்தர ஆகியோரும் பொறுப்புக் கூற வேண்டுமென்றும் அவர் சபையில் தெரிவித்தார்.

அத்துடன் நாட்டின் தற்போதைய மோசமான நிலைக்கு 225 பாராளுமன்ற உறுப்பினர்களும் பொறுப்புக் கூற வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வரவு செலவுத் திட்டம் மீதான முதல் நாள் விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சபையில் சமர்ப்பித்துள்ள அடுத்த ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் நிவாரணம் வழங்குவதை அடிப்படையாகக் கொண்டதல்ல. இதை கட்சி பேதமின்றி அனைவரும் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

நெருக்கடியான நிலையிலிருந்து நாட்டை மீட்பதற்கான ஒரு ஆரம்பமாகவே இந்த வரவு செலவுத் திட்டம் உள்ளது.

தனி நபர் ஒருவரால் தன்னிச்சையாக மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள், நாட்டில் பொருளாதார நெருக்கடியை தோற்றுவித்துள்ளது.

அந்த வகையில் தனிநபரின் அதிகாரத்தை மட்டுப்படுத்தி பாராளுமன்றத்தின் கூட்டுப்பொறுப்பை உருவாக்கும் நிலை, அரசியலமைப்பு திருத்தமூடாக உறுதி செய்யப்பட்டுள்ளது.

அரசியலமைப்புப் பேரவைக்கு மூன்று சிவில் உறுப்பினர்களை சபாநாயகர், பிரதமர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோர் ஒன்றிணைந்து நியமிக்க வேண்டும்.

சிவில் உறுப்பினர் நியமனம் தொடர்பில் சபாநாயகர் சபைக்கு அறிவிக்க வேண்டுமென்பதை வலியுறுத்துகிறேன். நிதியமைச்சினால் தயாரிக்கப்பட்டுள்ள வரவு செலவுத் திட்டம் தொடர்பான விடயங்களை, மக்கள் அறிந்து கொள்ளும் வகையில் பாராளுமன்றத்தில் சுயாதீன வரவு செலவுத் திட்ட அலுவலகம் ஒன்றை ஸ்தாபிக்குமாறு 2007ஆம் ஆண்டு முதல் நான் வலியுறுத்தி வருகின்றேன். இதுவரை அந்த காரியாலயம் ஸ்தாபிக்கப்படவில்லை. எதிர்வரும் ஓரிரு மாதங்களில் அதனை ஸ்தாபிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

அரச வருமானத்தில் வரி வருமானத்துக்கு பெரும் பங்குள்ளது. சுங்கத் திணைக்களத்தினூடாக அரச வருமானத்திற்கு 50 அல்லது 60 வீத வருமானம் கூட கிடைப்பதில்லை.

நாட்டில், பொதுவான மற்றும் நிலையான வரிக் கொள்கை கிடையாது. வகுக்கப்படும் வரிக் கொள்கை 15 அல்லது 20 வருட காலங்களுக்காவது நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

ஊழல் மோசடிகளும் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு ஒரு காரணமாகும். அனைத்து நடவடிக்கைகளிலும் மோசடிகள் காணப்படுகின்றன. குறிப்பாக ஜனாதிபதி நியமனம், பாராளுமன்ற உறுப்பினர்கள், உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் நியமனமென அனைத்திலும் ஊழல் மோசடி இடம்பெற்று வருகின்றன. அதே போன்று முக்கிய அரச நிறுவனங்களிலும் மோசடிகள் அதிகமாக உள்ளன.

2019ஆம் ஆண்டு, பாராளுமன்றத்துக்கு அறிவிக்கப்படாது வரிச் சலுகை வழங்கப்பட்டது. இதனால் 600 மில்லியன் ரூபா வரி வருமானத்தை அரசாங்கம் இழந்தது. வரி வருமானம் இழக்கப்பட்டால் பொருளாதார பாதிப்பு ஏற்படும் என்பதை சிறுபிள்ளை கூட அறியும். எனினும் அரசாங்கம் அதை அறியாமல் இருந்தமை வேடிக்கையானது.

ஊழல் மோசடிக்கு எதிரான சட்டம் வெகுவிரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

அரசாங்கத்தை, கறுப்புச் சந்தை வர்த்தகர்கள் நிர்வகித்தால் முறைகேடான சம்பவங்களே இடம் பெறும். முன்னாள் ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷவை கறுப்பு சந்தை வர்த்தகர்கள் ஆக்கிரமித்திருந்தனர். கறுப்புச் சந்தை வர்த்தகர்களுக்கு அடிபணிந்துள்ள அரசியல்வாதிகளை வைத்துக் கொண்டு நாட்டை முன்னேற்ற முடியாது. தேர்தலில் போட்டியிட முன்னர் அரசியல்வாதிகள் தமது சொத்து விபரங்களை பகிரங்கப்படுத்துவது தொடர்பில் சட்டம் இயற்றப்படுமென்றும் அமைச்சர் தெரிவித்தார்.

## தனுஷ்கவை காப்பாற்ற...

நிறுவனத்திடம் நிதி ஒதுக்கீடு இல்லையென அண்மைக்காலமாக ஊடகங்களில் வெளியான செய்திகள் பொய்யானவையென இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் பிரதிச் செயலாளர் கிருஷாந்த கபுவத்த தெரிவித்துள்ளார்.

தனுஷ்க குணதிலக்கவை காப்பாற்ற முதலில் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனத் தெரிவித்த அவர், இதற்கான தீர்வுகளை அவரிடமிருந்து பின்னர் பெற்றுக் கொள்ளலாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## பால்மாவுக்கு...

உரிய நேரத்தில் ஆவணங்களை கையளிக்காமை, கடன்சான்று பத்திரங்களை தாமதப்படுத்தியமை உள்ளிட்ட பல்வேறு செயற்பாடுகள் காரணமாக, பால் மா அடங்கிய 15 கொள்கலன்கள் திருப்பி அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்நிலையில், பயனாளர்களுக்கு தேவையான பால்மாவை ஒரே தடவையில் இறக்குமதி செய்து வழங்குவதில் சிக்கல் நிலை உள்ளதாகவும் பால்மா இறக்குமதியாளர்கள் சங்கத்தின் தலைவர் லக்ஷ்மன் வீரசூரிய தெரிவித்தார்.

## சிறுவர், பெண்களுக்கு சமூகத்தில்...

பணியகம் ஆகியவை இணைந்தே இந்த இலக்கங்களை அறிமுகம் செய்துள்ளன. சிறுவர் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை 1929 என்ற இலக்கத்துக்கும், பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்த முறைப்பாடுகளை 1938 என்ற இலக்கத்துக்கும் தெரிவிக்க முடியும்.

வேலை நாட்களில் காலை 8.30 மணி முதல் மாலை 5.15 மணி வரை முறைப்பாடுகளைத் தெரிவிக்க முடியும். சிறுவர் தொடர்பான முறைப்பாடுகளை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் சமர்ப்பிக்க முடியுமெனவும் அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

## தந்தையும் மகளும் ஸ்தலத்தில் பலி...

மீரிகமவிலிருந்து பஸ்யால நோக்கி (14) நேற்று மாலை பயணித்த காரொன்று மோதியதில் தந்தை மற்றும் மகள் பலியானதாக பொலிஸார் தெரிவித்தனர். 54 வயதுடைய தந்தையும் 14 வயதுள்ள மகளுமே,இவ்விபத்தில் உயிரிழந்தனர். விபத்தை ஏற்படுத்திவிட்டு தப்பிச்சென்ற காரின் சாரதி, கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். மேலதிக வகுப்பு நிறைவடைந்ததன் பின்னர் மகளை வீட்டுக்கு அழைத்துச் சென்றபோதே, இந்த துயரச் சம்பவம் இடம்பெற்றதாக தெரியவருகின்றது.

## சபரிமலை யாத்திரை

கொழும்பு ,13 இல 69/A ஹின்னி அப்புஹாமி மாவத்தை ஆதி ஸ்ரீ ஐயப்ப ஷேத்திரம் அகில இலங்கை ஐயப்ப சேவா சங்கம் நடத்தும் 47 வது ஆண்டு புனித சபரிமலை யாத்திரை தரிசனம். கார்த்திகை முதலாம் திகதி (17/11/2022) காலை 5.00 மணிக்கு கணபதி ஓமத்துடன் பூஜைகள் ஆரம்பமாகி 30/12/2022 திகதி கருப்பண்ண சுவாமி பூஜையுடன் அனைத்தும் நிறைவு பெறும். 2023 ஜனவரி மாதம் மூன்றாம் திகதி சுவாமிமார்களுக்கு இருமுடிகட்டு பூஜைகள் இடம்பெற்று பிரதமகுருசாமி. பொன். ரவீந்திரகுமரன், குருசாமி இரா.செந்தமிழ்ச்செல்வன், குருசாமி ஆ.சந்திரதாஸ் ஆகியோர் தலைமையில் புனித யாத்திரை ஆரம்பமாகும்.

## பொலிஸாருக்கு இடையூறு...

பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர உள்ளிட்ட 15 பேர் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். இதன்படி, சந்தேகநபர்களை தலா 10,000 ரூபா ரொக்கப் பிணையிலும், தலா 50 இலட்சம் ரூபா சரீரப் பிணையிலும் விடுவிக்குமாறு கொழும்பு பிரதான நீதவான் நந்தன அமரசிங்க உத்தரவிட்டார். இவ்வழக்கு மீண்டும் பெப்ரவரி (13) ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

## இணக்கப்பாடு,... (02 ஆம் பக்கத் தொடர்)

சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

வரவு செலவுத் திட்ட யோசனைகளை முறையாக நடைமுறைப்படுத்தும் நோக்கில், வரவு செலவு திட்டத்தை மீளாய்வு செய்வதற்காக விசேட குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் நாட்டு மக்களின் புரிந்துணர்வு அவசியம். அதேவேளை எதிர்க்கட்சிகளும் ஊடகங்களும் புரிந்துணர்வுடன் செயல்படுவது அவசியம்.

பாரிய வீழ்ச்சியடைந்துள்ள நாடு, மீள எழ முயற்சிக்கும் காலகட்டம் இது என்பதை உணர்ந்து சரியைச் சரியாக ஏற்றுக் கொள்ளும் மனநிலையுடன் செயல்படுவது அவசியமாகும். உலக பொருளாதாரம் எமது நாட்டின் மீது ஏற்படுத்தியுள்ள தாக்கம், ரஷ்யாஉக்ரைன் யுத்தத்தினால் ஏற்படும் இழப்பு ஆகியவற்றையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். எமது நாட்டின் நூற்றுக்கு 18 விதமான தேயிலை மேற்படி இரண்டு நாடுகளுக்குமே ஏற்றுமதி செய்யப்படுகிறது. அதே போன்று 45 வீதமான கோதுமை மா இந்த நாடுகளில் இருந்தே கொள்வனவு செய்யப்பட்டு வந்தது. இதற்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் இலக்குகளின் படி அரச வருமானம் நூற்றுக்கு 15 வீதமாக அதிகரிக்கப்பட வேண்டும். பண வீக்கம் தனி இலக்கத்திற்கு கொண்டுவரப்பட வேண்டும். இத்தகைய நிலையில் அரசாங்கத்தின் கடன் நூற்றுக்கு 110 வீதத்தை விட அதிகரித்துள்ளது.

அதேபோன்று பாராளுமன்றத்திற்கான ஜனநாயகத்தையும் நாட்டு மக்களுக்கான ஜனநாயகத்தையும் ஒருபோதும் குறைக்க முடியாது.

துணிவுடன் சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டியதும் அவசியம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## அமெரிக்க செனட் சபையின்... (02 ஆம் பக்கத் தொடர்)

பாராளுமன்ற செயலாளர் நாயகம் இக்குழுவினருக்கு விளக்கமளித்தார். சபாநாயகர் மற்றும் செயலாளர் நாயகத்துடன் பகற்போசன விருந்துபசாரத்திலும் இவர்கள் கலந்துகொண்டனர்.

இச்சந்திப்பில், யுஎஸ்எயிட் நிறுவனத்தின் செயற்பாட்டுப் பணிப்பாளர் (இலங்கை மற்றும் மாலைதீவு) கப்ரியால் பெர்னாந்து க்ரேவ் மற்றும் என், டி,ஐ நிறுவனத்தின் இலங்கைக்கான பணிப்பாளர் துசிதா பிலபிட்டிய உள்ளிட்டோரும் கலந்துகொண்டனர்.

## ஊடகங்களில்... (02 ஆம் பக்கத் தொடர்)

வேண்டும். இல்லையெனில்,அது சிறுவர்களின் மன நலம், எதிர்காலத்துக்குப் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்துமெனவும் இங்கு மேலும் கலந்துரையாடப்பட்டது. மேலும், ஒவ்வொரு பொலிஸ் நிலையத்திலும் சிறுவர்கள் மற்றும் பெண்கள் பணியகத்தை வலுப்படுத்துவதன் அவசியம் தொடர்பிலும் இங்கு வலியுறுத்தப்பட்டது. இதற்கமைய ஒவ்வொரு பொலிஸ் நிலையத்திலும் சிறுவர்கள் மற்றும் பெண்கள் பணியகத்துக்கு ஒதுக்கப்பட்ட அறையையும் அதில் பணியாற்றுவதற்கு நான்கு பெண் பொலிஸ் அதிகாரிகளை நியமிக்கவும் உரிய அதிகாரிகளுக்கு இதுவரை அறிவுறுத்தல் வழங்கியுள்ளதாக இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க சுட்டிக்காட்டினார்.

மேலும், சமுர்த்தி கொடுப்பனவுகளை வழங்கும் வேலைத்திட்டத்தை மீண்டும் தபால் மற்றும் உப தபால் அலுவலகங்களூடாக மேற்கொள்வதற்குத் தேவையான ஏற்பாடுகளை மேற்கொள்வதன் அவசியம் குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

## வெளிநாட்டு தொழில்... (02 ஆம் பக்கத் தொடர்)

உரிய தொழில் பயிற்சிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். தற்போதைய சூழ்நிலையில் குறுகிய அரசியல் நோக்கங்களில் செயற்படுமிடத்து, நாட்டை பொருளாதார ரீதியாக கட்டியெழுப்ப முடியாதெனவும், அமைச்சர் மனுஷ நாணயக்கார குறிப்பிட்டுள்ளார்.

## வைர விழா காணும்... (02 ஆம் பக்கத் தொடர்)

தி.மு.க. மீது தீவிர பற்றுக்கொண்ட இவர் கலைஞரின் மூன்றாவது ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டத்தை இலங்கையில் சிறப்பாக நடத்திய பெருமைக்குரியவர். அத்துடன் பல்வேறு விழாக்களை அவ்வப்போது நடத்தி வருகிறார். இவ்வாறு இலங்கை இந்திய உறவுகளுக்கு பாலமமைத்து வருபவர் மணவை அசோகன்.

## ஒலுவில் மீன்பிடித்.... (02 ஆம் பக்கத் தொடர்)

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் தொடர்ச்சியான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில் ஒலுவில் மீன்பிடித் துறைமுகத்தை வினைத்திறனுடன் செயற்படுத்தி அப்பிரதேச கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரத்துக்கு நிலைபேறான கட்டமைப்பை உறுதிப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

துறைமுகத்தின் செயற்பாடுகள், அயல் கிராமங்களுக்கு கடலரிப்பு போன்ற எந்தவித பாதிப்புக்களையும் ஏற்படுத்தாமல் இருப்பதை உறுதிப்படுத்தும் வகையிலான பொறிமுறையை உருவாக்குவது தொடர்பாகவும் இக்கலந்துரையாடலின்போது ஆராயப்பட்டது.

மீன்பிடித் துறைமுகத்தின் செயற்பாடுகளை முகாமைத்தும் செய்யும் பொறுப்பை பிரதேச கடற்றொழில் சங்கத்திடம் ஒப்படைப்பதற்கு ஆர்வம் செலுத்தும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா,தனியார் முதலீட்டாளர்களின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்வதற்கான முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளார்.

### பழைய மின் கம்பத்தால் பெரும் ஆபத்து காத்திருப்பு;

# நோர்வூட் கிவ் மேல் பிரிவு தோட்ட மக்கள் அச்சத்தில்

**மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்**

நோர்வூட் பிரதேச சபைக்குட்பட்ட நோர்வூட் கிவ் மேல் பிரிவு தோட்டத்தில் உடைந்து விழும் மின் கம்பங்களால் பெரும் ஆபத்து காத்திருப்பதாக தோட்ட மக்கள் தெரிவிக்கின்றனர்.

இரண்டு வருடங்களுக்கு மேலாக புதிய மின் கம்பங்கள் நாட்டியும் அதில் இணைப்புகள் வழங்கப்படவில்லை.பழைய மின் கம்பத்தில் உடைந்து விழும் நிலையில் உள்ள மின் இணைப்புகள் காணப்படுவதால் தோட்டத்தில் வாழும் சுமார் 700 பேர் ஆபத்தான் நிலையில் இருப்பதாக தெரிவிக்கின்றனர்.

இத் தோட்டத்தில் 1998 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மரத்தி



லான மின் கம்பங்கள் நாட்டப்பட்டு மின் இணைப்பு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.

இந்த மின் கம்பங்கள் தற்போது உக்கி உடைந்து விழும் நிலையிலுள்ளது. இது குறித்து கிராம அபிவிருத்தி குழு உறுப்பினர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் முறையிட்டதையடுத்து மின் கம்பங்களை மாற்றுவதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன் நடவடிக்கை எடுக்கப்பட்டு புதிய மின் கம்பங்கள் நாட்டப்பட்டுள்ளன.

எனினும் புதிய மின் கம்பங்களில் மின் இணைப்பு வழங்கப்படாததன் காரணமாக பழைய சேதமடைந்த மின் கம்பங்கள் உடைந்து தோட்டத் தொழிலாளர்களின் குடியிருப்புக்கள் தீபற்றி எரியக்கூடிய ஆபத்து காணப்படுவதாகவும்,இதனால் உயிர் மற்றும் உடைமைகளுக்கு சேதம் ஏற்படலாம் என மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த தொடர் குடியிருப்புகளிலுள்ள கூரையின் மீது தற்போது மின் இணைப்பு வயர்கள் தகரத்துடன் உரசிக்கொண்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

எது எவ்வாறான போதிலும் மின் ஒழுக்கு காரணமாக மலையகத்தில் உள்ள பல தோட்டங்களில் வீடுகள் தீப்பிடித்து தேமடைந்துள்ளன.

இது குறித்து நாங்கள் மின்சார சபை அதிகாரிகள் மற்றும் நோர்வூட் பிரதேச சபை உள்ளிட்ட பல அதிகாரிகளுக்கு தெரிவித்தோம்.அதனை தொடர்ந்து இரண்டு வருடங்களுக்கு முன் கொங்கிறீட் மற்றும் இருப்பிலான மின் கம்பங்களை நாட்டிவிட்டு சென்றார்களே தவிர இது வரை மின் இணைப்பு வழங்கப்படவில்லை.

எனவே எதாவது ஒரு அசம்பாவிதம் நிகழ்வதற்கு முன் புதிய மின் இணைப்புகளை வழங்குமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

## இராகலை நகரில் கட்டாக்காலிகளின் தொல்லை அதிகரிப்பு



இராகலை நகரில் கட்டாக்காலி மாடுகளின் இடையூறு காரணமாக வாகன சாரதிகள் வாகனங்களை செலுத்துவதில் பாரிய சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக தெரிவிக்கின்றனர்.

அண்மைக்காலமாக இராகலை நகரில் கட்டாகாலி மாடுகள்,நாய்களின் தொல்லை அதிகரித்துள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கடைகளில் தொங்கவிடப்படும் வாழைப்பழங்கள் போன்ற பொருட்களை இழுத்து செல்வதாகவும் விற்பனை செய்யப்படும் பொருட்களில் கட்டாகாலிகள் முகர்ந்து பார்ப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில் வலப்பனை பிரதேச சபைக்குரிய நகரம் என்பதால் உரிய அதிகாரிகள் இந்த விடயம் தொடர்பில் கவனத்திற்கு கொண்டு நகரில் கட்டாக்காலிகளின் நடமாட்டத்தை தடுக்க உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என வர்த்தகர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.







கண்டி மொரகஹமுல ஸ்ரீமுருன் தேவஸ்தானமும் கண்டி தமிழ் வர்த்தக சங்கமும் இணைந்து அகில இலங்கை சிவத்தொண்டர் பேரவை அங்குரார்ப்பணம் செய்து வைக்கும் வைபவமும் பொருளாதார நெருக்கடியான சூழலிலிருந்து இலங்கையை மீண்டெழச் செய்யும் விசேட சமய விழிபாடும் ஸ்ரீ முருகன் தேவஸ்தானத்தின் அறங்காவலர் சபையின் செயலாளர் ரன்ஜிதா பழனியப்பன் மற்றும் தமிழ் வர்த்தக சங்கத்தின் தலைவர் அன்பழகன் ஆகியோர் தலைமையிலும் கோயிலின் பொருளாளர் பெரியையா செல்லையாவின் வழிகாட்டலுடனும் நடைபெற்றபோது பிடிக்கப்பட்ட படங்கள்.

படங்கள்: மாவத்தகம தினகரன் நிருபர்

## மாத்தளை சுஜாதா பாலிகா மகா வித்தியாலய 45 மாணவிகள் திடீர் சுகவீனம்

**மாத்தளை சுழற்சி நிருபர்**

மாத்தளை கல்வி வயலத்திற்குட்பட்ட சுஜாதா பாலிகா மகா வித்தியாலயத்தில் 45 மாணவிகள் நேற்று காலை ஏற்பட்ட திடீர் சுகயீனம் காரணமாக மாத்தளை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இம்மாணவிகள் கடந்த நான்கு தினங்களுக்கு முன்னர் வென்னப்புவ பகுதியில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டியில் கலந்து கொண்டுள்ளனர்.

இம்மாணவிகளை வரவேற்கும் நிகழ்வு பாடசாலையில் நேற்று காலை இடம்பெற்ற போது இம்மாணவிகள் திடீரென மயக்கமடைந்து விழுந்துள்ளனர். இச்சம்பவம் தொடர்பாக மாத்தளை மாவட்ட வைத்தியசாலை பணிப்பாளர் வை.எம்.எஸ் யப்பா கருத்து தெரிவித்த போது,

உணவு ஒவ்வாமையாக இருக்கலாம் என சந்தேகிக்கப்படுவதாகவும் இவ்விடயம் தொடர்பாக அச்சப்படத் தேவையில்லை எனவும் தெரிவித்தார்.

இது தொடர்பாக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## மாபெரிதென்ன தமிழ் ம.வி நூற்றாண்டு விழா நாளை

**நாவலப்பிட்டி சுழற்சி,மாவத்தகம தினகரன் நிருபர்கள்**

தெல்தெனிய கல்வி வலயத்திற்குட்பட்ட ரஜவெல்ல மாபெரித்தென்ன தமிழ் மகா வித்தியாலயத்தின் நூற்றாண்டு தின விழா நாளை வியாழக்கிழமை மு.ப 10.00 மணிக்கு பாடசாலையில் அதிபர் எஸ். சண்முகநாதன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக மத்திய மாகாண மேலதிகக் கல்விப் பணிப்பாளர் எஸ். சத்தியந்திரா, தெல்தெனிய கல்வி வலயப் பணிப்பாளர் திருமதி வை. எம். டி. குமாரிஹாமி, இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவரும் நகர மற்றும் வீடமைப்பு நிர்மாண அதிகார சபையின் பணிப்பாளருமான பாரத் அருள்சாமி ஆகியோர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

கௌரவ அதிதிகளாக மத்திய மாகாண உதவிக் கல்விப் பணிப்பாளர் பி. விக்னேஸ்வரன், ரன்ஜிதா உரிமையாளர் பி. பழனியப்பன், சிறப்பு விருந்தினர்களாக கல்வி அதிகாரிகளுடன் வர்த்தகப் பிரமுகர்களான முத்தையாப் பிள்ளை ஸ்ரீகாந்தன், வேலுப்பிள்ளை சிதம்பரநாதன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

## கம்பளையில் போதைப்பொருள் மத்திய நிலையம் முற்றுகை; 08 சந்தேக நபர்கள் கைது

**கம்பளை நிருபர்**

போதைப்பொருள் வர்த்தகம், விநியோகம் என்பவற்றை முன்னெடுத்த போதைப்பொருள் மத்திய நிலையம் ஒன்று கம்பளை பொலிஸாரால் நேற்று (15) காலை சுற்றிவளைக்கப்பட்டதுடன் 8 சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

31 வயதான ஹோட்டல் உரிமையாளரும் போதைப்பொருள் வாங்க வந்திருந்த 21 தொடக்கம் 42 வயதுக்கு இடைப்பட்ட 7 பேரும் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்படவுள்ளதாக கம்பளை பொலிஸார் தெரிவித்தனர்.

எவருக்கும் இலகுவில் சந்தேகம் ஏற்படாத வகையில் ஹோட்டல்



ஒன்று போல குறித்த இடம் நடத்திச் செல்லப்பட்டதாகவும் இந்த இடத்துக்கு பாடசாலை மாணவர்கள் உள்ளிட்டவர்கள் அதிகமாக வந்து செல்கின்றமை தொடர்பில் நீண்டகாலமாக முன்னெடுக்கப்பட்ட கண்காணிப்புக்கு அமைய கம்பளை ஊழல், ஒழிப்பு பிரிவின் அதிகாரிகளால் இந்த சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்பட்டது.

இந்த ஹோட்டலின் மேல் மாடியில் உள்ள 3 அறைகளில் போதைப்பொருள் வர்த்தகம் முன்னெடுக்கப்பட்டு செல்லப்பட்டுள்ளமை விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. அத்துடன் நகரை அண்மித்த பகுதிகளைக் கண்காணிப்பதற்காக பல இரகசிய ஜன்னல்களும் அமைக்கப்பட்டிருந்துள்ளது.

இதனையடுத்து அந்த ஹோட்டல் சுற்றிவளைக்கப்பட்டதுடன் இதன் போதுபல்வேறுவகையானபோதைப் பொருள்கள் அங்கிருந்து கைப்பற்றப்பட்டுள்ளதுடன் பெருந் தொகைப் பணமும் கைப்பற்றப்பட்டுள்ளது.

## உடப்புஸ்ஸலாவை பொலிஸ் நிலையத்தில் பொலிஸ் பரிசோதனை நிகழ்வு

உடப்புஸ்ஸலாவை பொலிஸ் நிலையத்தின் வருடாந்த பொலிஸ் பரிசோதனை நிகழ்வு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி (சி.ஐ) எ.டி. வசந்த தலைமையில் நேற்று நடைபெற்றது.

இதன்போது வருகை தந்திருந்த நுவரெலியா மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்தி யூ உடுகமசூரிய உடப்புஸ்ஸலாவை பொலிஸ் நிலைய பொலிஸ் உத்தியோகஸ்தர்களின் நன்னடத்தை மற்றும் சேவைகளை பார்வையிட்டார்.



மேலும் பொலிஸ் நிலையத்தின் குறைபாடுகள், அபிவிருத்திகள் தொடர்பிலும் ஆராய்ந்த சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் மற்றும் அதிகாரிகளுக்கு விசேட வகுப்பினையும் நடத்தினார்.

அதனை தொடர்ந்து உடப்புஸ்ஸலாவை பிரதேச மக்களிடையே கலாசார ரீதியான ஒழுக்கமான வாழ்க்கை,சட்ட ஒழுங்கு உள்ளிட்ட நன்நடத்தைகள்,மக்கள் பாதுகாப்பு தொடர்பில் சமய குருமார்கள் மற்றும் அதிகாரிகள் ஆகியோருடன் கலந்துரையாடல் ஒன்றையும் அவர் நடத்தியமை குறிப்பிடத்தக்கது.

ஆ.ரமேஸ்



# கிழக்கின் குரல்



### மட்டக்களப்பு மாநகர சபையின் வரவு - செலவுத் திட்டம் - 2023

## திட்டங்களை நடைமுறைப்படுத்துவதை ஆராய பிரதி முதல்வர் தலைமையில் கலந்துரையாடல்

**மட்டக்களப்பு விசேட நிருபர்**



மட்டக்களப்பு மாநகர சபையின் 2023ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்டத்தை வினைத்திறனும் விளைதிறனுமிக்கதாக தயாரிக்கும் நோக்கில், பொதுமக்கள் மற்றும் சமூக அபிவிருத்தி நிறுவனங்களுடனான கலந்துரையாடல், மட்டக்களப்பு நகர மண்டபத்தில் நேற்று (15) நடைபெற்றது.

மாநகர பிரதி முதல்வர் க.சத்தியசீலன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் கலந்துகொண்ட மாநகர சபை உறுப்பினர்கள் மற்றும் சமூக மட்டப் பிரதிநிதிகளின் ஆலோசனைகளும் அறிவுறுத்தல்களும் பெறப்பட்டன.

2023ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட பொழிப்பின்படி எதிர்பார்க்கப்படும் சபையின் வருமானம் 251.7 மில்லியன் ரூபா, அரசிறை மானியம் 185 மில்லியன் ரூபா, மொத்த மூலதன மானியம் 32.5 மில்லியன் ரூபா உள்ளடங்கலாக மொத்த வருமானம் 469.211 மில்லியன் ரூபாவாகும்.

எதிர்பார்க்கப்படும் சபையின் மீண்டு வரும் செலவு (அமைய ஊழியர்கள் சம்பளம் உள்ளடங்கலாக) 132.5 மில்லியன் ரூபா, சபையின் வேதனச் செலவு 185 மில்லியன் ரூபா, மூலதன வேலைக்கு ஒதுக்கப்படும் தொகை 119.1 மில்லியன் ரூபா, மூலதன மானியம் மற்றும் உள்ளூர் கடன் நிதியத்திலிருந்து மூலதனச் செலவுக்கு ஒதுக்கப்படும் தொகை 32.54 மில்லியன் ரூபா உள்ளடங்கலாக மொத்தச் செலவு 469.210 மில்லியன் ரூபா எனவும் மிகையாக 100 ரூபா எனவும், மாநகர கணக்காளர் திருமதி ஜி.எச்.சிவராஜா பல்லூடகத் திரையின் மூலம் வளவாண்மையை மேற்கொண்டு கலந்து கொண்டோருக்கு விளக்கமளித்தார்.

இதில் கலந்து கொண்டவர்கள் கருத்துத் தெரிவிக்கையில், தற்போது பிரதான பிரச்சினையாகவுள்ள கழிவு முகாமைத்துவத்தை கிரமமாக மேற்கொண்டு எதிர்காலத்தில் அவற்றை நடைமுறைச்சாத்தியமான முறையில் செய்வதற்கான உபாயங்களை மேற்கொள்ளுதல், மழை காலத்தில் வெள்ளநீர் வடிந்தோடுவதற்கு வசதியாக சேதமடைந்துள்ள வடிகான்களை புனரமைத்தல், நகருக்கு அப்பாலுள்ள வட்டாரங்களுக்கு அதிக நிதி ஒதுக்கிடல், நடைமுறைக்குச் சாத்தியமான விடயங்களை வரவு செலவுத்திட்டத்தில் உள்வாங்குதல், பெண்கள் மற்றும் கர்ப்பிணிகளுக்கு வாழ்வாதார உதவி வழங்குதல், ஊட்டச்சத்துள்ள உணவுகளை வழங்குதல், உல்லாசப் பிரயாணத்துறையை ஊக்குவிப்பதற்காக வாவியில் மிதக்கும் உணவகத்தை அமைத்தல், அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் நிதி உதவியுடன் காந்தி பூங்காவையும் லேடி மெனிங் ரைவையும் இணைக்கும் வகையில் தொங்கு பாலம் அமைத்தல் போன்றவற்றை உள்வாங்குமாறு பணித்துள்ளனர்.

இதன்போது பிரதி ஆணையாளர் உ.சிவராஜா கருத்துத் தெரிவிக்கையில், 2023ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் எதிர்பாக்கப்படும் சபையின் மொத்த வருமானத்தைக் கொண்டுதான் செலவுக்காக தயாரிக்கப்படுகின்றது. எதிர்பாராத வருமானம் கிடைக்காத பட்சத்தில், சில செயற்றிட்டங்களை நிறைவேற்ற முடியாமல் போகின்றன. சபைக்கு 41 மில்லியன் ரூபா ஆதன வரி மூலம் வருமென எதிர்பார்க்கும் நிலையில், அதில் 50 வீதம் மட்டுமே அறவிடப்படுகின்றது. கடந்த வருடங்களில் எதிர்பாராமல் ஏற்பட்ட கொவிட்19 சவால்கள் மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக குடியிருப்பாளர்கள் மற்றும் கடை உரிமையாளர்களுக்கு விலக்கழிப்பு செய்ததினால் எதிர்பார்த்த வருமானத்தைப் பெற முடியவில்லை எனத் தெரிவித்தார்.

## மோட்டார் சைக்கிள் தீப்பிடித்து ஈச்சிலம்பற்று குடும்பஸ்தர் பலி

**மணல்சேனை நிருபர்**

திருகோணமலை, இலங்கைத்துறை ஈச்சிலம்பற்று பிரதேசத்தில் மோட்டார் சைக்கிளொன்று திடீரென தீப்பிடித்ததில், அம் மோட்டார்சைக்கிளைச்செலுத்திச் சென்றவர் தீக்கிரையாகி உயிரிழந்துள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

இலங்கைத்துறை ஈச்சிலம்பற்றைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான 40 வயதுடைய வடிவேல் மாணிக்கராசா என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

வழமை போன்று கடற்றொழிலுக்குச் சென்று வீடு திரும்பியிருந்த இவர், தனது வேலையொன்று காரணமாக மோட்டார் சைக்கிளை நேற்று முன்தினம் (14) செலுத்திச் சென்றுள்ளார். அப்போது, அவரது மோட்டார் சைக்கிள் தீப்பிடித்த நிலையில், அதனைச் செலுத்திச் சென்ற இந் நபரும் தீக்காயத்துக்கு உள்ளாகி மூதூர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். இதனைத் தொடர்ந்து, மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் அவர் உயிரிழந்துள்ளதாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு நீதிமன்ற பதில் நீதவான் வி.தியாகேஸ்வரனின் உத்தரவுக்கமைய, மண்டூர் பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி தம்பிப்பிள்ளை தவக்குமார் பிரேத பரிசோதனை மேற்கொண்டதுடன், நெருங்கிய உறவினர்களிடம் சடலத்தை ஒப்படைக்குமாறும் அவர் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

இச்சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

## ஹெரோயின் வைத்திருந்தவருக்கு விளக்கமறியல்

**பாலமுனை தினகரன் நிருபர்**

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவில் ஹெரோயின் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்ட ஒருவரை எதிர்வரும் 30ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு, அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்ற நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

அக்கரைப்பற்று பொலிஸாருக்கு கிடைத்த தகவலை அடுத்து, 585 மில்லி கிராம் ஹெரோயினுடன் இச் சந்தேக நபர் கைது செய்யப்பட்டார். கைது செய்யப்பட்ட இச்சந்தேக நபரை அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் (14) ஆஜர்படுத்தியபோதே, இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

## காத்தான்குடி மின் உபகரண வர்த்தக நிலைய களஞ்சியசாலையில் தீ

**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர், மட்டக்களப்பு குறூப் நிருபர்**



மட்டக்களப்பு, காத்தான்குடியிலுள்ள இரும்பு மின் உபகரணங்கள் மற்றும் பெயிண்ட் வகைகள் விற்பனை செய்யும் வர்த்தக நிலையமொன்றின் களஞ்சியசாலையில் நேற்று (15) அதிகாலை ஏற்பட்ட தீ காரணமாக, அக்களஞ்சியசாலை முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது.

காத்தான்குடி முதலாம் குறிச்சி இப்ராஹிம் மன்சில் வீதியில் அமைந்துள்ள இக்களஞ்சியசாலையில் பரவிய தீயைக் கட்டுப்படுத்துவதற்கு பொதுமக்கள் முதலில் முற்பட்டனர். அவ்வேளையில், மட்டக்களப்பு மாநகர சபையின் தீ அணைப்பு பிரிவினர் விரைந்து சென்று தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இத்தீ பரவலைத் தொடர்ந்து, களஞ்சியசாலையில் இருந்த பெயிண்ட் வகைகளும் மின்சார உபகரணங்களும் எரிந்து நாசமாகியுள்ளன. இக் களஞ்சியசாலையில் ஏற்பட்ட தீ பரவல் காரணமாக சுமார் 40 கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக, காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில், மேற்படி வர்த்த நிலைய உரிமையாளர் முறைப்பாடு செய்துள்ளார்.

இத்தீ பரவலுக்கு மின்னொழுக்கு காரணமாக இருக்கலாமென, காத்தான்குடி பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

சம்பவ இடத்துக்குச் சென்ற காத்தான்குடி பொலிஸார், மேலதிக விசாரணையை முன்னெடுத்துள்ளனர்.

### பொத்துவில் பிரதேசத்துக்கு

## விளையாட்டு மைதானம் கோரி கவனயீர்ப்பு போராட்டம்

**ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்**




பொத்துவில் பிரதேசத்துக்கென்று பொது விளையாட்டு மைதானமொன்று வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்து பொத்துவில் சுயாதீன இளைஞர் அமைப்பினர் நேற்று முன்தினம் (14) கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

30 விளையாட்டுக் கழகங்களையும் 20 பாடசாலைகளையும் சேர்ந்தவர்கள் கையொப்பமிட்ட, தமது கோரிக்கை அடங்கிய மகஜரை, பொத்துவில் பிரதேச செயலாளரிடம் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கையளித்துள்ளனர்.

பொத்துவில் பிரதேசத்துக்கான பொது விளையாட்டு மைதானக் கோரிக்கை தொடர்பில் அம்பாறை மாவட்டச் செயலாளருக்கு ஏற்கெனவே தெரியப்படுத்திய நிலையில், மீண்டும் தெரியப்படுத்துவதாக, பொத்துவில் பிரதேச செயலாளர் தெரிவித்தார்.

'பொது மைதானத்துக்காக ஒன்றிணைவோம்', 'அரசியல் பேதமில்லை', 'வேறுபாடு என்றுமில்லை', 'ஓரணியில் நிற்போம்' போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட அட்டைகளையும் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தாங்கியிருந்தனர்.

### காரைதீவு பிரதேச சபை அமர்வில்

## தென்கிழக்கு பல்கலை மாணவர்கள் பங்கேற்பு



**காரைதீவு குறூப் நிருபர்**

காரைதீவு பிரதேச சபையினுடைய 57ஆவது மாதாந்த சபை அமர்வின்போது, அப்பிரதேச சபை உறுப்பினர்களின் குடும்ப உறுப்பினர்களும் தென்கிழக்குப் பல்கலைக் கழக மாணவர்களும் கலந்துகொண்டனர்.

மேற்படி பிரதேச சபையில் அதன் தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் தலைமையில் நேற்று முன்தினம் (14) சபை அமர்வு இடம்பெற்றது.

இதன்போது, காரைதீவு பிரதேச சபை உறுப்பினர்களின் மனைவிகள் மற்றும் பிள்ளைகளும் தென்கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்களும் முதற்தடவையாக கலந்துகொண்டனர்.

அவர்கள் இவ்வாறு கலந்துகொண்டமை விசேட அம்சமாக கருதப்படுகின்றது.

மேலும் இந்த அமர்வில், காரைதீவு பிரதான வீதியில் அமைந்துள்ள மதுபானசாலை அகற்றப்பட வேண்டுமென்ற பிரேரணையில் தமிழ், முஸ்லிம் உறுப்பினர்கள் அனைவரும் ஏகோபித்த கருத்துகளை பரிமாறினர்.

## திருகோணமலையில் சர்வதேச நீரிழிவு தின விழிப்புணர்வுக் கண்காட்சி

**முள்ளிப்பொத்தானை குறூப் நிருபர், அன்புவழிபுரம் தினகரன் நிருபர்**



சர்வதேச நீரிழிவு தினத்தையொட்டி கிழக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்களமும் இந்திய உயர்ஸ்தானிகராலயமும் இணைந்து திருகோணமலை, கப்பல்துறை தள ஆயுர்வேத வைத்தியசாலை ஊடாக நடத்திய சர்வதேச நீரிழிவு தின விழிப்புணர்வு நடவடிக்கைகளும் கண்காட்சியும் கடந்த இரு நாட்களாக இடம்பெற்றன.

நேற்று முன்தினம் (14) ஆரம்பமாகிய விழிப்புணர்வு நடவடிக்கைகளும் கண்காட்சியும், திருகோணமலை நகர சபை மண்டபத்தில் இடம்பெற்றது.

கப்பல்துறை தள ஆயுர்வேத வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் அன்டென் அனஸ்ரின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், பிரதம அதிதியாக இலங்கைக்கான இந்தியத் தூதரகத்தின் யாழ்ப்பாண அலுவலக துணைத் தூதர் ஸ்ரீ ராகேஷ் நட்ராஜ் கலந்துகொண்டார்.

இதன்போது, நீரிழிவு நோய்க்கான இரத்தப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதுடன், மருத்துவ ஆலோசனைகளும் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டன.

நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்தி சுக வாழ்வுடன் வாழ்வது தொடர்பிலும் விளக்கமளிக்கப்பட்டன. அத்துடன், இது தொடர்பான வழிகாட்டிக் கையேடுகளும் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டன.

மேலும், யோகாப் பயிற்சி செய்முறைகளும் செய்து காட்டப்பட்டு அது தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டன. கண்காட்சியில் பாரம்பரிய முறையில் தயாரிக்கப்பட்ட உணவுகள் காட்சிப் படுத்தப்பட்ட அதேவேளை, பொது மக்கள் கொள்வனவு செய்வதற்காக அந்த உணவு வகைகள் விற்பனைக்கு வைக்கப்பட்டன.

## சமஷ்டி அடிப்படையில் வடக்கு, கிழக்கு இணைந்த தீர்வு கிடைக்க வேண்டும்

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஞா.ஸ்ரீநேசன்

**துறைநீலாவணை நிருபர்**

வடக்கு, கிழக்குத் தமிழர்களின் தேசிய இனப்பிரச்சினையை வடக்கோடு மட்டுப்படுத்தி, கிழக்கு மாகாணத்தை ஜனாதிபதி புறக்கணித்துவிட நினைக்கக்கூடாது. அரசியல் விசப் பரீட்சைகளால் இணக்கமான தீர்வுகளைப் பெற முடியாது. இன்று ஜனாதிபதி செய்ய வேண்டியது பிரிந்துள்ள மக்களை ஐக்கியப்படுத்துவதற்கான நியாயமான தீர்வைக் காண்பதேயொழிய, மேலும் பிளவுகளை உருவாக்குவதல்ல என, மட்டக்களப்பு மாவட்டத்தின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஞா.ஸ்ரீநேசன் தெரிவித்தார்.

இது மேலும் தெரிவித்த அவர், "நல்லாட்சிக்காலத்தில் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முயற்சித்திருந்தார். அது உண்மையாக இருந்தால், சமஷ்டி அடிப்படையிலான வடக்கு, கிழக்கு இணைந்த தீர்வினை ஜனாதிபதி முன்வைக்க வேண்டும்" என்றார்.




சம்மாந்துறையில் நீரிழிவு நோய் தொடர்பான விழிப்புணர்வூட்டும் நடைபவனியும் மருத்துவ முகாமும் நேற்று முன்தினம் (14) இடம்பெற்றது. சம்மாந்துறை லயன்ஸ் கழகம் மற்றும் கிழக்கு பிராந்திய லயன்ஸ்கள் இணைந்து நடத்திய இந்நிகழ்வின்போது, பொதுமக்களுக்கு நீரிழிவு நோய் தொடர்பாக விழிப்புணர்வூட்டும் துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டதுடன், விழிப்புணர்வூட்டும் உரைகளும் இடம்பெற்றன. சம்மாந்துறை நெல்லுப்பிடிச் சந்தியில் ஆரம்பமான நடைபவனியானது, சம்மாந்துறை நகர மண்டபம் வரை சென்றது.
(படம்: சம்மாந்துறை கிழக்கு தினகரன் நிருபர்)

## அஷ்ரப் மத்திய கல்லூரியில் சர்வதேச விஞ்ஞான தினம்

**இறக்காமம் தினகரன் நிருபர்**

சர்வதேச விஞ்ஞான தினத்தை முன்னிட்டு இறக்காமம் அஷ்ரப் மத்திய கல்லூரியினால் ஏற்பாடு செய்யப்பட்ட 'நிலைபேறான அபிவிருத்திக்காக அடிப்படை விஞ்ஞானத்தை பயன்படுத்தல்' எனும் தொனிப்பொருளில் விஞ்ஞான செயன்முறைக் கண்காட்சி நேற்று முன்தினம் (14) அப்பாடசாலையில் இடம்பெற்றது.

இறக்காமம் அஷ்ரப் மத்திய கல்லூரி அதிபர் எம்.ஐ.எம்.மாஹிர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட சம்மாந்துறை வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.எம்.எம்.அமீர், கண்காட்சி கூடத்தை திறந்து வைத்ததுடன், மாணவர்களால் உருவாக்கப்பட்ட விஞ்ஞான செயற்பாடுகளைக் கேட்டறிந்துகொண்டார்.







# இலங்கை - இந்திய கப்பல், விமான சேவைகள் விரைவில் ஆரம்பம்

## இந்திய அரசுடன் பேச்சு -இராஜாங்க அமைச்சர் பிரேமலால் ஜயசேகர

**யாழ். விசேட நிருபர்**

இலங்கை இந்திய பயணிகள் கப்பல் சேவைகளை விரைவில் ஆரம்பிப்பதற்குரிய பேச்சு வார்த்தைகள் இந்திய அரசுடன் இடம்பெற்று வருவதாக துறைமுகங்கள் விமான சேவைகள் இராஜாங்க அமைச்சர் பிரேமலால் ஜயசேகர தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டிருந்த துறைமுகங்கள் விமான சேவைகள் இராஜாங்க அமைச்சர் நேற்றைய தினம் காங்கேசன்துறை துறைமுகம் மற்றும் பலாலி விமான நிலையத்தை பார்வையிட்டதோடு அதிகாரிகளுடனும் கலந்துரையாடினர். இவ்விஜயத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

இலங்கை இந்தியாவுக்கு இடையிலான பயணிகள் கப்பல் சேவை ஆரம்பிப்பது தொடர்பில் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்று வருகின்றன. அந்த பேச்சுவார்த்தையில் சாதகமான முடிவுகள் எட்டப்பட்டுள்ளதன் பிரகாரம் விரைவில் கப்பல் சேவையை ஆரம்பிக்கக் கூடிய சாத்தியகூறுகள் காணப்படுகின்றன.



நாட்டுக்கு பெரும் வருமானத்தை ஈட்டி தந்த காங்கேசன் துறை துறைமுகம் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக அழிவடைந்து தற்பொழுதுபயன்பாட்டில்இல்லை. இவ்வாறான சம்பவங்களே எமது நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு காரணம். மேலும் வடக்குக்கான எரிபொருட்கள் தரை மார்க்கமாக பவுசர்களில் எடுத்து வரப்படுகின்றன. ஆனால் காங்கேசன்துறை துறைமுகம் மீளதிறக்கப்படும் இடத்தில் கப்பல்களின் மூலம் எரிபொருளை கூட இலகுவாக கொழும்பிலிருந்து எடுத்து வரமுடியும்.

பொருளாதார நெருக்கடியிலிருந்து நாங்கள் மீள வேண்டுமாகாவிருந்தால் காங்கேசன் துறை துறைமுகம் போன்ற பொருளாதாரத்தை ஈட்டக்கூடிய இடங்களை நாங்கள் மீள புதுப்பித்து அவற்றை செயற்படுத்த வேண்டும். அதன்மூலம் நாட்டுக்கு வருமானம் கிடைக்கும்.

தற்போதுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரசிங்க, அந்த வேலைத்திட்டத்தில் மிகவும் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றார். அதன் காரணமாகவே காங்கேசன்துறை துறைமுகத்திற்கு நேரடியாக அமைச்சர் என்ற ரீதியில் நான் விஜயத்தினை மேற்கொண்டுள்ளேன். இங்கே மேற்கொள்ளப்பட வேண்டிய வேலைத்திட்டங்கள் மற்றும் செயற்படுத்தப்பட வேண்டிய திட்டங்கள் தொடர்பில் ஆராய்ந்துள்ளேன்.

குறிப்பாக இந்திய நாட்டின் உதவியையும் நாங்கள் கோரவுள்ளோம். ஏற்கனவே நாங்கள் இந்திய நாட்டின் உதவியுடன் சில வேலைத்திட்டங்களை இங்கே முன்னெடுத்து இருக்கின்றோம். அவ்வாறான வேலைத்திட்டங்களை விரைவில் ஆரம்பித்து மிக விரைவில் காங்கேசன்துறை துறைமுகத்தை செயற்படுத்துவதற்கு நாங்கள் முயற்சிக்கிறோம்.

அதேபோல் யாழ்ப்பாண சர்வதேச விமான நிலையமும் நமக்கு வருமானத்தை ஈட்டக்கூடிய ஒரு இடம். எனவே விரைவில் விமான நிலைய சேவைகள் ஆரம்பிக்கப்படுமென அவர் தெரிவித்தார்.

## கச்சேரி - நல்லூர் வீதியில்

# சரிந்து விழுந்த 200 வருடம் பழமை வாய்ந்த மலைவேம்பு



**யாழ்.விசேட நிருபர்**

யாழ்ப்பாணத்தில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக சுமார் 200ஆண்டுகள் பழமையான மலை வேம்பு மரம் சரிந்து வீழ்ந்தமையால் வீதியின் ஊடான போக்குவரத்து தடைப்பட்டுள்ளது.

கச்சேரி நல்லூர் வீதிக்கு அருகில் காணப்பட்ட மரம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு 11 மணியளவில் சரிந்து வீழ்ந்துள்ளது. அதனால் அருகிலிருந்த வீட்டின் மதில் பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

வீதியின் குறுக்கே காணப்படும் மரத்தினை அகற்றும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

# கரும்புள்ளியான் குடிநீர் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதி தென்பகுதிக்கு மாற்றப்பட்டதாக குற்றச்சாட்டு

## ஜனாதிபதிக்கு பொது அமைப்புகள் கடிதம்

கரும்புள்ளியான் குடிநீர் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதி தென்பகுதிக்கு மாற்றப்பட்டதாக கூறி பொது அமைப்புக்கள் ஜனாதிபதிக்கு கடிதம் எழுதியுள்ளனர்.

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பிரதேசத்தின் கரும்புள்ளியான் குடிநீர் விநியோகத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்த நிதி உயர் அதிகாரிகளால் தென்பகுதிக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும் அதனை மீண்டும் ஒதுக்கப்பட்ட தமது பகுதிக்கே பெற்றுத் தருமாறு கோரி பொது அமைப்புக்கள் ஜனாதிபதிக்கு கடிதம் எழுதியுள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

உலக வங்கியின் உதவியின் கீழ் கரும்புள்ளியான் குடி நீர் திட்டத்துக்கென 1000 மில்லியன் ரூபா நிதி தென்பகுதிக்கு மாற்றப்பட்டமை எமது பிரதேச மக்களிடம் பெரும் அதிர்ச்சியையும், கவலையையும் ஏற்படுத்தியுள்ளது. கரும்புள்ளியான் குடிநீர் விநியோகத் திட்டம் ஆரம்பிப்பதற்கு 12.01.2022 ஆம் திகதி பத்திரிகை கேள்வி கோரல் விளம்பரம் செய்யப்பட்டு 11.02.2022 வரை விண்ணப்ப முடிவு திகதியும் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் இத்திட்டம் இதுவரை ஆரம்பிக்கப்படவில்லை. இதற்கான காரணங்களை நாம் தேடிய போது ஆயிரம் மில்லியன் ரூபா நிதியானது தென்னிலங்கை பிரதேசத்திற்கு மாற்றப்பட்டுவிட்டதாக தெரியவந்தது.

இது எமது மக்களுக்கு இழைக்கப்பட்ட பெரும் அநீதியாகும் குடிப்பதற்கு பொருத்தமற்ற நிலத்தடி நீரை கொண்டுள்ள எமது பிரதேசத்தில் வாழ்கின்ற மக்களில் அதிகமானவர்கள் சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர் .

இதனால் தான் எமது பிரதேசத்திற்கான குடிநீர் திட்டம் முக்கியத்துவம் பெறுகிறது. எமது எதிர்கால சந்ததியினரும் சிறுநீரக நோயினால் பாதிக்கப்படாமல் இருக்க வேண்டும் என்பதே எமது விருப்பமாகும். எனவே தயவு செய்து தாங்கள் இவ்விடயத்தில் அதிக அக்கறை எடுத்து எமது பிரதேசத்துக்கென ஒதுக்கப்பட்ட நிதியை எமக்கே மீளவும் பெற்றுத் தர வழி சமைக்க வேண்டும் என 07 பொது அமைப்புக்களும் ஜனாதிபதிக்கு கடிதம் எழுதியுள்ளனர்.

குறித்த கடிதத்தின் பிரதிகள் நீர் வழங்கல் அமைச்சர், வடக்கு மாகாண ஆளுநர், முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர், நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் தலைவர் உள்ளிட்டவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

# 'மழை வெள்ளத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளோம் சொந்த இடத்தில் விரைவில் மீள் குடியேற்ற வேண்டும்'

## பருத்தித்துறை அகதி முகாம் மக்கள்

**தலைமன்னார் விஷேட நிருபர்**

பருத்தித்துறை பகுதியில் அமைந்துள்ள மூன்று அகதி முகாம்களிலுள்ள மக்கள் வெள்ள அனர்த்தம் காரணமாக பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

கனமழை காரணமாக தாம் தங்கியிருந்த அகதி முகாமுக்குள் வெள்ளம் உட்புகுந்தமையால் உடமைகள் மட்டுமல்ல பிள்ளைகளின் கல்வி தொடர்பான அனைத்தையும் வெள்ளத்தில் மிதக்க விட்டுவிட்டோம் என அவர்கள் தெரிவிக்கின்றனர்.

பருத்தித்துறை பகுதியில் அமைந்துள்ள அகதி முகாம்கள் கடந்த 09.11.2022 அன்று முதல் பெய்து வரும் கன மழை காரணமாக வெள்ளத்தில் மூழ்கின. இதனால் அங்கு குடியிருக்கும் 57க்கு மேற்பட்ட குடும்பங்கள் மிகவும் பாதிப்புகளுக்குள்ளாகியுள்ளன.

நிலவன் அகதி முகாமிலிருந்து வெள்ள அனர்த்தம் காரணமாக மக்கள் வெ ளியேறி தற்பொழுது பொது மண்டபத்தில் தங்கியிருக்கின்றனர்.





இதுதொடர்பில் அகதி முகாமைச் சேர்ந்த தேவசகாயம் அன்ரனி தாசன் கருத்து தெரிவிக்கையில்,

நாங்கள் 1990ஆம் ஆண்டு பலாலியிலிருந்து இடம்பெயர்ந்து தற்பொழுது யாழ்ப்பாணம் பொலிகண்டி ஜே. 394 கிராம சேவகர் பிரிவிலுள்ள அகதி முகாமில் வசித்து வருகின்றோம்.

முப்பது வருடங்களாக அகதி முகாமில் இருந்து வரும் நாங்கள் ஒவ்வொரு வருடமும் பருவ மழை காலங்களில் இடம்பெயர்ந்து கோவில்களிலும் பொது மண்டபங்களிலும் தங்கி வாழும் அவலநிலை காணப்படுகின்றது. இதன்போது உடமைகள் மட்டுமின்றி பிள்ளைகளின் பாடசாலை புத்தகம் என எல்லாவற்றையும் வெள்ளத்தில் இழந்துவிடுகின்றோம்.

பருத்தித்துறை பிரதேச செயலகப் பிரிவால் சமைத்த உணவு மட்டும் எங்களுக்கு தற்பொழுதுகிடைக்கப்பெறுகின்றது. இந்நிலை எங்களுக்கு தொடர்ந்து ஏற்பட்டு வருவதால் மனிதாபிமானத்துடன் நோக்கி எங்களை சொந்த இடத்தில் மீள் குடியேற்ற வேண்டுமென அவர் தெரிவித்தார்.

# வவுனியாவில் மூன்று நூல்களின் வெளியீட்டுவிழா





வவுனியா தமிழ்ச் சங்கத்தின் அனுசரணையில் இளையதம்பி தருமபாலன் தொகுத்த மூன்று நூல்களின் வெளியீட்டு விழா வவுனியா சுத்தானந்தா இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

தமிழருவி த.சிவகுமாரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக முன்னாள் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எம்.பி.நடராசா கலந்துகொண்டார். வரவேற்புரையினை திருமதி சி.குமாரதேவியும் வாழ்த்துரையினை சிவஸ்ரீ ஜெ.மயூரக் குருக்களும் நூல்களின் அறிமுகத்தை கலாசார உத்தியோகத்தர் சிவ.கஜேந்திரகுமாரும் நிகழ்த்தினர். வேப்பங்குளம் ஞானவைரவர் ஆலய அறங்காவலர் பொ.நாகேந்திரம் நூல்களின் முதற்பிரதிகளைப் பெற்றுக் கொண்டார். நூல்களின்நயவுரைகளில் 'சைவ சமய ஆலய வழிபாட்டு அமுதம் 'எஸ். எஸ்.வாசன், 'நாயன்மார்களின் வரலாறும் வழிபாடும்' கி.உதயகுமார், 'திருவாசகம்' திருமதி. அனுஷா மதியழகன் ஆகியோர் உரையாற்றினர். ஏற்புரையினையும் நன்றியுரையினையும் நூலாசிரியர் இ.தர்மபாலன் நிகழ்த்தினார்.

# அடிப்படை வசதிகளின்றி காணப்படும் ஜேர்மன் தொழிற்பயிற்சி நிலையம்

## விரைவில் புனரமைத்து தருமாறு மாணவர்கள் கவனயீர்ப்பு போராட்டம்



**(பரந்தன் குறூப் நிருபர்)**

கிளிநொச்சி அறிவியல் நகர் பகுதியில் அமைந்துள்ள ஜேர்மன் தொழிற்பயிற்சி நிலையம் அடிப்படை வசதிகளின்றி காணப்படுவதாக அங்கு கல்வி பயிலும் மாணவர்கள் நேற்றுமுன்தினம் போராட்டத்தில் ஈடுபட்டனர். கிளிநொச்சி அறிவியல் நகர் பகுதியில் அமைந்துள்ள ஜேர்மன் தொழிற்பயிற்சி நிலையம் நீண்டகாலமாக புனரமைக்கப்படாது மலசலகூடம் உள்ளிட்ட அடிப்படை வசதிகளின்றி காணப்படுவதாக அங்கு கல்வி பயிலும் மாணவர்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே உடனடியாக தொழிற்பயிற்சி நிலையத்தை புனரமைத்து தருமாறு கோரி நேற்று காலை 9 மணியளவில் மாணவர்கள் போராட்டமொன்றை முன்னெடுத்தனர்.

ஜேர்மன் தொழிற்பயிற்சி நிறுவனத்திலிருந்து போராட்டத்தை ஆரம்பித்த மாணவர்கள் A9 வீதி வரை சென்று கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர். தொடர்ந்து மீண்டும் தொழிற் பயிற்சி நிறுவனம் வரை சென்று பிரதான வாயிலை மறித்து போராட்டத்தை முன்னெடுத்தனர்.

நிர்வாகத்தை சீர் செய்தல், அடிப்படை வசதிகளை ஏற்படுத்தல் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்னிறுத்தி போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதனையடுத்து நிறுவன அதிகாரிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலையடுத்து போராட்டம் தற்காலிகமாக கைவிடப்பட்டது.

இப்பிரச்சினை தொடர்பாக நிறுவனத்தின் பணிப்பாளரும் அதிபருமான ஜி.தர்மநாதன் குறிப்பிடுகையில், இதுதொடர்பில் உரிய தரப்புடனும், அமைச்சுடனும் பேசியுள்ளதாகவும், சீர் செய்யப்படும்வரை, வீடுகளிலிருந்து டிஜிட்டல் தொழில்நுட்பம் ஊடாக கற்றல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

# துன்னாலை ஆலயத்தில் திருட்டு 22 வயது இளைஞன் கைது

**(நாகர்கோவில் விஷேட , கரவெட்டி தினகரன் நிருபர்கள்)**

துன்னாலை ஆலயமொன்றில் இடம்பெற்ற திருட்டு சம்பவத்துடன் தொடர்புடைய இளைஞனொருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவரிடமிருந்து திருடப்பட்ட பொருட்களும் மீட்கப்பட்டுள்ளதாக நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர் துன்னாலையைச் சேர்ந்த 22 வயதுடைய இளைஞன் என பொலிஸார் தெரிவித்தனர்.

துன்னாலை தெற்கு பூதேஸ்வரன் ஆலயத்தில் இரண்டு வாரங்களுக்கு முன்னர் கதவு உடைக்கப்பட்டு ஆலயத்திலிருந்த சமையல் பாத்திரங்கள், மின் உபகரணங்கள் ஆகியன திருடப்பட்டிருந்தன. இதுதொடர்பில் நெல்லியடி பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வந்தனர். அதற்கமைய நேற்று முன்தினம் திங்கட்கிழமை (14) இரவு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கு அமைய பொலிஸ் பொறுப்பதிகாரி காஞ்சன விமலவீரவின் ஆலோசனைக்கு அமைய உபபொலிஸ் பரிசோதகர் இரட்ணாயக்கா தலைமையிலான பொலிஸ் குழுவினர் சந்தேகநபரை கைதுசெய்துள்ளதுடன் அவரிடமிருந்து திருடப்பட்ட சமையல் பாத்திரங்கள் மற்றும் மின் உபகரணங்களையும் மீட்டுள்ளனர்.



# வழிப்பறி கொள்ளையர்களால் சங்கிலி அறுப்பு

**யாழ்.விசேட நிருபர்**

யாழ்ப்பாணம் கல்வியங்காடு ஜி பி எஸ் ஒழுங்கையில் துவிச்சக்கர வண்டியில் சென்றுகொண்டிருந்த பெண்ணிடமிருந்து வழிப்பறிக் கொள்ளையர்களால் தங்கச் சங்கிலி அபகரிக்கப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவரே பெண்ணை வீதியில் மறித்து வழிப்பறிக் கொள்ளையில் ஈடுபட்டு தப்பித்துள்ளனர். வழிப்பறி தொடர்பான சி.சி.ரி.வி பதிவு காணொளி விசாரணைகளுக்காக கோப்பாய் பொலிஸாரினால் பெறப்பட்டுள்ளது. அதனடிப்படையில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# நகர்வலம்





ஸ்ரீ சத்ய சாயி பகவானின் 97ஆவது ஜனன தினத்தை முன்னிட்டு, கொழும்பு புதுச்செட்டித்தெரு சாயி மத்திய நிலையத்தில் இலவச மருத்துவ முகாம் பிரதம அறங்காவலர் எஸ். என். உதயநாயகன் தலைமையில் ஞாயிற்றுக்கிழமை (13) நடைபெற்றது. கொழும்பு மாவட்ட அரிமா சங்க (306B1) ஆளுநர் மருத்துவர் அனோமா விஜயசிங்ஹ மற்றும் சுகாதார அமைச்சின் மருத்துவ அதிகாரி டாக்டர் எஸ்.முரளிகரன் ஆகியோரின் நெறிப்படுத்தலில் குருதி மற்றும் கண் பரிசோதனை நடைபெறுவதையும் படத்தில் காணலாம்.

## நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுக்கும் வேலைத்திட்டத்துடன் கூடிய பட்ஜெட்

### பேதங்களை மறந்து ஜனாதிபதியுடன் அனைவரும் கைகோர்ப்போம் - அமைச்சர் பிரசன்ன ரணதுங்க



நாட்டின் பொருளாதாரத்தை மீட்பதற்கான வேலைத்திட்டத்துடன் கூடிய எதிர்காலத்தை இலக்கு வைத்த வரவு செலவுத் திட்டத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சமர்ப்பித்துள்ளதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

எனவே பாரம்பரியமாக வரவு செலவுத் திட்டத்தில் உள்ளடக்கப்படும் சில விடயங்கள் இவ்வருட வரவு செலவுத் திட்டத்தில் உள்ளடக்கப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரவு செலவுத் திட்டம் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் பிரசன்ன ரணதுங்க (14) இவ்வாறு குறிப்பிட்டார்.

அமைச்சர் மேலும் கூறியதாவது:

சரிந்த பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்புவதற்காக மிகவும் கடினமான பொருளாதார நிலைமைகளின் கீழ் உருவாக்கப்பட்ட வரவுசெலவுத் திட்டமே இது. சர்வதேச நாணய நிதியம் மற்றும் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்த உதவும் பிற நிதி நிறுவனங்களுடனான விவாதங்களை அடிப்படையாகக் கொண்ட ஒரு சவாலான வரவுசெலவுத் திட்டம். அபிவிருத்தியை இலக்காகக் கொண்டு மக்களின் தோள்களில் சுமையில்லாமல் இருப்பதற்கு மிகவும் சிந்தனையுடன் முன்வைக்கப்பட்ட தொலைநோக்கு வரவு செலவுத் திட்டமாகவே இந்த வரவு செலவுத் திட்டத்தை நான் பார்க்கிறேன்.

நாங்கள் மிகவும் கடினமான மற்றும் சவாலான காலகட்டத்தை எதிர்கொள்கிறோம். கடந்த காலங்களில் மக்கள் மாற்றத்தை எதிர்பார்த்தனர். இப்போது அந்த மாற்றம் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. அரசாங்கம் தற்போது மெதுவான மற்றும் நிலையான பாதையில் செல்கிறது.

எதிர்க்கட்சிகள் இந்த வரவு செலவுத் திட்டத்தை விமர்சித்து பாரம்பரிய அரசியலை செய்வார்கள். ஆனால் நாங்கள் நாடு எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண முயற்சித்து வருகிறோம். அதற்காக எம்முடன் கைகோர்க்குமாறு அனைவரையும் கேட்டுக்கொள்கின்றேன் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

## சத்திர சிகிச்சை பிரிவில் தங்கப் பதக்கம் பெற்ற Dr. முஹம்மட் பாஹிம்



ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக வருடாந்த பட்டமளிப்பு விழா அண்மையில் பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்றது. இப் பட்டமளிப்பு விழாவில் மருத்துவத் துறையில் சத்திர சிகிச்சை பிரிவில் முஹம்மட் பாஹிம் தங்க விருதை பெற்றார்.

இவர் தனது பாடசாலைக் கல்வியை இப்னு அல் ஹைதம் இஸ்லாமிய பாடசாலை பஹ்ரைனில் கற்றதோடு பல்கலைக்கழக கல்வியை இலங்கையில் ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில் கற்றார். மருத்துவ துறைக்கு மேலதிகமாக விளையாட்டில் அதிக ஆர்வம் கொண்ட இவர், பஹ்ரைன் நாட்டின் தேசிய கிரிக்கெட் அணியின் U16 மற்றும் U19 பிரிவில் விளையாடி பல சாதனைகளை நிகழ்தியதோடு ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக உதைபந்தாட்ட அணியில் இடம்பிடித்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## சென்னை துணை உயர்ஸ்தானிகரின் ஏற்பாட்டில் தீபாவளி கொண்டாட்டம்





சென்னையில் உள்ள இலங்கையின் துணை உயர் ஸ்தானிகர் டி. வெங்கடேஸ்வரன், தீபாவளியின் மகிழ்ச்சியை பகிர்ந்து கொள்ளும் நோக்கத்துடன், சென்னையில் உள்ள அனைத்து தூதரகத் தலைவர்களுக்கும் இடையிலான விசேட சந்திப்பு கடந்த 11ஆம் திகதி உயர்ஸ்தானிகரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் தூதரகத் தலைவர்கள் தவிர, சென்னை வெளியுறவு அமைச்சகத்தின் கிளைச் செயலகத் தலைவர், சென்னை வெளிநாட்டினர் மண்டலப் பதிவு அலுவலர் மற்றும் சென்னை கள அலுவலகத் தலைவர், UNHCR உறுப்பினர்களும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டோருக்கு துணை உயர்ஸ்தானிகரினால் இலங்கையின் சுவையான உணவுகள் அடங்கிய இரவு விருந்து பசாரமும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## சிறுகதைப் போட்டி பரிசளிப்பு நிகழ்வு

புதிய அலை கலை வட்டம் வருடாந்தம் நடத்திவரும் கலாசாரப்போட்டித் தொடரான 'எவோட்ஸ்2022' இன் சிறுகதைப் போட்டிக்கான பரிசளிப்பு விழா இம்மாதம் 27ஆம் திகதி மாலை 4 மணிக்கு கொழும்பு10, கெத்தாராம பகுதியில் அமைந்துள்ள லக்செத் செவன சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வட்டத்தின் நிறுவனரும் கலைஞரும் ஊடகவியலாளருமான ராதா மேத்தா தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்விற்கு பிரதம அதிதியாக புரவலர் ஹாசிம் உமர் கலந்து சிறப்பிக்கின்றார்

இப்போட்டியில் முதலாம் இடத்தை மட்டக்களப்பை சேர்ந்த எஸ்.சபீனாவும் இரண்டாம் இடத்தை மன்னாரைச் சேர்ந்த கே.அதிவீரனும் மூன்றாம் இடத்தை பதுளையைச் சேர்ந்த பி.ஜெயபிரியாவும் பெற்றுள்ளனர்.



லேக்ஹவுஸ் நிறுவனத்தின் விளம்பரப்பகுதி அங்கத்தவர்களுக்கு டிஜிடல் சந்தைப்படுத்தல் குறித்த பயிற்சி செயலமர்வு அண்மையில் நடாத்தப்பட்டது. லேக்ஹவுஸ் நிறுவனத்தில் நடந்த இச்செயலமர்வில், டிஜிடல் சந்தைப்படுத்தல் நிறுவனத்தின் ஆலோசகர் புலஸ்திவன்னியாராய்ச்சி வளவாளராகக் கலந்துகொண்டு விளக்கமளிப்பதை படத்தில் காணலாம்.

## மாதுறுஓய நீர்த்தேக்க பகுதியில் மீனவர்களுக்கிடையில் மோதல்

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

மாதுறுஓய நீர்த்தேக்கத்தின் மீன்பிடி தொழிலில் ஈடுபட்டுவரும் மீனவர்களுக்கும் பதியத்தலாவ மீனவர்களுக்கும் இடையில் ஏற்பட்ட மோதலில் 14 பேர் காயமடைந்துள்ளதாக மஹாஓய பொலிசார் தெரிவித்தனர்.

காயமடைந்த வனவிலங்கு அதிகாரி உள்ளிட்ட ஐவர் மாதுறுஓய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அதில் ஒருவரின் நிலமை கவலைக்கிடமாகவுள்ளதாக தெரிவித்தனர்.

பதியத்தலாவ மீனவர் குழுவினர் மாதுறுஓய நீர்த்தேக்கத்தில் மீன் பிடித்துக்கொண்டிருந்த போது ஏற்பட்ட சம்பவம் ஒன்றின் அடிப்படையில் இந்த மோதல் ஏற்பட்டுள்ளது.

மாதுறுஓய மீனவர்களினால் பதியத்தலாவ மீனவர்களின் 08 கொட்டில்களையும் 13 தோணிகளையும் ஏராளமான மீன்பிடி வலைகளையும் எரித்து நாசமாக்கியுள்ளனர்.

தாக்குதலை நடத்துவதற்கு சென்ற மாதுறுஓய மீனவர் குழுவினர் பதியத்தலாவ மீனவர்களுடன் பேச்சுவார்த்தைக்கு வருவதாக தெரிவித்து 2 படகுகள் 38 தோணிகளிலும் 200 பேர் கொண்ட குழுவினர் சென்று இந்த தாக்குதலை நடத்தியுள்ளதாக தெரியவந்துள்ளது.

தங்க முலாம் பூசப்பட்ட

## போலி தங்க நாணயங்களை வழங்கி ரூ.33 இலட்சம் மோசடி

அநுராதபுரம் தினகரன் நிருபர்

இரத்தினபுரி பகுதியிலுள்ள வர்த்தகர் ஒருவருக்கு புதையல் ஒன்றிலிருந்து எடுக்கப்பட்ட தங்க நாணயம் எனக் கூறி தங்க முலாம் பூசப்பட்ட போலியான தங்க நாணயங்களை வழங்கி 33 இலட்சம் ரூபாவிற்கும் அதிகமான பணத்தினை மோசடியாக பெற்றுக்கொண்ட சந்தேக நபர் ஒருவரை கைது செய்வதற்காக வேண்டி அநுராதபுரம் பொலிஸார் தீவிர விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் அநுராதபுரம் பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவுக்கு பாதிக்கப்பட்ட வர்த்தகரினால் செய்த முறைப்பாட்டினை அடுத்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. சில தினங்களுக்கு முன்னர் சந்தேக நபர் தொலைபேசியில் உரையாடி குறித்த வர்த்தகரை அநுராதபுரம் பகுதிக்கு வரவளைத்தே 190 க்கும் அதிகமான தங்க முலாம் பூசப்பட்ட போலியான நாணயங்களை வழங்கி மோசடியான முறையில் பணத்தினை பெற்றுக் கொண்டுள்ளார் என்பது தெரியவந்துள்ளது.

இது போன்ற மோசடியான சம்பவங்கள் அநுராதபுரம் பகுதியில் இடம்பெறுவதால் வெளி மாவட்டத்திலுள்ள வர்த்தகர்கள் மிகவும் அவதானமாக செயல்படுவது அவசியம் என விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.



சுற்றுலா மேற்கொண்டு அண்மையில் கொழும்புக்கு வருகை தந்த மத்துகம கன்னங்கர மத்திய கல்லூரி மாணவர்கள் லேக்ஹவுஸ் நிறுவனத்தை பார்வையிட்ட பின்னர் தமது பாடசாலை ஆசிரியர்கள் சகிதம் எடுத்துக்கொண்ட படம்.



மொறட்டுவை, எகொடஉயன அல் இல்ம் பாலர் பாடசாலையின் வருடாந்த கல்விக் கண்காட்சி அண்மையில் (10) நடைபெற்றது. சிறுவர்களின் ஆக்கங்களுடன் அதிதிகளையும் சிறுவர்களையும் படத்தில் காணலாம். (படம்: மொறட்டுவை மத்திய விசேட நிருபர்)

## அமரர் ஜி. இராஜகுலேந்திரா நினைவுப்பகிர்வு

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் முன்னாள் தலைவர் சிரேஷ்ட சட்டத்தரணி அமரர் ஜி.இராஜகுலேந்திரா நினைவுப்பகிர்வு நிகழ்வு எதிர் வரும் 19ம் திகதி சனிக்கிழமை பி.ப.5.00 மணிக்கு கொழும்புத் தமிழ்ச் சங்கத் தலைவர் சட்டத்தரணி நடராஜர் காண்டீபன் தலைமையில் சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் அமரரின் சட்டப் பணி, சமூகப் பணி, இலக்கியப் பணி, சங்கப் பணி என்னும் பன்முக நோக்கில் முறையே உரைஞர்களான கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை தலைவர் சிரேஷ்ட சட்டத்தரணி கே.எஸ்.இரட்னவேல், ஸ்ரீ சந்திரசேகரன் அறக்கட்டளையின் செயலாளர் சட்டத்தரணி திருமதி அனுசா சந்திரசேகரன், கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் ஆயுள் உறுப்பினர் திரு ஆ. சடகோபன், கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் கல்விக்குழுச் செயலாளர் திருமதி பவானி முகுந்தன் ஆகியோர் உரை நிகழ்த்தவுள்ளனர்.

## கல்கமுவ பகுதியில் மின்னல் தாக்கி ஒருவர் பலி

அநுராதபுரம் தினகரன் நிருபர்

கல்கமுவ நவகத்தேகம கிரிமெட்டியாவ பகுதியில் மின்னல் தாக்கி ஒருவர் பரிதாபகரமான முறையில் உயிரிழந்துள்ளதாக நவகத்தேகம பொலிஸார் தெரிவித்தனர்.

மின்னல் தாக்குதலுக்குள்ளான மேலும் இரு பெண்கள் கல்கமுவ மற்றும் அநுராதபுரம் வைத்தியசாலையில் சிகிச்சைபெற்றுவருவதாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார் குறிப்பிட்டனர். இச்சம்பவம் கடந்த ஞாயிறு (13) மாலை கிரிமெட்டியாவ வயல் பகுதியில் இடம்பெற்றுள்ளது. சம்பவத்தில் உயிரிழந்தவர் 39 வயதுடைய நவகத்தேகம, கிரிமெட்டியாவ பகுதியைச் சேர்ந்தவர் என்பது தெரியவந்துள்ளது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நவகத்தேகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மலையக மாணவர்களின் பல்கலைக்கழக நுழைவு கல்வி வளர்ச்சிக்கு எடுத்துக்காட்டு





**(தெஹிவளை கல்கிஸை விஷேட நிருபர்)**

முன்னாள் பிரதியமைச்சர் பீ.பீ. தேவராஜ் எழுதிய "இலங்கை மலையகத் தமிழர் வரலாற்றின் சில துளிகள்"நூல் வெளியீட்டு வைபவம் சனிக்கிழமை (13) இந்திய கலாசார நிலையத்தில் நடைபெற்றது. இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே, இந் நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டதுடன், நூலின் முதற்பிரதியையும் பெற்றுக் கொண்டார்.

இவ்வைபவத்தில் கொழும்பு வாழ் மலையக வர்த்தக சமூகத்தினர், மலையக புத்திஜீவிகள் மற்றும் பீ.பீ. தேவராஜின் குடும்ப உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இங்கு உரையாற்றிய இந்திய உயர்ஸ்தானிகர் கூறியதாவது,

இந்திய வம்சாவளியினருக்குத் தேவையான கல்வி, வீடமைப்புக்கள் உள்ளிட்ட சகலதையும் இலங்கை அரசாங்கம் செய்து கொடுக்க வேண்டும்.

இந்தியப் பிரதமர் மோடி கடந்த 2017ல் இலங்கை வந்தபொழுது மலையகம் சென்றிருந்தமை ஓர் வரலாற்று நிகழ்வாகும். மலையக மாணவர்கள் எழுநூறு பேர், வருடாந்தம் பல்கலைக் கழகத்துக்கு தெரிவாகின்றமை, அவர்களது கல்வி வளர்ச்சியின் உயர்வைக் காட்டுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.



ஹம்பாந்தோட்டை இக்ரா ஆரம்ப வித்தியாலயத்தில் வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு இடம்பெற்ற புத்தக ஊர்வலத்தின்போது மாணவர்கள் ஊர்வலமாக புத்தகங்களை எடுத்து வருவதைப் படத்தில் காணலாம்.

(படம்: ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்)

## போஷாக்கு பராமரிப்பு நிகழ்ச்சி திட்டம்



சமூக சமையலறை போஷாக்கு பராமரிப்பு நிகழ்ச்சித்திட்டம் கொழும்பு 14, சாந்த ஜோசப் கல்லூரியில் ஜனாதிபதியின் செயலக ஆளணி பிரதானி சாகல ரத்நாயக்க தலைமையில் அண்மையில் நடைபெற்றது. கொழும்பு மாநகர சபை உறுப்பினர் ஏ.ஆர்.எம். சபான் இந்நிகழ்வை ஒழுங்கு செய்திருந்தார். இந்நிகழ்வில், கொழும்பு பிரதி மேயர் எம்.டி.எம். இக்பால், மாநகர சபை உறுப்பினர்களான சராப்டீன், கலீலூர் ரகுமான, சாந்த ஜோசப் மற்றும் கல்லூரி அதிபர் எஸ். ஜி.கே.டி.எல்.சி. பிரசாத், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

(ருஸைக் பாரூக்)

## ரிதியகம அரச விலங்கு பண்ணைக்கு யானைகளினால் பிரச்சினை

**ஹம்பாந்தோட்டைகுறூப் நிருபர்**

அம்பலாந்தோட்டை, ரிதியகம அரசாங்க விலங்கு பண்ணைக்கு காட்டு யானைகளினாலும் அதனை சூழவுள்ள கால்நடைகளினாலும் பல்வேறு பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளதாக உதவி முகாமையாளர் (15) தெரிவித்தார்.

பண்ணைக்கு அருகிலுள்ள காடுகளிலிருந்து 16 இற்கும் மேற்பட்ட யானைகள் உள்ளே நுழைந்து பண்ணையிலுள்ள விவசாய பயிர்களுக்கும் சூழவுள்ள கிராமங்களுக்கும் சேதம் விளைவித்துச் செல்கின்றன.

இந்த காட்டுயானைகள் காலையில் பண்ணைக்கு அருகாமையில் உள்ளகாட்டுப் பிரதேசங்களில் இருந்து இரவுவேளையில் பண்ணை மற்றும் கிராமங்களுக்குள் நுழைந்து சேதத்தினை ஏற்படுத்தி வருகின்றன.

இத்தோடு பண்ணையை சூழவுள்ள விவசாயிகளும் தங்களது மாடுகளைச் சட்டவிரோதமான முறையில் பண்ணைக்குள் இட்டு வருவதினால் இந்த மாடுகளிலிருந்து பல்வேறு நோய்கள் பண்ணையில் உள்ள மாடுகளுக்கும் பரவுகின்றன. இதனால் மருந்துகளுக்கு கூடுதல் தொகை பணத்தினை செலவிடவேண்டி ஏற்பட்டுள்ளதாகவும் உதவி முகாமையாளர் தெரிவித்தார்.

# தென் ஆபிரிக்க உயர் ஸ்தானிகருடன் இளைஞர் பாராளுமன்ற அமைச்சர் சந்திப்பு

**இரு நாடுகளினதும் இளைஞர்களின் எதிர்காலம் தொடர்பில் ஆராய்வு**

**ருஸைக் பாரூக்**

இளைஞர் பாராளுமன்றத்தின் வெளிவிவகார பிரதி அமைச்சர் அஹ்மத் சாதிக் மற்றும் இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் முப்தி முயீன் இலங்கைக்கான தென்னாபிரிக்க நாட்டின் துணை உயர்ஸ்தானிகர் *Rene EversonVarney* ஐ கொழும்பிலுள்ள உயர்ஸ்தானிகராலயத்தில் அண்மையில் சந்தித்தனர்.

இச்சந்திப்பில் இலங்கையினதும் தென்னாபிரிக்க நாட்டினதும் வெளிவிவகார மற்றும் ராஜதந்திர உறவுகளின் நிலைமை தொடர்பாகவும் இலங்கையின் தற்போதைய நிலவரங்கள் அதில் பிரதானமாக இளைஞர்கள் முகம் கொடுக்கும் சவால்கள் மேலும் இளைஞர்களுக்கான வெளிவிவகார வாய்ப்புகள் உட்பட துறைசார் வகிபாகங்கள் பற்றி கலந்துரையாடப்பட்டது.

மேலும் இக்கலந்துரையாடலின் போது, தென்னாபிரிக்க நாட்டின் துணை உயர்ஸ்தானிகர் *Rene EversonVarney* குறிப்பிடுகையில், தென்னாபிரிக்காவில் கறுப்பு வெள்ளை இனத்தவர்கள் தொடர்பான பிரச்சினை ஓங்கியிருந்த நேரத்தில் அதனை ஒழித்து மக்களுக்கிடையே சமத்துவத்தை ஏற்படுத்த போராடிய தலைவர் நெல்சன் மண்டேலா பற்றி அவர் பெருமிதம் கொண்டார்.



மேலும் இளைஞர்களுக்கு முன்னேற்றத்தை ஏற்படுத்த கூடிய செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்த இருப்பதோடு இலங்கையில் இருக்கின்ற இளைஞர்களுக்கு பயனளிக்கக் கூடிய செயற்றிட்டங்கள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்வுகள் நடந்துகொண்டிருக்கின்றன என்றும் எதிர்வரும் காலங்களில் எம்மோடு இணைந்து இளைஞர்கள் தொடர்பான செயற்றிட்டங்கள் கைகோர்க்க இருப்பதாகவும் தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலின் பின்னர், இரு நாடுகளினதும் உறவு இளைஞர்களின் ஊடாகவும் மேலும் வலுப்படுத்த சிறந்த நடவடிக்கைகள் எதிர்காலங்களில் எடுக்கப்படும் என்றும் குறிப்பிட்டனர்.


## வியாபாரத்தை முடிவுக்கு கொண்டுவரல்

க.விஸ்வநாதன் ஆகிய என்னால் (தே.அ.அ.இல 196404301636) மேற்கொள்ளப்பட்டு வந்த நகை அடகு பிடிக்கும் வர்த்தகம் 31.03.2021 புதன் கிழமை முதல் நிரந்தரமாக (லைசன் இல CP/PB/NE/108) முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது என்பதை பொது மக்களுக்கும் தெரிவித்து கொள்கின்றேன்.

**கோல்டன் பவுன் புரோக்கர்ஸ் ஹோல்டிங்ஸ் பிரைவேட் லிமிடெட்**
**இல. 204, தலவாக்கல வீதி,**
**பூண்டுலோயா**




பெருகமலை மத்ரஸதுல் தாக்கிரீன் குர்ஆன் மத்ரஸா ஏற்பாடு செய்த மீலாத் தின நிகழ்வுகள் அண்மையில் மத்ரஸா வளாகத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது. இதன்போது கஸீதா மேற்பார்வையாளராக பணியாற்றிய பாஸியதுஷ் ஷாதுலிய்யாவின் முன்ஷித்களில் ஒருவரான இம்தாத் இம்ரானுக்கு தாக்கிரீன் பள்ளிச்சங்கத் தலைவர் அர்ஷத் ஸவாஹிர் நினைவு பரிசு வழங்கி கௌரவிப்பதை படத்தில் காணலாம்.


## ஹோமாகம பிரதேச சபை

### பெறுகை அறிவித்தல்

| தொடர் இல | உருப்படி | மதிப்பிடப்பட்ட தொகை | மீளளிக்கப் படாத கேள்விக் கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்விப் பிணை வைப்புத் தொகை |
|---|---|---|---|---|
| 01 | சூரிய சக்தி வீதி விளக்குகள் 20W (Solar power Street Light 20W) | 1,950,000.00 | ரூ. 2500.00 | ரூ. 19,500.00 |

02. ஹோமாகம பிரதேச சபைக்காக சூரிய சக்தி வீதி விளக்குகளை பொருத்திக் கொள்வதற்காக, அது பற்றி செயற்படும் நிறுவனங்களிலிருந்து கேள்வி விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

03. வழங்கிக் கொள்வதற்கு உத்தேசிக்கும் வீதி விளக்குகளுக்கான மாதிரிகள் அடங்கிய பெறுகை ஆவணங்களை 2022.11.16 மு.ப. 9.00 முதல் 2022.11.28 பி.ப. 3.00 வரையான அலுவலக வேலை நாட்களில், மீளளிக்கப்படாத ரூ. 2500.00 கேள்விக் கட்டணத் தொகையை ஹோமாகம பிரதேச சபை தலைமையக கணக்குப் பிரிவிற்கு செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

04. விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும் போது உறையின் இடது பக்க மேல் மூலையில் ‘சூரிய சங்கி வீதி விளக்குகளை வழங்கி பொருத்துவதற்கான விலைமனுக்கள் என்று குறிப்பிட்டு விண்ணப்பங்களை 02 பிரதிகளுடன் (மூலப் பிரதி/ நகல் பிரதி என) பூர்த்தி செய்து வேறு வேறு உறைகளில் இட்டு தலைவர், பிரதேச சபை, ஹோமாகம என்று குறிப்பிட்டு 2022.11.29 பி.ப. 2.30 இற்கு முன் பதிவுத் தபாலில் அல்லது கையோடு கொண்டுவந்து ஒப்படைக்கலாம் கையோடு கொண்டு வந்து ஒப்படைக்கப்படும் கேள்விப் பத்திரங்களை சபை செயலாளரின் உத்தியோகபூர்வ அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.

05. கேள்விப் பத்திரங்களுடன் மீளளிக்கப்படும் ரூ. 19500.00 கேள்விப் பிணை வைப்புத் தொகையை பிரதேச சபை தலைமையகத்திற்கு காசாகச் செலுத்தலாம் அல்லது மத்திய வங்கியின் பதிவுசெய்த வங்கி மூலம் பெற்றுக்கொண்ட 06 மாத காலம் செல்லுபடியாகும் வங்கிப் பிணையொன்றை வழங்கலாம்.

06. விலைமனுக்கள் திறத்தல் 2022.11.29 பி.ப. 2.30 இற்கு பிரதேச சபை தலைமையகத்தில் இடம் பெறுவதுடன் அதற்காக கேள்விதாரருக்கு அல்லது அவரது பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம். விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளல் அல்லது நிராகரிக்கும் உரிமை முழுமையாக ஹோமாகம பிரதேச சபைக்கு உரியது.

07. மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் தொலைபேசி இல. 011-5633991 மூலம் சபையின் வேலை அதிகாரியை அழைத்து பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**சம்பத் சமிந்த ஜயசிங்ஹ**
**பிரதேச சபை**
**ஹோமாகம**

**திகதி: 2022.11.15**


# முன்னாள் அதிபர் நாஸிம் காலமானார்

**பதுளை தினகரன் நிருபர்**



ஹாலிஎல அல் இர்ஷாத் ம.வி, பதுளை அல் அதான் ம.வி (தேசிய பாடசாலை) என்பனவற்றின் முன்னாள் அதிபர் எம்.எச். எம். நாஸிம் (71 வயது) திடீர் சுகயீனமுற்ற நிலையில் ஞாயிற்றுக் கிழமை (13) தனதில்லத்தில் காலமானார்.

பிரசித்திபெற்ற மொனராகலை, படல்கும்புர – அருப்பொத்த ஊரில் மும்மொழிகளிலும் தேர்ச்சிபெற்று செல்வாக்குடன் திகழ்ந்த மறைந்த முஹம்மத் ஹம்தூன் ஹாலிமா தம்பதியின் ஐந்தாவது புதல்வராவார்.

அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் (1981 1984) பயிற்றப்பட்ட ஆசிரியரான இவர், 1991ல் மூன்றாந்தர அதிபராக நியமனம் பெற்று 2004ல் முதலாந்தர அதிபராக பதவியுயர்வு பெற்றார்.

அன்னாரின் ஜனாஸா திங்கட்கிழமை (14) பிற்பகல் பதுளை முஸ்லிம் மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது.


திகதி 14.11.2022 திங்கட்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம்: 4939 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 9,640,790.00 — ஆங்கில எழுத்து E — வெற்றி இலக்கங்கள் 6 4 2 0 3 1 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 44,313,501.00

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3181 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,955,600.00 — ஆங்கில எழுத்து U — வெற்றி இலக்கங்கள் 21 44 65 79 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 60,320,545.60

ராசி சுப பலன் Handahana — சீட்டிழுப்பு இலக்கம்: 248 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 8,424,720.00 — இலக்கினம் மேஷம் — வெற்றி இலக்கங்கள் 14 18 52 62 — விசேட இலக்கினம் மேஷம் — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,851,903.40

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம்: 969 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,878,320.00 — வெற்றி இலக்கினம் N — வெற்றி இலக்கங்கள் 13 16 34 73 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 133,011,555.20

ஜாதிக சம்பத — சீட்டிழுப்பு இலக்கம்: 1394 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,012,400.00 — வெற்றி இலக்கினம் மேஷம் — வெற்றி இலக்கங்கள் 1 6 5 2 9 2 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,730,578.00

கோடி 28 + Mega POWER மெகா பவர் — சீட்டிழுப்பு இலக்கம் 1287 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,431,160.00 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 280,392,294.00 — Z 04 48 56 61 75 — அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00 — அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board — தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 — பெக்ஸ்: 011-4669475 — Email : info@nlb.lk — Web : www.nlb.lk

# கேள்வி அறிவித்தல்
## ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை

## 2022-2023 ஆம் ஆண்டுகளுக்காக பீடைக் கட்டுப்பாட்டு சேவையை வழங்குவதற்கான கேள்வி
Q 452/22

01. **2022.12.08 ஆம் திகதியன்று மு.ப. 10 மணி வரையும்** பீடை ஒழிப்பு அமைப்பொன்றாக பதிவு செய்யப்பட்டதும் இந்தத் துறையில் சிறந்த அனுபவத்தையுமுடைய புகழ் வாய்ந்த நிறுவனங்களிலிருந்து ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையில் பீடைக் கட்டுப்பாட்டு சேவைகளை வழங்குவதற்காக ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் கேள்விச் சபையின் தலைவர் கேள்விகளை கோருவதற்கு விரும்புகின்றார்.

02. விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.

03. **2022.12.06 ஆம் திகதி வரையும்** எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் ரொக்கப் பணத்தில் **3,000 ரூபாவை** மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணமாக செலுத்தி ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் கணக்காளரினால் வழங்கப்பட்டு பணப் பற்றுச்சீட்டுடன் உத்தியோகபூர்வ கடிதத்தையும் சமர்ப்பிப்பதன் மூலம், ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் வழங்கல் அலுவலகரிடமிருந்து கேள்வி நிபந்தனைகள் மற்றும் விண்ணப்பப் படிவங்கள் ஆகியவற்றை பெற்றுக் கொள்ளலாம்.

04. பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணங்கள் **2022.12.08 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு** அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் **இரு பிரதிகளில்** பதிவுத் தபாலில் தலைவர்-பெறுகைக் குழு, ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை, தளபத்பிட்டிய, நுகேகொட என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் தலைவரின் அலுவலகத்திற்கு அருகாமையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.

05. **2022.12.08 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு** நுகேகொட, தளபத்பிட்டிய, ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையில் கேள்விகள் திறக்கப்படும்.

06. கேள்விதாரர் கேள்விகளை திறக்கும் வேளையில் சமுகமளிப்பதற்கு அனுமதிக்கப்படுவதுடன் கேள்விகளை திறக்கும் அலுவலரானவர் ஒவ்வொரு கேள்விதாரரினாலும் கோரப்பட்ட விலைகளை சமுகமளித்துள்ளவர்களுக்கு வாசித்துக் காட்டுவார்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை,**
**தளபத்பிட்டிய,**
**நுகேகொட.**



கடற்றொழில் அமைச்சு
## இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனம்

## 2023 ஆம் ஆண்டிற்கான வழங்குனர்களை பதிவு செய்தல்

2023 ஆம் ஆண்டிற்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள், சேவைகளை வழங்கக்கூடிய இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தில் பதிவு செய்ய ஆர்வமுள்ள அங்கீகாரம் பெற்ற நிறுவனங்களிடமிருந்து / வழங்குனர்களிடமிருந்து / விநியோகஸ்தர்களிடமிருந்து / அரச நிறுவனங்களில் மற்றும் வேறு எந்தவொரு நபர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இலங்கையில் வணிகப் பெயர் கட்டளைச் சட்டம் அல்லது கம்பனிகள் சட்டத்தின் கீழ் முறையாகப் பதிவு செய்யப்படாதவர்கள் வணிகப் பதிவு மேற்கொண்டவர்களாக கருதப்பட மாட்டார்கள்.

01. கட்டுமானம்
02. பொறியியல் மற்றும் குளிரூட்டல் மின் கூறுகள்
03. வாகன உதிரிப் பாகங்கள்
04. இரசாயன பொருட்கள் மற்றும் உபகரணங்கள்
05. தனிப்பட்ட பாதுகாப்பு மற்றும் சுகாதார உபகரணங்கள்
06. பொதியிடல் உபகரணங்கள்
07. அலுவலக உபகரணங்கள்
08. எழுதுபொருட்கள்
09. காட்சியக கருவிகள்
10. கணினி அமைப்புகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைப்புகள்
11. வாகன பழுதுபார்த்தல்
12. அச்சிடல்கள்
13. அலுவலக உபகரணங்கள் பழுதுபார்த்தல்
14. அலுமினிய பாட்டிசன்
15. இயந்திர உபகரணங்கள் பழுதுபார்த்தல்
16. குளிரூட்டல் உபகரணங்கள் பழுது பார்த்தல் மற்றும் நிறுவுதல்
17. சீருடைகள் மற்றும் திரைச்சீலைகள் போன்றவற்றை வழங்குதல்
18. வாடகைக்கு / குத்தகைக்கு பெறல் - பயணிகள் / பொருட்கள் போக்குவரத்து
19. வாடகைக்கு / குத்தகைக்கு பெறல் - மின் மற்றும் இயந்திர உபகரணங்கள்
20. டயர்களை நிரப்புதல் மற்றும் டெக் செய்தல்
21. விளம்பரம் - அச்சு மற்றும் மின்னணு ஊடகம்
22. பட்டய சிவில் பொறியியல் சேவைகள்
23. பட்டய இயந்திர பொறியியல் சேவைகள்
24. சட்ட சேவைகள், பட்டய கணக்கியல் மற்றும் தணிக்கைகள்
25. விற்பனை நிலையங்கள் புதுப்பித்தல்
26. மோட்டார் முறுக்கு மற்றும் பழுதுபார்த்தல்
27. குத்தகை சேவைகள்
28. சொத்து விற்பனை

**முன் தகுதிகள்**

I. வாடிக்கையாளர்களின் ஆவணங்கள் தேவையான நடவடிக்கைகளுக்கு சமர்ப்பித்தல்
II. முகவரி, தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல் (ஈ-மெயில்) முகவரி மற்றும் வணிகப் பதிவு
III. வழங்குனரின் நிலை (நிறுவனர் ஒரு தனி உரிமையாளர், ஒரு உற்பத்தியாளர்), ஒரு மொத்த விற்பனையாளர் மற்றும் பிற)
IV. கட்டுமானத் துறையில் செயல்பாடுகளுக்கு ICTAD இல் பதிவு செய்திருக்க வேண்டும்

**ஒப்பந்தங்கள்**

01. ஒவ்வொரு பிரிவிற்கும் தனித்தனியாக விண்ணப்பங்களை முன்வைக்க வேண்டும். ஒவ்வொரு பிரிவிற்கும் மீள் செலுத்தப்படாத கட்டணமான **ரூ.3,000.00** ஐ பணமாக செலுத்தி இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் வழங்கல் பிரிவிற்கு **2022 டிசம்பர் 15** ஆம் திகதி தொடக்கம் **2022 நவம்பர் 16** ஆம் திகதி வரை வாரத்தின் காரியாலய வேலை நாட்களில் **மு.ப.09.00** மணி தொடக்கம் **பி.ப.03.00** மணி வரை பதிவிற்கான விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ள முடியும். விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ள நிறுவனத்தின் கடிதத்தலைப்புடன் கூடிய கோரிக்கை கடிதத்தையும் முன்வைத்தல் வேண்டும்.
02. இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்திற்கு எந்த ஒரு விண்ணப்பத்தையும் ஏற்றுக்கொள்ளும், நிராகரிக்கும் முழு உரிமையும் இருப்பதுடன், பதிவு செய்யப்படாத வழங்குனர்களிடமும் விலை மனுக்களை கோரும் அதிகாரமும் உண்டு. பதிவு செய்யப்பட்ட எந்த ஒரு வழங்குனரும் விலைமனுவை சமர்ப்பிக்கவோ அல்லது பொருட்கள் மற்றும் சேவைகளை உரிய விதத்தில் வழங்கத்தவறும் பட்சத்தில் வழங்குனர்களின் பெயர்கள் பதிவு ஆவணத்தில் இருந்து எவ்வித முன் அறிவித்தலும் இன்றி நீக்கும் முழு உரிமையும் கூட்டுத்தாபனத்திற்கு உண்டு.
03. முழுமையாக்கப்பட்ட விண்ணப்பங்களை பதிவுத்தபாலின் மூலம் தலைவர், இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனம், ரொக்ஹவுஸ் ஒழுங்கை, மோதர, கொழும்பு 15 எனும் முகவரிக்கு **2022 டிசம்பர் 20** ஆம் திகதி அல்லது அதற்கு முன் அனுப்ப வேண்டியதுடன் தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் **"வழங்குனர்களை பதிவு செய்தல் - 2023 ஆம் ஆண்டிற்கான, இல ... "** எனத் தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும்.
04. பதிவு செய்வதற்கான தேர்வு நடைமுறை இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் நிர்வாகத்தின் வசம் உள்ளது.

மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ள தொலைபேசி இல 011-2540092 அல்லது 071-8736941 இன் மூலம் இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் வழங்கல் பிரிவை தொடர்பு கொள்வதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியும். குறித்த செயற்பாடு தொடர்பில் மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ள **www.cfc.gov.lk** இற்கு பிரவேசியுங்கள்.

தலைவர்,
இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனம்
ரொக் ஹவுஸ் ஒழுங்கை, மோதர, கொழும்பு 15.

பாணந்துறையில் மீலாத் தின வைபவம்
# மத்ரஸா மாணவர்களின் கலாசார நிகழ்வுகளில் அதிகமானோர் பங்கேற்பு

(பேருவளை விசேட நிருபர்)

அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா பாணந்துறை கிளை ஒழுங்கு செய்த மாபெரும் மீலாத் தின நிகழ்வுகள் அண்மையில் கிளையின் தலைவர் அஷ்ஷெய்க் அபுல் கலாம் (தீனி) தலைமையில் பாணந்துறை ஜீலான் தேசிய பாடசாலையின் உம்மு மலீஹா ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்றது.





இம்மாநாட்டின் விஷேட அதிதிகளாக அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா களுத்துறை மாவட்டக்கிளையின் தலைவர் அஷ்ஷெய்க் அப்துர்ரஹ்மான் (பஹ்ஜி) மற்றும் அதன் உபதலைவர் அல் உஸ்தாத் தஸ்னீம் (மக்கி) ஹஸ்ரத் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் சிறப்பு சொற்பொழிவாளராக அஷ்ஷெய்க் ஹஸன் பரீத் (பின்னூரி) கலந்து சிறப்பித்தார்.

மேலும் பகுதிநேர மத்ரஸா மாணவர்களது சமய கலாசார நிகழ்வுகளும் இடம்பெற்றன. இந்நிகழ்வில் உலமாக்கள், மத்ரஸா அதிபர்கள், பொலிஸ் உயர்அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் என பெருந்திரளானோர் கலந்து கொண்டனர். மேலும் இதன்போது பாணந்துறை போதனா வைத்தியசாலை மற்றும் கேத்துமதி மகளிர் வைத்தியசாலை ஆகியவற்றுக்கும் பெறுமதியான மருத்துவ உபகரணங்கள் மீலாத் தின சிறப்பை முன்னிட்டு வழங்கி வைக்கப்பட்டன.

# தேசிய போக்குவரத்து ஆணைக்குழு

## பயண பெயர் பலகை ஸ்டிக்கர் அச்சிடுவதற்கான (ஸ்கிரீன் பிரிண்டிங்) விலைமனுக்கோரல்

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் கட்டுப்படுத்தப்படும் மாகாணங்களுக்கிடையிலான பேருந்துகளில் ஒட்டுவதற்காக வெளியிடப்படும் 04 வகையான ஸ்டிக்கர்கள் ஸ்கிரீன் அச்சிடுவதில் அனுபவமுள்ள பதிவுசெய்யப்பட்ட முகவர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றது.

| ஸ்டிக்கர் வகை | ஸ்டிக்கர் அளவு | அச்சிடப்பட வேண்டிய பயண பலகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| சொகுசு சேவை | நீளம் - 3 அடி 2 அங்குலம்<br>அகலம் - 6 அங்குலம் | 363 |
| பொது சேவைகள் | நீளம் - 4 அடி 7 அங்குலம்<br>அகலம் - 10.5 அங்குலம் | 1338 |
| அரை சொகுசு சேவை | நீளம் - 4 அடி 7 அங்குலம்<br>அகலம் - 10.5 அங்குலம் | 315 |
| அதி சொகுசு சேவை | நீளம் - 4 அடி<br>அகலம் - 10 அங்குலம் | 189 |

- மனுகோரல்கள் **தேசிய மனு கோரல் போட்டி முறைக்கமைய** நடைபெறும்.
- இதற்காக ஆர்வம் காட்டும் தகுதியான மனுதாரர்கள் மேலதிக தகவல்களை தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பெறுகைப் பிரிவில் பெற்றுக்கொள்வதுடன் மற்றும் வாரத்தில் **வேலை நாட்களில் மு.ப.10.00 மணி முதல் பி.ப. 02.00** மணி நேரம் வரை மனு ஆவணங்களை பரிசீலனை செய்ய முடியும்.
- இந்த அச்சிடும் பணிக்கு **2023.02.28** ஆம் திகதி வரை செல்லுபடியாகும் **ரூ.40,000.00** மனுப் பத்திரத்தைச் சமர்ப்பிக்க வேண்டும்.
- முழுமையாக பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை போக்குவரத்து ஆணைக்குழுவின் உதவிப் பணிப்பாளரிடம் (கொள்முதல்) எழுத்துப்பூர்வ கோரிக்கையை முன்வைப்பதன் மூலம் **2022.11.17 ஆம் திகதி முதல் 2022.11.30 ஆம் திகதி வரை மு.ப.09.00 மணி முதல் பி.ப.03.00 மணி** வரை பெற்றுக்கொள்ளமுடியும்.
- அனைத்து மனுக்களும் **2022.12.01** ஆம் திகதி **பி.ப.02.00** முன்னர் கொள்முதல் பிரிவில் வைக்கப்பட்டுள்ள மனுப்பெட்டியில் இடுதல் வேண்டும். காலம் தாழ்த்தி கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மனு கோரல் நேரம் முடிவடைந்த பின்னர் உடனடியாக மனுக்கள் மனுதாரர்களால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

தலைவர்
தேசிய போக்குவரத்து ஆணைக்குழு,
இல-241, பார்க் வீதி,
கொழும்பு 05.
தொ.பே.: 0112 503 969

**புத்தசாசன, மத விவகார மற்றும் கலாசார அமைச்சு — மத்திய கலாசார நிதியம்.**

**தேசிய மாதிரி உரு பாடசாலை**

**பட்டலீய - பஸ்யால**

**தொல்பொருள் மாதிரி உரு நிர்மாணிப்புப் பயிற்சி நெறிக்காக பயிலுநர்களை ஆட்சேர்த்தல்**

சித்திரம்/சிற்பம்/மரம்செதுக்குதல்/கல்சிற்பம்/செரமிக்/பித்தளை வாஸ்து மற்றும் சிற்பங்கள் போன்ற கலைகள் தொடர்பான உயர் கல்வியை எதிர்பார்க்கும் தகவுத்திறன்களைக் கொண்ட இளைஞர் யுவதிகளை நோக்காகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள முழுநேர பயிற்சிநெறிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பயிற்சிநெறிக்காலம் : 02 வருடங்கள் 06 மாதங்களாகும்.
(02 வருடங்களின் பின்னர் 06 மாத காலம் தொழிற்பயிற்சிக்கும் உட்படுத்தப்படுவர்

பாடத்திட்டத்தின் உள்ளடக்கம் : தொல்பொருள் மாதிரி உரு நிர்மாணிப்புக்கான பின்வரும் அனைத்து பாடங்களும்.

◇ சிற்பம் (மண் பிசைதல்)/சித்திரம்/பித்தளை வாஸ்து மற்றும் செதுக்கல்கள்/மரச்சிற்பம்/செரமிக்/கற்சிற்பம் போன்றவை பிரதான பாடங்களாகவும் பல்வேறுபட்ட செயற்பாட்டுக்கலைகள் தொடர்பான செயல்முறைக் கல்வியும் பெற்றுக்கொடுக்கப்படும்.

**விண்ணப்பதாரர்களிற்கு இருக்க வேண்டிய தகைமைகள்**

◇ 2022.12.31 ஆம் திகதியன்று வயது 18 முதல் 30 வரையாக இருத்தல்
◇ க.பொ.த.(சா.த) இல் சித்திரம் மற்றும் சிங்களம் பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்
◇ க.பொ.த. (சா.த) இல் சித்திரம் பாடத்தில் திறமைச்சித்தி பெற்றிருத்தல் அல்லது க.பொ.த (உ.த) இல் சித்திரம் பாடத்தை பயின்றிருத்தல் விஷேட தகைமையாகக் கருதப்படும்.
◇ சம்பிரதாய கலைஞர்களின் பிள்ளைகளிற்கு முன்னுரிமை வழங்கப்படுவதுடன், அவர்கள் மேற்படி கல்வித்தகைமைகளைப் பெற்றிருத்தல் அவசியமில்லை.

**முக்கிய குறிப்பு**
பல்கலைக்கழக பிரவேசத்திற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள அல்லது ஏனைய அரச/தனியார் நிறுவனமொன்றில் முழுநேர பயிற்சி நெறிகளிற்காகப் பதிவுசெய்து கொண்டுள்ள நபர்கள் இதற்காக சேர்த்துக்கொள்ளப்படமாட்டார்கள்.

**விண்ணப்பங்கள்**
சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவமொன்று மற்றும் அதனை உள்ளிடும் உறையின் இடதுபக்க மேல் மூலையில், "தேசிய மாதிரி உரு பாடசாலைக்கு பயிற்சியாளர்களை ஆட்சேர்த்தல் - 2023" எனக்குறிப்பிட்டு பின்வரும் முகவரிக்குப் பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும்.

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி : 2023.01.15

**தேர்ந்தெடுத்தல்**
2023 பெப்ரவரி மாதத்தில் நேர்முகப்பரீட்சையொன்று மற்றும் செய்முறைப் பரீட்சையொன்றின் மூலம் மேற்கொள்ளப்படும்.

**பாடநெறி ஆரம்பித்தல்**
2023 மார்ச் மாதம்

சேர்த்துக்கொள்ளப்படும் அனைத்து பயிலுநர்களிற்கும், பாடநெறியை மேற்கொள்ளும் காலத்தில் தேவையான மூலப்பொருட்கள் வழங்கப்படுவதுடன், சமுகமளிக்கும் தினமொன்றிற்கு ரூபா 500/= இற்கான கொடுப்பனவு ஒன்று வழங்கப்படும்.

வெற்றிகரமாக பாடநெறியைப் பூரணப்படுத்தும் பயிலுநர்களிற்கு மத்திய கலாசார நிதியத்தினால் நிபுணத்துவ மத்திய கலாசார நிதியத்தினால் நிபுணத்துவ சான்றிதழொன்றும், அதற்கு மேலதிகமாக, தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற்பயிற்சி அதிகார சபையினால் சான்றிதழொன்றும் வழங்கப்படும்.

**விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி:-**

**நிலையப் பொறுப்பதிகாரி,**
**மத்திய கலாசார நிதியம்,**
**தேசிய மாதிரி உரு பாடசாலை, பட்டலீய - பஸ்யால**

**தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்காக :**
**நிலையப்பொறுப்பதிகாரி : 033 - 2285230**
**கல்விப்பிரிவு : 033 - 2284107**

# கடலில் நடமாடிய முதலை மீனவர்களால் பிடிப்பு

வெலிகம தினகரன் நிருபர்

அஹங்கம கடலில் நடமாடிக்கொண்டிருந்த 8 அடி நீளமான முதலையை மீனவர்கள் மற்றும் பிரதேசவாசிகள் ஒன்றிணைந்து பிடித்து கரை சேர்த்தனர்.

கடந்த சில தினங்களாக கடலில் நடமாடிய முதலையே இவ்வாறு கரை சேர்க்கப்பட்டது. இது விடயமாக அஹங்கம பொலிஸார் மற்றும் ஹிக்கடுவ வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளுக்கும் அறிவித்தனர். எனினும் இவர்களால் அதனைப் பிடித்து கரை சேர்க்க முடியாதிருந்த நிலையில், மீனவர்கள் மற்றும் பிரதேசவாசிகள் இணைந்து இதனைப் பிடித்து கரை சேர்த்தனர்.

இதனால் சுற்றுலா துறையினருக்கும் மீனவர்களுக்கும் பெரும் பாதிப்பு ஏற்பட்டிருந்தது. இதனைப் பிடித்து ஹிக்கடுவ வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர்.

# அருகி வரும் கிராமிய மட்பாண்ட கைத்தொழில்

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

பலாங்கொடை பனான கிராமத்தில் இடம்பெற்று வரும் பாரம்பரிய மட்பாண்டக் கைத்தொழிலில் ஈடுபட்டு வரும் தொழிலாளர்கள் தமது தொழிலை முன்னெடுத்துச் செல்வதில் பல்வேறு நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

பெரும் எண்ணிக்கையான குடும்பங்கள் இத்தொழிற்துறையில் ஈடுபட்டு வந்த போதிலும் தற்போது சுமார் 50 குடும்பங்கள் மட்டுமே இத்தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். எனினும் இத்தொழிலை முன்னெடுத்துச் செல்வதிலுள்ள கஷ்டங்கள் காரணமாக தொழிலாளர்கள் இத்தொழிலைக் கைவிட்டு வேறு தொழில்களை நாடிச் செல்வதாக முறையிடுகின்றனர்.

மூலப்பொருள் பற்றாக்குறை, நீர்வசதியின்மை, சந்தை வசதி நிதியுதவிகள் கிடைக்காமை ஊக்குவிப்பின்மை உட்பட ஏனைய பல குறைபாடுகள் கா ரணமாக தமக்கு இத்தொழிலை வெற்றிகரமாக மு ன்னெடுத்துச் செல்ல முடியாதுள்ளதாக இவர்கள் தெரிவிக்கின்றனர்.

# கடும் மழையினால் அக்குறணை நகர வீதிகள் நீரில் மூழ்கின

அக்குறணை குறூப் நிருபர்

கடந்த திங்கட்கிழமை (14) பெய்த கடும் மழையினால் அக்குறணை நகரம் ஒரு வார காலத்தில் இரண்டு முறை நீரில் மூழ்கியது. மலையகப் பிரதேசங்களுக்கு பெய்த கடும் மழை காரணமாக அக்குறணை ஊடாகப் பாயும் இரண்டு சிற்றாறுகள் பெருக்கெடுத்தன. அதனால் கண்டி மாத்தளை பிரதான வீதியில் அக்குறணை 6ம் கட்டை பிரதேசம் இவ்வாறு நீரில் மூழ்கியது.

இச் சிற்றாறுகள் அடிக்கடி பெருக்கடுப்பது தற்போது வழமையாகி விட்டது. இந்நிலைமை அடிக்கடி அக்குறணை நகரத்திற்கு பாரிய அச்சுறுத்தலை ஏற்படுத்தி வருகிறது.

இதன் மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கும் முகம்கொடுத்தும் வருகின்றனர்.

## சிறு விளம்பரம்

### வேலைவாய்ப்பு

**308 வெற்றிடங்கள் சந்தைப்படுத்தல்**

18 - 40 வயதிற்கிடைப்பட்ட சுப்பர் மார்க்கெட் அறிவுடைய விற்பனை உதவியாளர் ஆண்/பெண் மற்றும் சுப்பவைசர்கள் தேவை. கவர்ச்சிகரமான சம்பளம். நிவ் வீரசிரி சுப்பர், இதிகொல்ல, கம்பஹா. 0773544403. 069404

**311 வெற்றிடங்கள் தகவல் தொழில்நுட்பம்**

கம்பஹா இதிகொல்ல சுப்பர் மார்க்கெட் ஒன்றிற்கு 18 - 30 வயதிற்கு இடைப்பட்ட சா/ தர தோற்றியுள்ள க ணனி தரவு செயற்பாட்டாளர்கள் தேவை. (சேவைக்கு தேவையான பயிற்சி வழங்கப்படும்) நிவ் வீரசிரி சுப்பர், இதிகொல்ல, கம்பஹா. 0773544403. 069385

**318 வெற்றிடங்கள் டிரைவர்கள்**

அனுபவமுள்ள கனரக வாகன சாரதிகள் தேவை. 35 - 55 வயதிற்கிடைப்பட்டவர்கள் தூரப் பிரதேசங்கள் விரும்பத்தக்கது. உணவு, தங்குமிடம் வழங்கப்படும். நிவ் வீரசிரி சுப்பர், இதிகொல்ல, கம்பஹா. 0773544403. 069418

**325 தொழில்துறை பொது**

கம்பஹா இதிகொல்ல சுப்பர் மார்க்கெட் ஒன்றிற்கு 18 - 30 வயதிற்கிடைப்பட்ட அடிப்படை கணனி அறிவுடைய ஆண்/ பெண் காசாளர்கள் தேவை. கம்பஹாவுக்கு அருகில் வசிப்போர் விரும்பத்தக்கது. நிவ் வீரசிரி சுப்பர், இதிகொல்ல, கம்பஹா. 0773544403. 069421

Best way to fulfil your Future Dreams
Marriage Proposals
in the
Sunday Observer

## வாகன விற்பனை

| மூன்று சக்கர வாகனம் | மேக்/மாடல் | ஆண்டு | முற்றம் |
|---|---|---|---|
| AAM-6089 | பஜாஜ் | 2018 | ராகம - 02 |
| ABQ-0723 | பஜாஜ் | 2017 | குருநாகல |
| ABO-2598 | பஜாஜ் | 2016 | பாணடுரா |
| ABL-4977 | பஜாஜ் | 2015 | பாணடுரா |
| ABI-2060 | பஜாஜ் | 2015 | கண்டி |
| AAY-6037 | பஜாஜ் | 2015 | ராகம |
| ABI-5846 | பஜாஜ் | 2015 | ராகம |
| ABB-5459 | பஜாஜ் | 2015 | பாணடுரா |
| ABA-1513 | பஜாஜ் | 2015 | ராகம |
| ABD-6978 | பஜாஜ் | 2015 | ராகம |
| AAT-0980 | பஜாஜ் | 2014 | ராகம |
| AAJ-8905 | பஜாஜ் | 2013 | ராகம |
| AAH-9061 | பஜாஜ் | 2013 | ராகம |
| AAM-2404 | பஜாஜ் | 2013 | பாணடுரா |
| AAB-4758 | பஜாஜ் | 2012 | ராகம |
| YZ-3777 | பஜாஜ் | 2012 | ராகம |
| YY-9275 | பஜாஜ் | 2012 | அனுராதபுரம் |
| YX-8074 | பஜாஜ் | 2012 | ராகம |
| AAE-6834 | பஜாஜ் | 2012 | ராகம |
| YL-4948 | பஜாஜ் | 2011 | ராகம |
| YS-4607 | பஜாஜ் | 2011 | ராகம |
| YR-7585 | பஜாஜ் | 2011 | மாதரா |
| YN-8581 | டி.வி.எஸ் | 2011 | ராகம |
| YL-3674 | பஜாஜ் | 2011 | அம்பாரா |
| YM-5038 | பஜாஜ் | 2011 | ராகம |
| QX-1632 | பஜாஜ் | 2010 | அனுராதபுரம் |
| QU-3470 | பஜாஜ் | 2009 | அனுராதபுரம் |

| மோட்டர் வாகனம் | மேக்/மாடல் | ஆண்டு | முற்றம் |
|---|---|---|---|
| CBE-6069 | சுசுகி | 2017 | ராகம் |
| CAO-8902 | சுசுகி | 2014 | ராகம் |
| GB-9352 | பியூஜியோட் | 2000 | ராகம் |
| 64-9681 | டொயோட்டா | 1987 | திருகோணமலை |

| இரட்டை நோக்கம் | மேக்/மாடல் | ஆண்டு | முற்றம் |
|---|---|---|---|
| PY-0491 | டாடா | 2014 | குருநாகல |
| PF-7969 | டொயோட்டா | 2012 | கண்டி |
| PT-5574 | மஹிந்திரா | 2012 | அனுராதபுரம் |
| 254-1268 | மஸ்தா | 1995 | குருநாகல |
| 58-7537 | நிசான் | 1991 | குருநாகல |
| 56-1702 | டொயோட்டா | 1990 | மாதரா |
| 50SRI2460 | நிசான் | 1982 | நுவரெலியா |

மேற்கண்ட வாகனங்களை யார்டுகளிலும் சோதனை செய்யலாம் அது ஏல அடிப்படையில் இருக்கும்

ராகம 0113 288 893
கண்டி 0812 051 010
மாதரா 0414 935 734
அனுராதபுரம் 0772 385 714
பாணடுரா 0773 610 142
நுவரெலியா 0114 346 723

## கேள்விக்கான அழைப்பு

### 2023ஆம் ஆண்டிற்கான குப்பைகளை அகற்றுதல்

### பாணந்துறை பிரதேச சபை

பாணந்துறை பிரதேச சபையின் கெசெல்வத்த, வாத்துவ மற்றும் தந்திரிமுல்ல உப அலுவலகங்களினால் சேகரிக்கப்படும் பிரித்தொதுக்கப்பட்ட மற்றும் பிரித்தொதுக்கப்படாத குப்பைகளை அகற்றுதல் சார்பாக 2023ஆம் ஆண்டிற்கு உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்காக பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

குறித்த கேள்வி ஆவணங்கள் மற்றும் நிபந்தனைகளை 2022.11.16 முதல் 2022.11.29 வரை வார நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை மீளளிக்கப்படும் ரூ. 100,000.00 நிதி வைப்பு மற்றும் படிவக் கட்டணம் ரூ. 1000.00 ஐ செலுத்தி வாத்துவையில் அமைந்துள்ள தலைமையகத்தில் குறித்த படிவத்தைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

கேள்விப் பத்திரங்களில் மூலப்பிரதி மற்றும் நகல் பிரதியென வேறுவேறாக உறைகளில் இட்டு மூலப்பிரதி மற்றும் நகல் பிரதியென குறிப்பிட்டு அவற்றை ஒவ்வொரு உறையிலும் இட்டு இடது பக்க மேல் மூலையில் **"பாணந்துறை பிரதேச சபையின் குப்பைகளை அக்றுவதற்கான கேள்விப் பத்திரங்கள் கோரல் - 2023"** என்று குறிப்பிட்டு 2022.11.30 மு.ப. 10.00 இற்கு முன்பு **"தலைவர், பாணந்துறை பிரதேச சபை, தலைமையகம், காலி வீதி, வாத்துவ"** என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப முடிவதுடன், இல்லையெனில் அலுவலக நேரங்களில் கையோடு கொண்டு வந்து ஒப்படைப்பதாயின் வாத்துவ தலைமையகத்தில் உள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

கேள்விப் பத்திரங்கள் ஏற்கப்பட்டு முடிவடைந்தவுடன் அக்கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும். அதற்கு சமுகமளிப்பதற்கு விரும்பும் கேள்விதாரர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு அதற்காக சமுகமளிக்க முடிவதுடன், கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளல் அலல்து நிராகரிக்கும் முழுமையான உரிமை பாணந்துறை பிரதேச சபையின் பெறுகைக்குழுவிற்கு உரியது.

**டபிள்யூ. ஹேமந்த பெர்னாண்டோ**
**தலைவர்,**
**பாணந்துறை பிரதேச சபை,**
**வாத்துவ.**
**விசாரணைகள்: 0382294567, 038-2284767**
திகதி: 2022.11.14

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

### இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

### விமான சேவை எரிபொருள் கையாளல் மற்றும் Inro-Plane செயற்பாடுகளுக்கான தொழில்நுட்ப சேவைகளை வழங்குதல்

**B/60/2022**

1. சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் மற்றும் தரங்களின் பிரகாரம் விமான சேவை எரிபொருள் கையாளல் மற்றும் Inro-Plane செயற்பாடுகளுக்கான தொழில்நுட்ப சேவைகளை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் செயற்படுத்த உதவிகள் வழங்குதல் மற்றும் தொழில்நுட்ப சேவைகளை உள்ளடக்கிய விமான சேவை எரிபொருள் கையாளல் மற்றும் Inro-Plane செயற்பாடுகளுக்கான தொழில்நுட்ப சேவைகளை பெற்றுக்கொள்வதற்கு விமான எரிபொருள் வழங்குதல் கைத்தொழிலில் உள்ள உத்தரவாதமுள்ள அங்கத்தவர் அல்லது Joint Inspection Group (JIG) இணை அங்கத்தவர்களிடமிருந்து முத்தரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் அழைக்கின்றார்.

   இந்த தொழில்நுட்பச் சேவையின் நோக்கம் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றது.

   - செயற்பாட்டுச் சேவைகள்
   - உரிமச் (Licensed) சேவைகள்
   - பரீட்சித்தல் சேவைகள்
   - பயிற்சி சேவைகள்
   - HSSE முகாமைத்துவச் சேவைகள்

   ஆரம்பத்தில் இந்த ஒப்பந்தம் மூன்று வருட காலத்திற்கு 2023-01-01ஆம் திகதி முதல் செயற்படுத்தப்படும்.
2. இந்த விலைக்கோரல்கள் சர்வதேச போட்டி ரீதியிலான விலைக்கோரல் ஊடாக நடைமுறைப்படுத்தப்படும்.
3. ஒப்பந்தத்தை கையளிக்கப்பெறுவதற்கான தகுதியாக, சித்திகரமான விலைமனுதாரர் விமானசேவை எரிபொருள் Inro-Plane செயற்பாடுகளை வழங்குதல், களஞ்சியப்படுத்துதல், கையாளுதல் என்பவற்றில் நேரடியாக ஈடுபடுபவராகவும் மற்றும் எரிபொருள் வழங்குதல் கைத்தொழிலில் உள்ள உத்தரவாதமுள்ள அங்கத்தவர் அல்லது Joint Inspection Group (JIG) இணை அங்கத்தவராகவும் இருத்தல் வேண்டும்.
4. விலைமனு ஆவணங்களை மீளளிக்கப்படாத கட்டணமான 20,000.00 ரூபாவை (ரூ. 16,967.13+ 2.5% SSCL + 15% VAT ஒரு தொகுதிக்கு) செலுத்தியதன் பின் எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் செய்வதன் பேரில் கொழும்பு-09, இல. 609, டாக்டர் டெனிஸ்டர் டி சில்வா மாவத்தை, 1ஆம் தளம், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் முகாமையாளர் (பெறுகைகள் மற்றும் களஞ்சியசாலை) அலுவலகத்திலிருந்து 2022-12-06ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி மற்றும் பி.ப. 3.00 மணிக்கிடையில் பெற்றுக்கொள்ளலாம் அல்லது CPC இணையதளத்திலிருந்து தரவிறக்கம் செய்துகொள்ளலாம். உ-ம் http://ceypetco.gov.lk/public-tenders/. தரவிறக்கம் செய்து கொள்பவர்கள் ஆவணக் கட்டணத்தை இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் மக்கள் வங்கியில் (தலைமை அலுவலகம்) பேணப்படும் 004100110208633 எனும் கணக்கிலக்கத்திற்குச் செலுத்தலாம். தயவு செய்து வங்கிப் பற்றுச்சீட்டை மூலப் பிரதியை விலைமனுவுடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். வளமுள்ள விலைமனுதாரர்கள் https://eroc.dre.gov.lk/ எனும் இணையதளத்தின் ஊடாக 1987ஆம் ஆண்டின் 3ஆம் இலக்கச் சட்டத்தின் பிரகாரம் கம்பனிப் பதிவாளரிடம் பதிவு செய்துகொள்ளல் வேண்டும். என்பதுடன் PCA 3 சான்றிதழை அவர்களின் முன்மொழிவுகளுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
5. விலைமனுக்கள் 2022-12-08ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முடிவுறுத்தப்படும் என்பதுடன் பின்வரும் முகவரியிலுள்ள இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் (பெறுகைகள் மற்றும் களஞ்சியசாலை) முகாமையாளர் அலுவலகத்தில் தொழில்நுட்ப முன்மொழிவுகள் உடன் திறக்கப்படும்.
6. சகல முன்மொழிவுகளுடனும் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் இலங்கையில் செயற்படுவதற்கு உத்தரவாதம் அளிக்கப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டு வர்த்தக வங்கி அல்லது இலங்கையில் உரிமம்பெற்ற வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்ட 1,500,000.00 ரூபாவுக்கான விலைக்கோரல் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
7. மேலதிக தகவல்களை பெறுகைகள் மற்றும் களஞ்சியசாலை) முகாமையாளரிடமிருந்து பின்வரும் தொலைபேசி இலக்கங்களில் அல்லது மின்னஞ்சல் முகவரியில் நீங்கள் பெற்றுக்கொள்ளலாம்.

**பெறுகை மற்றும் களஞ்சியசாலை செயற்பாடுகள்,**
**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,**
**இல: 609, கலாநிதி டனிஸ்டர் டி சில்வா மாவத்தை,**
**கொழும்பு-09.**
**தொலைபேசி: 0094-11-5455335, தொலைநகல்: 0094-11-5455424**
**மின்னஞ்சல்: suppliers@ceypetco.gov.lk**

## பெறுகை அறிவித்தல்

### ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை

### உரிமை கோரப்படாத சடலங்கள், பிரசவ அறை மற்றும் சத்திரசிகிச்சை கூடத்திலிருந்து அகற்றப்படும் கழிவுப் பொருட்கள் போன்றவற்றை அடக்கம் செய்வதற்கான விலைமனுக் கோரல் 2023/ 2024

**Q 451/22**

2023/2024ஆம் ஆண்டிற்காக இந்த ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையில் உரிமை கோரப்படாத சடலங்கள், பிரசவ அறை மற்றும் சத்திரசிகிச்சை கூடத்திலிருந்து அகற்றப்பட்ட கழிவுப் பொருட்கள் போன்றவற்றை அடக்கம் செய்வதற்காக அவ்வேலைகளில் தகைமைபெற்றுள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

அதற்காக ரூபா 2,500.00 மீளளிக்கப்படாத தொகை மற்றும் ரூபா 5,000.00 மீளளிக்கப்படும் வைப்பிற்காக வைத்தியசாலையின் காசாளரிடம் காசு செலுத்தி அப்பற்றுச்சீட்டுடன் எழுத்து மூல வேண்டுதலை வழங்கல்கள் பிரிவிற்கு சமர்ப்பித்து மாதிரிப் பத்திரங்கள் மற்றும் நிபந்தனை கோவையை 06.12.2022 வரை முற்பகல் 9.00 முதல் பிற்பகல் 3.00 வரை வாரத்தின் வேலை நாட்களில் பெற்றுக்கொள்ளலாம். தேர்ந்தெடுக்கப்படும் ஒப்பந்தக்காரர் அச்செயற்பாட்டை நிறைவேற்றத் தவறின் மேற்படி ரூபா 5,000.00 மீளச் செலுத்தப்பட மாட்டாது.

விலைமனுக்களைச் சமர்ப்பிப்போரினால் அவ்வாறு பெற்றுக்கொள்ளப்படும், மாதிரிப் பத்திரங்களைப் பூர்த்தி செய்து முத்திரை பொறிக்கப்பட்ட உறையில் இட்டு பதிவுத் தபாலில் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பலாம் அல்லது அம்முகவரியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி 2022.12.08 முற்பகல் 10.00 ஆகும். உறையின் இடது பக்க மேல் மூலையில் 'உரிமை கோரப்படாத சடலங்கள், பிரசவ அறை மற்றும் சத்திரசிகிச்சை கூடங்களிலிருந்து அகற்றப்படும் கழிவுகள் போன்றவற்றை அடக்கம் செய்வதற்கான விலைமனுக் கோரல் 2023/2024' என்று குறிப்பிடுதல் வேண்டும்.

2022.12.08ம் தகிதி முற்பகல் 10.00 இற்கு கிடைக்கப்பெற்றள்ள சகல விலைமனுக்களும் திறக்கப்படுவதுடன் விண்ணப்பதாரிகளுக்கு மேற்படி வேலையில் சமுகமளிப்பதற்கு வாய்ப்பு உண்டு.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை,**
**தளபத்பிட்டிய,**
**நுகேகொட.**



## கேள்விகளிற்கான அழைப்பு (IFB)

### அரசாங்க தகவல் திணைக்களம்,

### சுத்திகரிப்புச் சேவைகளை வழங்குவதற்கான கேள்வி கோரல் – 2023

அரசாங்க தகவல் திணைக்களத்தில் சுத்திகரிப்புச் சேவைகளை மேற்கொள்வதற்காக அத்துறையில் தகைமையுள்ள கேள்விதாரர்களிடமிருந்து 2022.12.06 அன்று பி.ப. 2.00 வரை முத்திரையிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

02. இதற்கான ரூபா 1,000.00 இற்கான மீளளிக்கப்படாத வைப்புத் தொகையொன்றை அரசாங்க தகவல் திணைக்களத்தின் சிறாப்பருக்குச் செலுத்திப் பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டை பெறுகைப் பிரிவில் சமர்ப்பித்து, 2022.11.16 முதல் 2022.12.05 அன்று பி.ப. 3.00 வரை அலுவலக நேரங்களில் இதற்கான கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

03. சுத்திகரிப்புச் சேவைகளிற்கான வளாகத்தைப் பரிசீலிக்க வேண்டுமெனின், அரசாங்க தகவல் திணைக்களத்தின் பிரதிப்பணிப்பாளர் (நிருவாகம்) இடம் விசாரித்து கொள்ளலாம். (தொ.பே. இல. 011-2514266)

04. இதற்கான விலைமனு முன்னோடிக் கூட்டம் 2022.11.23 அன்று மு.ப. 10.00 இற்கு நடைபெறும்.

05. அலுவலக நேரங்களில் கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரிசீலனை செய்து கொள்ளலாம்.

06. முத்திரையிடப்பட்ட கேள்விகள் பதிவுத் தபாலில் இலக்கம் 163, கிருலப்பன மாவத்தை, பொல்ஹேன்கொட கொழும்பு-05, என்ற முகவரிக்கு அனுப்புதல் அல்லது அதே முகவரியிலுள்ள கணக்குப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியிற் சேர்த்தல் 2022.12.06 அன்று பி.ப. 2.00 இற்கு முன்னர் மேற்கொள்ளல் வேண்டும்.

07. கேள்விகளை அடக்கும் உறையின் இடது பக்க மேல் மூலையில் "சுத்திகரிப்புச் சேவைகளை வழங்குவதற்கான கேள்வி" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

**தினித் சின்தக கருணாரத்ன,**
**அரசாங்க தகவல் திணைக்களத்தின்,**
**பணிப்பாளர் நாயகம்,**
**அரசாங்க தகவல் திணைக்களம்.**

**தொலைபேசி இல : 071-8859889**
**தொலைநகல் இல : 011-2514286**

## பெறுகை அறிவித்தல்

### ஊவா மாகாண கல்வித் திணைக்களம் - பதுளை

### கல்வி அபிவிருத்தி மையம் (ஹாலிஎல) இற்கு சமைத்த உணவை வழங்குதல்

ஊவா மாகாண கல்வித் திணைக்களத்தின் பெறுகைக் குழுவின் தலைவரான என்னால் கல்வி அபிவிருத்தி மையம் (ஹாலிஎல) இற்கான சமைத்த உணவை வழங்கும் முகமாக உள்ளூர் உணவு வழங்குநர்களிடமிருந்து கேள்விகள் இத்தால் கோரப்படுகின்றன.

**அட்டவணை**

| தொ/ இல | விபரம் | மீளளிக்கப்படாத மாதிரிப் பத்திர கட்டணம் (ரூ. சதம்) | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புக் கட்டணம் (ரூ. சதம்) |
|---|---|---|---|
| 01 | கல்வி அபிவிருத்திமையம் (ஹாலிஎல) இற்கான சமைத்த உணவை வழங்குதல் | 2000.00 | 25,000.00 |

02. கேள்விகளை சமர்ப்பிப்பதற்கு தேவையான மாதிரிப் பத்திரங்களை மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்படும் கட்டணங்களை அலுவலகத்திற்கு காசாக செலுத்திய பின்பு (சகல கட்டணங்களும் ஏற்கப்படுவது இலங்கையில் செல்லுபடியாகும் தொகையில் மட்டுமே) விநியோகிக்கப்படும் பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்து பெற்றுக்கொள்ளலாம்.

03. கேள்விகள் விநியோகித்தல், ஒப்படைத்தல் மற்றும் திறத்தல் கீழ்க்காணும் தினம் மற்றும் நேரங்களில் ஊவா மாகாண கல்வித் திணைக்களத்தில் நடைபெறும்.

| | | |
|---|---|---|
| கேள்விகள் விநியோகித்தல் | : | 2022.11.16 முதல் 2022.12.09 பி.ப. 2.00 வரை |
| கேள்விகள் ஏற்றுக் கொள்ளல் | : | 2022.12.12 பி.ப. 2.00 வரை |
| கேள்விகள் திறத்தல் | : | 2022.12.12ம் திகதி கேள்விகள் ஏற்றுக் கொள்ளல் முடிவடைந்தவுடன் |

04. இது பற்றிய மேலதிக விபரங்களை இவ் அலுவலகததிற்கு வருகை தந்து அல்லது தொலைபேசி இல. 055-2223184 மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

**டி.எம். ரத்னாயக்க**
**ஊவா மாகாண கல்விப் பணிப்பாளர்**
**2022.11.16ம் திகதி**
**ஊவா மாகாண கல்வித் திணைக்களத்தில்.**

நீர் வழங்கல் அமைச்சு

# தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை

## விலைக்கோரல் அறிவித்தல் - 2022.11.16

பின்வரும் வேலைகள்/ வழங்கல்கலுக்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடமிருந்து தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை சார்பில் பெறுகைக் குழு தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| இல. | ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் ஒப்பந்த இலக்கம் | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) | தேவையான விலை மனு பிணை | தேவையான தகைமை | VAT உட்பட மதிப்பீட்டுச் செலவு (ரூபா) | தொடர்புகொள்ள வேண்டிய நபர் மற்றும் ஆவணங்கள் வழங்கப்படும் இடம் | இறுதித் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|---|---|
| | **சிவில் கேள்விகள்** | | | | | | |
| 01 | பாணந்துறை - ஹொரண பிராந்தியத்தில் புதிய இணைப்புகளை வழங்குவதற்கு அகழ்தல், குழாய்களைப் பதித்தல் மற்றும் மீள்நிரப்புதல்<br>**ஒப்பந்த இல: W-S/P&C/C/NS(03)/P-H/O&M/2022/60** | 12,500/-+ VAT ** | ரூபா 217,500/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடைத் துறையில் C5 அல்லது C6 தரத்தில் CIDA பதிவு மற்றும் பொது ஒப்பந்தப் பதிவு சகிதம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 21.7 மில்லியன் | பி.ஒ.நி. (மேற்கு-தெற்கு) அலுவலகம், தேநீவவச, இல. 07, அங்குலான ஸ்டேஷன் வீதி, மொரட்டுவ.<br>Tel: 011-2224888<br>Fax : 011-2637945/ 011-2637946 / 0112637947 | 01/12/2022 மு.ப. 10.00 |
| 02 | கிரிந்திஓய நீர் வழங்கல் திட்டத்திலுள்ள நீர்த்தாங்கி கோபுரங்களின் புதுப்பித்தல் வேலைகள் மற்றும் நீர்க்கசிவு திருத்தவேலைகள்<br>**ஒப்பந்த இல: RSC(S)/P&C/C/RENIVATION/ KIRINDIOYA/NRW/2022-106** | 4,000/-+ VAT | ரூபா 59,000/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடைத் துறையில் C8 அல்லது C7 தரத்தில் CIDA பதிவு | 3.96 மில்லியன் | பிஓநி (தெற்கு) அலுவலகம், தேநீவவச, 395, குமாரதுங்க மாவத்தை, பம்புரன, மாத்தறை<br>Tele:041-2222105, Fax 041-2221329 | 30/11/2022 பி.ப. 2.00 |
| 03 | திக்வெல்ல நீர் வழங்கல் திட்டம் - திக்வெல்ல பொறுப்பதிகாரி அலுவலக கூரை திருத்தவேலைகள்<br>**ஒப்பந்த இல: RSC(S)/P&C/C/ROOF/REPAIR/DICKWELLA/RH/2022-146** | 4,000/-+ VAT | ரூபா 32,000/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடைத் துறையில் C7 அல்லது C8 தரத்தில் CIDA பதிவு | 2.13 மில்லியன் | பிஓநி (தெற்கு) அலுவலகம், தேநீவவச, 395, குமாரதுங்க மாவத்தை, பம்புரன, மாத்தறை<br>Tele:041-2222105, Fax 041-2221329 | 30/11/2022 பி.ப. 2.00 |
| 04 | Renovation Work of Chemical Building at Main Water Treatment Plant, Ambathale.<br>**ஒப்பந்த இல : RPC/WP/W/AMB/CIVIL/RH/2022/45** | 4,000/-+ VAT | ரூபா 34,000/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடைத் துறையில் C7 அல்லது C8 தரத்தில் CIDA பதிவு | 3.4 மில்லியன் | பிஓநி (மேற்கு – உற்பத்தி), தேநீவவச, உடுமுல்ல வீதி, முல்லேரியா புதிய நகரம்.<br>Tele:0112418532, Fax:0112549199 | 06/12/2022 பி.ப. 2.00 |
| 05 | உடு யட்டிநுவர நீர் வழங்கல் திட்டம் - கலுகமுவ வலயத்திலுள்ள நீர்க்கசிவு திருத்தவேலைகளுக்கான வாடகை சேவைகள்<br>**ஒப்பந்த இல : RSC-C/CS/O&M/UDU/YATI/2022/173** | 6,000/-+ VAT ** | ரூபா 65,300/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடைத் துறையில் C6 அல்லது C7 தரத்தில் CIDA பதிவு மற்றும் பொது ஒப்பந்தப் பதிவு சகிதம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 6.53 மில்லியன் | பி.ஒ.நி. (மத்திய), கெட்டம்பே, பேராதனை.<br>Tele : 081-2386068<br>Fax: 081-2388027<br>2022-11-23ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கெட்டம்பே முகாமையாளர் (மத்திய / தெற்கு) அலுவலகத்தில் கேள்வி முன்னோடிக் கூட்டம் இடம்பெறும். | 30/11/2022 பி.ப. 2.00 |
